# சரத்சந்திரர் நூல்கள்

அ. கி. ஜயராமன் பெயர்ப்பு.

## இதுவரை வெளிவந்தவை

| | |
|---|---|
| ஹேமாங்கினி | 0-12-0 |
| அநுராதா | 0-12-0 |
| உஷா | 1- 8-0 |
| ஞானதா | 1- 8-0 |



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் ஔவை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

# நாலு கதைகள்

டி. கே. ஷண்முகம்
ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்,
தமிழியல்துறை.

148

டி. கே. ஷண்முகம்

# நாலு கதைகள்

சரத் சந்திரர்

481 — A/243

மொழி பெயர்த்தவர்:

அ. கி. ஜயராமன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

ஜோதி நிலயம்

திருவல்லிக்கேணி :: சென்னை.

ஜோதி மலர் 25
முதற் பதிப்பு 1946
உரிமை பதிவு செய்யப்பெற்றது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 592
நன்கொடை எண்: 592

விலை ரூ. 1—8—0

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

ஜோதி பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

காமராசர் பல்கலை
அவ்வை
தி.க. சண்முகம்

# மண வாழ்க்கை

**ஸா**கரபுரத்தில் அன்று ஏக தடபுடல். மேளச் சத்தம் ஊரை இரண்டாக்கியது. இரண்டு வாரமாக இங்கே நடக்கும் ஆர்ப்பாட்டங்களை இந்தக் கிராமத்தார் மாத்திரம் அல்ல, அக்கம் பக்கத்தில் பத்துமைல் தூரத்தி லுள்ள கிராம வாசிகளும் அறிந்தனர். இந்த மாதிரியான தடபுடலை இதற்கு முன் இந்தக் கிராமம் கண்டதே இல்லை. விதவிதமான வாத்தியங்களைக்கேட்டு எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள், ஆனால் இந்த வாத்தியச் சப்தத் தினால் கிராமத்திலுள்ள மாடு கன்றுகளுக்குத்தான் அதிகக் கஷ்டமாகிவிட்டது. அவைகளுக்கு ஏற்பட்ட மனோவேதனையை அளவிட முடியாது. இவ்வளவு ஆடம்பரங்களுக்கும் காரணம் ஒரு பதினான்கு வயதுப் பையனின் கல்யாணம்தான். ஸாகரபுரத்தின் ஜமீன்தார் ஸ்ரீமான் ஹரதேவமித்ரரின் ஒரே மகனின் விவாக விழாவை ஒட்டித்தான் இந்தக் கொண்டாட்டங்களெல்லாம் நடை பெற்றன. ஹரதேவமித்ரர் பெரிய மனிதர். கிட்டத்தட்ட இருபதினாயிரம், முப்பதினாயிரம் ரூபாய் வருஷவருமானம் அவருக்கு உண்டு. மகனின் பெயர் சத்யேந்திரமித்ரர். ஹேயர் துரை பள்ளிக்கூடத்தில் பிரவேச வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். சத்யேந்திரனின் தாய் தன் மகனுக் குச் சிறு வயதிலேயே கல்யாணம் பண்ணி மருமகளின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினாள். அதனால்தான் அவனுக்கு இந்தச் சிறுவயதிலேயே விவ நடந்தது.

பர்த்வான் ஜில்லாவில் தில்ஜான்பூர் ஜமீன்தார் காமாக்யா சரணசௌதரியின் இளைய மகள் ஸரளாவைச் சத்யேந்திர னுக்கு மணம் முடித்து வைத்தார்கள்.

பெண் அழகி. சத்யேந்திரனுக்கு மிகுந்த சந்தோஷம். பத்து வயதுள்ள மருமகளின் அழகிய முகத்தைக் கண்டு சத்யேந்திரனின் தாய் மிகுந்த ஆனந்தம் அடைந்தாள். கல்யாணம் நடந்த மறுவருஷமே ஹரதேவபாபு மருமகளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். மருமகளை தாய் வீட்டில் விட்டுவைக்க அவர் மனைவி விரும்பவில்லை. 'கல்யாணம் நடந்த பிறகு பெண்களைத் தாய் வீட்டில் விட்டுவைக்கக் கூடாது,' என்று அடிக்கடி அவள் சொல்வது வழக்கம். அவள் அபிப்பிராயம் என்னவோ சரிதான்!

சத்யேந்திரனின் படிப்புக்காக ஹரதேவர் தம் மனைவியுடன் கல்கத்தாவிலேயே வசிக்கலானார். ஸரளாவும் கல்கத்தா வந்துசேர்ந்தாள். சிறுவயதில் கல்யாணம் நடந்தது. ஆகையால் ஸரளா ஹரதேவருடன் சகஜமாகப்பேசுவாள். சத்யேந்திரன் இருக்கும்போது கூடத் தன் மாமியுடன் பேசுவாள். இதனால் மாமிக்குச் சந்தோஷம் ஏற்படுமே தவிர வருத்தம் ஏற்படுவதில்லை.

சில தினங்களுக்குப் பிறகு காமாக்யாபாபு ஸரளாவைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போனார். இரண்டொரு மாதங்களாயின. சத்யேந்திரன் பொறுமை இழந்தான். கோபித்துக்கொண்டு, "புத்தகத்தில் ராமபாணம் வந்து விட்டது. மைக்கூடு காய்ந்துவிட்டது. இவைகளையெல்லாம் கவனிப்பவர் ஒருவருமில்லை" என்று ஆரம்பித்தான்.

தாய், விஷயத்தை உணர்ந்தாள். ஹரதேவர் செவி ...க்கும் விஷயம் எட்டியது. அவர் சிரித்துக்கொண்டே ...களை அழைத்துவர ஆளை அனுப்பினார். அவனிடம், ...க வீட்டில் பெரிய உபத்திரவமாக இருக்கிறது.

நாட்டுப் பெண் வராமல் சாந்தமாகாதுபோல் தோன்று கிறது. ஆகையால் நாட்டுப் பெண்ணை உடனே அனுப்பி வைக்கவும்!" என்று கடிதமும் அனுப்பினார்.

ஸரளா மறுபடியும் வந்துசேர்ந்தாள். சத்யேந்திரனுக் குச் செய்யவேண்டிய சாதாரணப் பணிவிடைகளை அவள் தான் செய்வதுவழக்கம். புஸ்தகங்களை அடுக்கி ஒழுங்காக வைப்பாள். காலேஜுக்கு அணிந்துசெல்லும் ஆடைகளைச் சரியாக எடுத்துவைப்பாள். சத்யேந்திரன் காலேஜுக்குப் போகும் அவசரத்தில் கைப்பித்தானை மாற்றிப் போட்டுக் கொண்டுவிடுவான். ஒருகாலில் 'கான்வாஸ்' பூட்ஸும், மறுகாலில் 'வார்னிஷ்' பூட்ஸும் அணிந்துகொண்டு விடுவான். சாப்பிட நேரமாகிவிடும், காலேஜ் மணி அடித்துவிடும். அழகிய 'கோட்டின்'மேல் துப்பட்டாவைப் போட்டுக்கொண்டு விடுவான். இந்தத் தவறுகளெல்லாம் நேராமல் ஸரளா பார்த்துக்கொள்வாள். ஸரளா இல்லா விட்டால் இந்தக் கூத்துக்களெல்லாம் நடைபெறும். ஸரளாவைத் தவிர வேறு யாராலும் இவைகளைச் செய்ய வும் முடிவதில்லை. முடிந்தாலும் சத்யேந்திரன் ஒப்புக் கொள்ளமாட்டான். ஆகையால் ஸரளாவேதான் செய் தாகவேண்டும்.

## 2

சுசீலா ஸரளாவின் தமக்கை. அவள் மகனுக்கு அன் னப்பிராசனம் நடந்தது. ஆகையால் தம் பேரனின் அன் னப்பிராசன சந்தர்ப்பத்தையொட்டிக் காமாக்யாபாபு ஸர ளாவை அழைக்கக் கல்கத்தா வந்தார்.

ஸரளாவின் தமக்கை, ஸரளாவும் அவள் கணவனும் அவசியம் வரவேண்டுமென்று வற்புறுத்திக் கடிதம் அனுப்பி இருந்தாள். தவிர இரண்டு மூன்று வருஷங்க ளாக ஸரளா தில்ஜான்பூருக்கு வரவில்லை. சத்யேந்திர

னும் வர ஒப்புக்கொண்டான். காமாக்யாபாபு சந்தோஷத்துடன் பெண்ணையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு ஊருக்குச் சென்றார்.

வெகு நாட்களுக்குப் பிறகு பெண்ணையும் மாப்பிள்ளையையும் கண்ட ஸரளாவின் தாய் மிகுந்த சந்தோஷமடைந்தாள். சுசீலா வந்து இருவருடனும் ஏதேதோ பேசி அவர்களைக் களிக்க வைத்தாள்.

சுபகாரியம் யாதொரு தடங்கலுமின்றி நிறைவேறியது. சத்யேந்திரன் வீடுசெல்ல விரும்பினான். அப்பொழுது மாமியார் தடுத்து, "வெகு நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள், இன்னும் சில நாட்கள் இருந்து விட்டுச் செல்லுங்கள்!" என்றாள்.

ஸரளாவும் விடவில்லை. ஆகையால் பின்னும் ஐந்தாறு நாட்கள் தங்கவேண்டி ஏற்பட்டது. ஐந்தாறு நாட்களும் கழிந்தன. ஆயினும் ஸரளாவுக்குப் புறப்பட இஷ்டம் இல்லை. அவன் கிளம்பாமல் முடியாது. படிப்புக் கெட்டுவிடும். பரீக்ஷை நெருங்கிவிட்டது. ஆகையால் சத்யேந்திரன் கிளம்பினான். புறப்படும்போது. "என்னை மறுபடியும் எப்பொழுது அழைத்துக்கொண்டு போவீர்கள்?" என்று கேட்டாள் ஸரளா.

"எப்பொழுது வருகிறாயோ, அப்பொழுது!"

"அப்படியானால் இன்னும் பத்துப்பதினைந்து தினங்கள் கழித்து அழைத்துச் செல்லுங்கள்!"

சத்யேந்திரன் சந்தோஷமடைந்தான். அவள் இவ்வளவு சீக்கிரம் வருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

பிறகு ஸரளா கண்ணீர் வழியும் கண்களுடன் கணவனுக்கு விடைகொடுத்து, "இங்கே பாருங்கள், என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இரவு அதிக நேரம் படிக்காதீர்கள். உடம்புக்கு வந்துவிடும்!" என்றாள்.

பிறகு இரவு பத்து மணிக்குமேல் படிப்பதில்லை என்று அவனிடம் சத்தியம் வாங்கிக்கொண்டாள். மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு சத்யேந்திரன் கல்கத்தா போய்ச் சேர்ந்தான்.

சத்யேந்திரன் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு உட்காருவான். உடனே மனப்போராட்டம் ஆரம்பமாகிவிடும். சத்யேந்திரன் கணக்குப் பண்ணிப் பார்த்தான். நாள் முழுவதும் இருபத்தாறு வரிகள்தான் படித்திருந்தான், துக்கத்துடன் 'இப்படிப் படித்தால் எப்படிப் பரீக்ஷை தேற முடியும்' என்று எண்ணினான். படிப்படியாகத் துக்கம் கோபமாக மாறியது. இவைகளெல்லாம் அந்தப் பொல்லாத ஸரளாவின் குற்றம்தான் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அவன் வந்து ஐந்து தினங்களாயின. இதுவரையில் ஒன்றுமே படிக்கவில்லை. முன்பு படிக்கும்போது 'அவள் தொந்தரவு செய்கிறாள். பத்து மணிக்குமேல் படிக்கக்கூடாது என்று விளக்கைஅணைத்து விடுகிறாள். அவளை எங்கேயாவது அனுப்பிவிட்டு நிம்மதியாகப் படிப்போம்' என்று எண்ணினான். ஆனால் இன்று அதற்கு நேர் மாறாக நினைக்கிறான். "நாளைக்கே அவளை அழைத்துக்கொண்டு வருகிறேன். இல்லாவிட்டால் பரீக்ஷையில் 'பெயில்' ஆகிவிட மாட்டேனா?"

எப்படியாவது இருக்கட்டும், ஆனால் அவளை இங்கே எப்படி அழைத்துக்கொண்டு வருவது? எப்படி இதை வெளியே சொல்லுவது? வெட்கமாக இருக்கிறதே. அவளிடம் எப்படி இவ்வளவு காதல் ஏற்பட்டது? இரண்டு தினங்கள்——.

இதற்குள் வேலைக்காரன் ஒரு தந்தியைக் கொண்டு வந்து கொடுத்தான். சத்யேந்திரன் பிரமித்துப் போய்விட்டான். யோசிக்கக்கூட நேரமில்லை. எங்கிருந்து வந்தது தந்தி? கவரை உடைத்ததும் சத்யேந்திரனின் உள்ளம்

நடுங்கியது. உள்ளே இருந்த விஷயத்தைப் படித்ததும் அவன் தலை சுற்றியது. ஸரளாவுக்கு உடம்பு சௌக்கிய மில்லை!

அன்றே ஹரதேவ பாபு சத்யேந்திரனை அழைத்துக் கொண்டு தில்ஜான்பூர் போய்ச் சேர்ந்தார்.

வீட்டு வாசலிலேயே காமாக்யாபாபுவைச் சந்தித்தார். ஹரதேவர் உரக்க, "குழந்தைக்கு உடம்பு எப்படி இருக் கிறது?" என்று கேட்டார்.

பிறகு உள்ளே சென்று பார்த்தார். ஸரளாவுக்கு வயிற்றுப்போக்குக் கண்டிருந்தது. ஒரேநாளில் அவளை அடையாளம் கண்டுகொள்ளக்கூட முடியவில்லை கண் கள் குழிந்துவிட்டன. தாமரை மலர்போன்ற அவள்முகம் கறுத்துவிட்டது. அநுபவஸ்தரான ஹரதேவபாபு நிலைமை மோச மென்பதை அறிந்துகொண்டார். கண்களைத் துடைத்துக்கொண்டே, "அம்மா, ஸரளா! குழந்தாய்!" என்று கூப்பிட்டார்.

ஸரளா கண் திறந்து பார்த்தாள். நினைவு தப்பவில்லை.

"உடம்பு எப்படி அம்மா இருக்கிறது?"

ஸரளா சிரித்துக்கொண்டே, "நன்ருகத்தானே இருக் கிறது!" என்ருள்.

எல்லோரும் சென்ற பிறகு சத்யேந்திரன் போய் அவ ளருகே அமர்ந்தான். ஆழ்ந்த துக்கத்திஞல் அவன் வாயி லிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. பிறகு மிகுந்த சிரமத்துடன் அடைபட்ட குரலில், "ஸரளா!" என்று கூப்பிட்டான். குரலில் இனிமை இல்லை. அதஞல் என்ன? அது பழகிய குரல், அதே அன்பின் அழைப்பு, ஸரளா! இதில் என்ன தவறு இருக்கப்போகிறது? ஸரளா கண் திறந்து பார்த்தாள். ஹரதேவபாபுவைக் கண்டதுமே சத்யேந்திரன் வந்திருப்பான் என்று அனுமானம் செய்து கொண்டாள். எப்பொழுதுமே கணவனைக் கிண்டல்

செய்வதில் அவளுக்கு வெகுபிரியம். அவள் சிரித்துக் கொண்டே, "என்ன கொண்டுவந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அவள் குரல் படுத்துவிட்டது. சத்யேந்திரன் கண்ணீரை அடக்கிக்கொண் டிருந்தான். ஸரளாவின் நிலைமையைக்கண்டு அதன்மடை திறந்துவிட்டது.

அப்பொழுது அழக்கூடாது என்பது சத்யேந்திரனுக்குத்தெரியும். ஆனால் கண்கள் இதை அறிகின்றனவா என்ன? கண்ணீர் முத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாய் உருள ஆரம்பித்தன. அவைகள் ஸரளாவின் உடலில் சென்று குவிந்தன. இதற்குமுன் அவைகளுக்கு இந்த மாதிரிச் சந்தர்ப்பம் எங்கே கிடைத்தது? ஒருபொழுதும் கிடைத்ததில்லை. சத்யேந்திரனுக்காகவோ, ஸரளாவுக்காகவோ அவைகள் இந்தச்சந்தர்ப்பத்தை இழந்துவிடுமா?

கணவன் அழுவதை அதுவரையில் ஸரளா கண்டதில்லை. அவளும் அழுதுவிட்டாள். வெகுநேரம் கழித்துக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "சேச்சே, ஏன் அழுகிறீர்கள்? புருஷர்கள் அழலாமா?" என்றாள்.

"இதென்ன? இது சரிதானா ஸரளா? நன்றாகச் சொன்னாய். உள்ளத்தின் ஜ்வாலையால் அவை உலர்ந்து கல்லாகட்டும். ஆனால் ஒரு சொட்டுக்கூட வெளியே சிந்தவேண்டாம். பெண்களுக்குத்தான் கண்ணீர் உரியது. புருஷர்களுக்குக் கிடையாது. உள்ளத்தின் வேதனையால் குமுறுகிறேன், அழவில்லை. அழுதால் பெண்ணாகி விடுவேனா, ஸரளா? எனது இந்த நிலைமைக்குக் காரணம் நீதானே ஸரளா!"

ஸரளா கணவனின் கையைத் தன் கையில் எடுத்து அதை வருடிக்கொண்டே அழுதுவிட்டாள். "அடுத்த ஜன்மம் உண்டு என்பதை நம்புகிறீர்களா?" என்று கேட்டாள்.

சத்யேந்திரன் அழுதுகொண்டே "இதுவரையில் நம்பினேனோ என்னமோ தெரியாது. ஆனால் இன்று முதல் நம்புகிறேன்" என்றான்.

ஸரளாவின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது.

மருந்து சாப்பிடும் நேரம் நெருங்கியதைக்கண்டு காமாக்யாபாபு, ஹரதேவபாபு, டாக்டர், ஆகிய மூவரும் அறைக்குள் பிரவேசித்தனர். டாக்டர் நாடியைப் பார்த்து விட்டு, "நம்பிக்கை கூற முடியாது. ஈச்வர கிருபை!" என்றார்.

ஈச்வர கிருபையினால் மறுநாள் காலை ஏழு மணிக்கே ஸரளா உயிர் நீத்தாள். மாலையிலேயே சத்யேந்திரனை அழைத்துக்கொண்டு ஹரதேவர் கல்கத்தா திரும்பினார்.

## 3

"நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று. ராஜ சயனத்தில் படுத்து இந்திரபோகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று யாரோ அதை மண்ணோடு மண்ணாக்கி விட்டார்கள். நடு இரவில் எழுந்து உட்கார்ந்து விடுகிறேன். தூக்கம் வருவதில்லை. என் வாழ்க்கைத்துணைவி இல்லாமல் காலியாகக் கிடக்கும் கட்டிலில் படுத்திருக்கிறேன். நான் அழுவதா, சிரிப்பதா? இன்ப வெள்ளத்தில் திளைத்து ஆனந்தத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். திடீரென்று யாரோ முன்பின் தெரியாதவர்களின் வலையில் சிக்கிக்கொண்டேன். இனி நான் அதில் திளைக்கமுடியாது. எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. வாழ்க்கையின் கேந்திரத்தையே யாரோ தகர்த்துக்கொண்டு போய்விட்டதுபோல் இருக்கிறது. ஒன்றும் புரியவில்லை. என்ன நடந்துவிட்டது?"

ஆழ்ந்த இரவில் சத்யேந்திரன் ஜன்னலருகே உட்கார்ந்துகொண்டு ஸாகரபுரத்தின் அந்தகாரத்தைப் பார்த்தபடி இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தான். மரம் செடி கொடிகளும் அசையாமல் சத்யேந்திரனுடன் உறவு கொண்டாடின.

உஸ் உஸ் என்று காற்று வீசிச்சென்றது. ஏதாவது சொல்லிவிட்டுச் சென்றதா? ஏன் சொல்லவில்லை? "என்ன நடந்துவிட்டது?" என்ற அந்த ஒரே வார்த்தையைத்தான் கூறின. சாதகபக்ஷி இப்பொழுது 'காதல் காதல்' என்று கத்துவதில்லை. அதற்கு எதிரிடையாக "இறந்தாள். இறந்தாள்!" என்று கதறியது. கூண்டுக் கிளி சரியாகப் பேசுவதில்லை. பேசினாலும் "மனைவி இறந்தாள்" என்றே கூறியது. உஸ் உஸ் என்று வீசிய காற்றும் 'இல்லை, இல்லை, அவள் இல்லை' என்றே கூறியது.

"சத்யேந்திரா, உடம்பு எப்படி இருக்கிறது? தலையை ரொம்ப வலிக்கிறதா? அதுதான் வெகுநாள் ஆகிவிட்டதே. சற்று தூங்கு அப்பா? எப்பொழுது பார்த்தாலும் இந்த ஜன்னலருகேயே உட்கார்ந்திருக்கிறாயே!" என்றார் தந்தை.

சத்யேந்திரன் இருளில் மின்னிய நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண் டிருந்தான். அவைகளுள் மிகவும் மங்கி இருந்த ஒன்றை வெகு கவனமாகப் பார்க்கலானான்.

கண்ணை மூடத் தைரியமில்லை, எங்கே அது மறைந்து விடுமோ என்று பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவன் தூங்கிவிடுவான். காலையில் கண் விழித்ததும் அதைப் பார்க்க முயற்சிப்பான். பிரகாசம் அவனுக்குப் பிடிப்பதில்லை. நிலவு அவனுக்கு சந்தோஷம் அளிப்பதில்லை. அந்த மங்கிய சிறு நட்சத்திரம் சந்திரன் ஒளியில் தெரியுமா?

சத்யேந்திரன், எம். ஏ.யில் 'பெயில்' ஆகிவிட்டான். 'பாஸ்' செய்யவேண்டும் என்ற ஆசையும் இல்லை; உற்

சாகமும் இல்லை. 'பாஸ்' செய்தால்தான் என்ன, அந்த நட்சத்திரம் அருகே வந்துவிடப்போகிறதா?

ஹரதேவபாபு குடும்பத்துடன் ஊருக்குத் திரும்பினர். "தான் வீட்டில் இருந்து படித்தே பரீக்ஷைக்குப் போகமுடியும். கல்கத்தாவின் சந்தடியில் இருந்தால் நன்ருகப் படிக்க முடியாது" என்ருன் சத்யேந்திரன். சத்யேந்திரன் முற்றிலும் புது மனிதனுக மாறிவிட்டான். அவனைப் பார்த்தால் வெகு நாட்களாகச் சாப்பிடாதவனைப் போலும், நோய் வாய்ப் பட்டவனைப்போலும் தோன்றியது.

பகலில் சத்யேந்திரன் தன் அறையை மூடிக் கொண்டு படங்களைத் தட்டிச் சுத்தம்செய்வான், புஸ்தகங்களை அடுக்கிவைப்பான். சும்மாவாவது ஆர்மோனியத்தை எடுத்துப் பழுதுபார்ப்பான். ஸரளாவின் புஸ்தகங்களை எடுத்துச் சுத்தமாகத் தட்டி அடுக்கிவைப்பான். நல்ல காகிதமும் கவரும் எடுத்து ஸரளாவுக்குக் கடிதம் எழுதுவான். ஆனால் எந்த விலாசம் எழுதுவானே தெரியாது! எழுதித் தன் பெட்டியில் வைத்துக்கொள்வான்.

சத்யேந்திர நாதா! நீ ஒருவன் மாத்திரமல்ல. அநேகர் இம்மாதிரியே வாலிப வயதில் அதிர்ஷ்டத்தை இழக்கிருர்கள். எல்லோரும் உன்னைப் போலவா பைத்தியக்காரர்கள் ஆகிருர்கள்? ஜாக்கிரதை. சத்யேந்திரா! எந்த விஷயத்திற்கும் ஓர் எல்லை உண்டு. புனிதமான காதலுக்கும் ஒரு வரம்பு உண்டு. வரம்பைத் தாண்டினுல் கஷ்டத்தை அடைவாய். உலகில் ஒருவரை ஒருவர் பிடித்து வைக்க முடியாது.

சத்யேந்திரனின் தாய் மிகுந்த புத்திசாலி. அவள் ஒரு நாள் தன் கணவனிடம், "நம் சத்யேந்திரன் எப்படி ஆகி விட்டான் பார்த்தீர்களா?" என்ருள்.

"பார்த்துக்கொண்டு தான் இருக்கிறேன். ஆனுல் என்ன செய்யலாம்?"

" இன்னொரு கல்யாணம் செய்து வையுங்கள். நல்ல பெண்ணாக வந்தால் மீண்டும் சிரித்துப்பேசிச் சந்தோஷ மாக இருப்பான்!"

அன்று சத்யேந்திரன் சாப்பிட உட்கார்ந்தபோது அவன் தாய், "என் பேச்சைக் கேட்பாயா, சத்யேந்திரா!" என்ருள்.

"என்ன அம்மா?"

"நீ மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ள வேண் டும்!"

சத்யேந்திரன் சிரித்துவிட்டு, "இதுதானே? இந்த வய தில் இதெல்லாம் எதற்கு?" என்ருன்.

தாய்க்கு முன்னமேயே கண்ணீர்த் தேங்கிக்கிடந்தது. இந்த வார்த்தையைக் கேட்டதும் அது பெருகலாயிற்று. அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "அப்பா! இருபது, இருபத்தொரு வயது ஒரு வயதோடு சேர்க் கையா? ஆனுல் ஸரளாவை நினைத்துக்கொண்டால், இவைகளை எல்லாம் வாய்விட்டுச் சொல்லக்கூட மனம் வராது. இருந்தாலும் இனி என்னுல் தனியாக இருக்க முடியாது!" என்ருள்.

மறுநாள் காலையில் ஹரதேவ பாபு சத்யேந்திரனை அழைத்து இதே வார்த்தையைக் கூறினுர். அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மகன் மௌனமாக இருந்ததைக் கண்டு, மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று ஹர தேவர் நிச்சயம் செய்துகொண்டார்.

சத்யேந்திரன் தன் அறைக்குப் போய் ஸரளாவின் படத்தின்முன் நின்று, "கேட்டாயா ஸரளா! நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்!" என்ருன். படத்தினுல் பேச முடியவில்லை. முடிந்திருந்தால் 'நல்லது!' என்று சொல்லி இருக்கும். வேறு என்ன சொல்ல இருக் கிறது?

## 4

இந்தத் தடவை சத்யேந்திரனுக்குக் கல்கத்தாவில் விவாகம் நடந்தது. 'சுபதிருஷ்டி'யின்போது சத்யேந்திரன் பெண்ணின் முகத்தைப் பார்த்தான். அழகான முகம், அழகாக இருந்தால் என்ன ? தலைக்கு ஒரு 'பாரம்' வந்து சேர்ந்தது என்று எண்ணினான்.

கல்யாணத்திற்குப் பிறகு இரண்டு வருஷங்கள் நளினி தாய் வீட்டிலேயே இருந்தாள். மூன்றாவது வருஷம் புக்ககம் வந்து சேர்ந்தாள். மாமி புதுநாட்டுப் பெண்ணின் சந்திரபிம்பம் போன்ற முகத்தைப் பார்த்து ஸரளாவை மறக்க முயற்சித்தாள். மீண்டும் குடும்பத்தைச் சீர்செய்ய லானாள். இரவு சத்யேந்திரனும் நளினியும் சேர்ந்து படுத்தாலும் ஒருவரோடு ஒருவர் பேசுவதில்லை.

"ஏன் இவ்வளவு அசட்டை ?" என்று எண்ணுவாள் நளினி.

"இவள் யார், எங்கே இருக்கவேண்டியவள், என் ஸரளாவின் இடத்தில் தூங்குகிறாளே ?" என்று எண்ணுவான் சத்யேந்திரன்.

ஒரு நாள் இரவு சத்யேந்திரன் தூக்கம் கலைந்து எழுந்தான். பார்த்தால் படுக்கையில் ஒருவரையும் காணவில்லை. நன்றாகக் கவனித்துப் பார்த்தான். ஜன்னலருகே யாரோ உட்கார்ந்திருந்தார்கள். ஜன்னல் திறந்திருந்தது. அதன் வழியாக நிலவொளி வீசியது. அதன் வெளிச்சத்தில் நளினியின் முகத்தில் ஒரு பகுதி சத்யேந்திரனுக்குத் தென்பட்டது. தூக்கக் கலக்கத்திலும் நிலா வெளிச்சத்திலும் அவள் முகம் அவன் கண்களுக்கு மிகுந்த அழகாகத் தோன்றியது. அவன் காது கொடுத்துக் கேட்டான்.

நளினி அழுதுகொண்டிருந்தாள்.

"நளினி !" என்று கூப்பிட்டான் சத்யேந்திரன்.

நளினி திடுக்கிட்டாள். கணவன் கூப்பிடுகிறுன். வேறு யாராவதாக இருந்தால் என்ன செய்வார்களோ, தெரியாது. ஆனல் நளினி மெள்ள அருகே சென்று அமர்ந்தாள்.

"ஏன் அழுகிருய்? ஏன் அழுகிருய்?" என்று கேட்டான் சத்யேந்திரன். அழுகை இரண்டு மடங்காகப் பெருகியது. அவளுடைய பதினுறு வயது வாழ்க்கையில் இன்று கூறிய இந்த வார்த்தைகள்தான் கணவனின் முதல் அன்பு வார்த்தைகள்.

வெகு நேரத்திற்குப் பிறகு அழுகையை அடக்கிக்கொண்டு கண்களைத் துடைத்துக்கொண்டே மெதுவாக, "உங்களுக்கு ஏன் என்னைக் கண்டால் பிடிக்கவில்லை?" என்ருள் நளினி.

சத்யேந்திரனுக்கும் அழுகை வந்துவிட்டது. அதை அடக்கிக்கொண்டு, "உன்னைக் கண்டால் பிடிக்கவில்லையா? யார் சொன்ஞர்கள்? ஆமாம், நான் உன்னைப் பற்றி ஒன்றும் விசாரிப்பதில்லை, பேசுவதில்லை, இது வாஸ்தவம்!" என்ருன்.

நளினி பதில் சொல்லாமல் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

சத்யேந்திரன் சற்றுச் சும்மா இருந்துவிட்டு மீண்டும் பேசலாஞன். "இதை ஒருவரிடமும் சொல்லக்கூடாதென்று எண்ணினேன். சொல்லாமல் இருப்பதில் லாபம் ஒன்றும் இல்லை. உன்னிடம் எதையும் ஒளிக்கப்போவதில்லை. எல்லாவற்றையும் திறந்து கூறினேஞல், நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்பதை நீ அறிந்துகொள்வாய். நான் இப்பொழுதும் ஸரளாவை—என் முதல் மனைவியை—மறக்க முடியவில்லை. மறந்துவிடுவேன் என்ற நம்பிக்கையும் இல்லை. இந்த அபாக்கியவானுக்கு நீ வாழ்க்கைப் பட்டிருக்கிருய். நான் உன்னைச் சுகப்

படுத்தமுடியும் என்ற நம்பிக்கையும் ஏற்படவில்லை. நான் என் இஷ்டத்தின்மேல் உன்னை மணக்கவில்லை. என் விருப்பப்படி உன்னைக் காதலிக்கவும் முடியாது!" என்ருன்.

ஆழ்ந்த இரவில் இருவரும் வெகு நேரம் வரையில் இம்மாதிரியே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நளினி அழுதுகொண்டிருக்கிருள் என்பதை சத்யேந்திரன் அறிந்துகொண்டான். அவனும் அழுதுவிட்டானே என்னவோ? ஒவ்வொன்ருக ஸரளாவின் விஷயங்கள் ஞாபகத்திற்கு வரலாயின. மெள்ள அவள் முகம் அவன் இதயத்தில் உருவகமாயிற்று. அதே பழைய "அழைக்கவந்திருக்கிருயா?" என்ற விஷயமே ஞாபகத்திற்கு வந்தது. அழைக்காமலே கண்ணீர் வந்துவிட்டது. பிறகு இரு கன்னங்களின் வழியாகவும் அது கீழே வழிந்தது.

சத்யேந்திரன் கண்களைத் துடைத்துக்கொண்டு மெள்ள நளினியின் இருகரங்களையும் தன் கையில் எடுத்துக்கொண்டு, அழாதே நளினி! என் வசம் ஒன்றும் இல்லை. இரவு பகலாக நான் மனத்திற்குள் எப்படிப்பட்ட வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள். மனத்தில் பெரும் துக்கம் அடைந்துகிடக்கிறது. இந்தத் துக்கம் எப்பொழுதாவது என் மனத்தைவிட்டு அகலுமானுல்தான் நான் உன்னைக் காதலிக்க முடியும். அப்பொழுது உன்னைக் கவனித்துக்கொள்வேன்!" என்ருன்.

இந்த வருத்தம் தேங்கிய அன்பு வார்த்தைகளின் மதிப்பை யார் அறிவார்கள்? நளினி புத்திசாலி. அவள் கணவனின் துக்கத்தை அறிந்துகொண்டாள். கணவன் தன்னைக் காதலிக்கவில்லை என்பதை அவன் வாய்மூலமாகவே கேட்டாள். ஆயினும் அவள் கோபிக்கவில்லை. கர்வம் அடையவில்லை.

பேதைப் பெண்! பதினுறு வயதில் கோபித்துக்கொள்ளாவிட்டால், கர்வப்படாவிட்டால், பிறகு எப்பொழுது கிட்டும்? ஆனுல் கோபிப்பதும், கர்வமடைவதும் முக்கியமா, கணவன் முக்கியமா என்று எண்ணினுள் நளினி.

அன்று முதல் தன் கணவனின் துக்கத்தை எப்படி நிவர்த்திப்பது என்ற ஒரே கவலை அவளைச் சூழ்ந்துகொண்டது. என்ன செய்தால் தன் கணவன் முதல் மனைவியை மறப்பான் என்பதை அவள் சிந்திக்கவே இல்லை. துக்கத்தை யாராவது பகிர்ந்துகொண்டால் கஷ்டத்தைக் கேட்டு மனம் இறங்கினுல் துன்ப வார்த்தைகளை மனம்வைத்துக் கேட்டால் உலகத்தில் அவர்களைவிட பந்து ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

இதன் பிறகு சத்யேந்திரன் அடிக்கடி தன் பழைய விஷயங்களை நளினிக்குச் சொல்வான். இந்த ஒரே விஷயத்தைப் பேசிப் பேசி அவர்கள் பல இரவைக் கழித்தார்கள். சத்யேந்திரன்தான் பேசினுன் என்பதல்ல, நளினியும் ஆவலுடன் கணவனின் பழைய விருத்தாந்தங்களைக் கேட்க விரும்பினுள்.

## 5

இரண்டு வருஷங்கள் கழிந்தன. நளினிக்கு இப்பொழுது முன்போலக் கஷ்டமில்லை. கணவன் அவளை அனுதரவு செய்வதில்லை. கணவனின் அன்பை அவள் பலவந்தமாகப் பெற்றுவிட்டாள். பலவந்தமாகப் பெறத் தெரிந்தவர்களுக்கு அதைக் காப்பாற்றி வைத்துக்கொள்ளத்தானு தெரியாது? அவளுக்கு இப்பொழுது யாதொரு கஷ்டமும் இல்லை. சத்யேந்திரன் இப்பொழுது பபனுவில் டிப்டி மாஜிஸ்டிரேட்டாக இருக்கிருன். மனைவியின் சேவையினுலும் அன்பினுலும் அவனிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. கச்சேரி வேலை முடிந்ததும் அவன்

நளினியுடன் அமர்ந்து ஏதாவது வம்பு பேசிக்கொண்டிருப்பான். கிண்டல் செய்வான். பாட்டுப் பாடச்சொல்லிக் கேட்டு இன்பமுறுவான். ஒரு வார்த்தையில் சொல்லப்போனல் சத்யேந்திரன் மனிதனுகிவிட்டான். முதலில் பிடிக்காத வஸ்துவே அவனுக்கு வெகு பிரியமானதாக ஆகிவிட்டது. மனிதரின் குணமே இப்படிதான். நீ சாந்தியுடன் இருக்கிருய்-சாந்தியைத் தேடுகிருய். நானும் சாந்தியுடன் நாட்களைக் கழிக்கிறேன். ஆயினும் எங்கிருந்தோ அமைதியின்மை வந்துவிடுகிறது.

தப்பி ஓடுவதைப் பிடிக்க முயல்வதே மனித சுபாவம். ஆனல் தப்பிய மீன் சிலாக்கியமாகிவிடுமா? சத்யேந்திரனும் மனிதன்தானே. மனித சுபாவம் எங்கே போய்விடும்? இவ்வளவு அன்பும் சேவையும் கிடைத்துச் சாந்தியுடன் இருக்கும்போதும், அவன் உள்ளத்தில் சிற்சில சமயம் மின்னலைப்போல் குழப்பம் ஏற்படும். ஒரு கணத்தில் மின்வெட்டைப்போல் ஏற்படும் குழப்பத்தைச் சமாளிக்க நளினி பெரும் முயற்சியும் சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். சிற்சில சமயம் தன்னல் இனிமேல் சமாளிக்க முடியாது. இவ்வளவு நாள் நாம் கவனத்துடன் செய்த முயற்சி வீணுகிவிடும் என்றுகூடத் தோன்றும். நளினியிடம் சிறு குறையைக் கண்டால்கூட, ஸரளாவாக இருந்தால் இவ்வாறு நேர்ந்திருக்காது என்று எண்ணுவான் சத்யேந்திரன். ஏற்படுமோ ஏற்படாதோ என்பதைக் கடவுள்தான் அறிவார். ஏற்படாமலும் இருக்கலாம். இதைவிடப் பன்மடங்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனல் அதைப்பற்றி என்ன? அந்த மீன்தான் தப்பிவிட்டதே! சத்யேந்திரனல் இன்னும் ஸரளாவை மறக்க முடியவில்லை. கச்சேரியிலிருந்து வரும்போது அவன் கண்முன் நளினி தென்படாவிட்டால் சட்டென்று 'அவள் எங்கே, இவள் எங்கே?' என்று எண்ணுவான்.

நளினி புத்திசாலி, அவள் எப்பொழுதும் கணவனுடனேயே இருப்பாள். காரணம், அவன் இன்னும் ஸரளாவை மறக்கவில்லை என்பது அவளுக்குத் தெரியும். ஒரேயடியாய் மறந்துவிடவேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கு இல்லை. ஆனால், ஆமாம், வீணாய் அவளை நினைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறாரே என்று அவள் எப்பொழுதும் அருகிலேயே இருக்க முயற்சித்தாள். அவளை மறக்க வேண்டாம்; ஆனால் தன்னை அவன் நிராதரவு செய்யவில்லை. இதுவே நளினிக்குப் போதுமானது.

கோபிகாந்தராய் பபனாவில் ஒரு பிரசித்த வக்கீல். கல்கத்தாவில் அவர் வீடு நளினியின் வீட்டுக்கு அருகே இருந்தது. நளினி அவரைச் சித்தப்பா என்றும், அவர் மனைவியைச் சித்தி என்றும் அழைப்பது வழக்கம். ராயின் மனைவி அடிக்கடி இவர்கள் வீட்டுக்கு வருவது உண்டு. கோபி பாபுவும் அடிக்கடி வருவார். கிராமத்து உறவென்று சத்யேந்திரனும் மிகுந்த மதிப்பு வைத்திருந்தான். சத்யேந்திரன் அதிகத் தொலைவில் இருந்தும் இருவர் வீட்டுக்கும் நெருங்கிய பழக்கம் இருந்தது.

நளினியும் அடிக்கடி சித்தி வீட்டுக்குச் சென்று வருவாள். காரணம், ஒன்று சித்தப்பா வீடு, இரண்டாவது அவர் மகள் ஹேமா இவளுக்குத் தோழி. சிறு வயது முதல் பழக்கம்.

சத்யேந்திரன் கச்சேரிக்குச் சென்றுவிட்டான். வேலை ஒன்றும் இல்லாததால் நளினி சித்திரம்போட உட்கார்ந்தாள். அதே சமயம் தடதடவென்ற சப்தத்துடன் ஒரு வண்டி வந்து டிப்டி மாஜிஸ்டிரேட்டின் வீட்டு வாசலில் நின்றது.

யார் வந்தார்கள்? மேற்கொண்டு யோசிக்க முடியவில்லை; மிகுந்த கோலாகலத்துடன் ஹேமாங்கினி வந்து நின்றாள். ஹேமாங்கினி நேரே வந்து நளினியின் தலை

மயிரைப் பிடித்துக்கொண்டு, "எழுதியது போதும். எழுந் திரு. எங்கள் வீட்டுக்கு வா, என் மதனி வந்திருக்கிருள் !" என்ருள்.

"மதனியா, ஏன் கூடவே அழைத்துக்கொண்டு வர வில்லே ?"

"அதெப்படி முடியும்? புதிதாக வந்திருக்கிருள். திடீரென்று உன் வீட்டிற்கு எப்படி வருவாள் ?"

"பின்னே நான் மாத்திரம் வருவேனு ?"

ஹேமா சிரித்துக்கொண்டே, "நீ வந்தே ஆக வேண்டும். உன்னே இழுத்துக் கொண்டு போகப் போகிறேன் !" என்ருள். தலேமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்வதானுல் நளினி என்ன, யாராக இருந் தாலும் போய்த்தானே ஆகவேண்டும் ? நளினி செல்ல வேண்டியதாயிற்று.

போவதற்குப் பல தடைகள் இருந்தன நளினிக்கு. ஏனென்ருல் ஹேமாவின் வீட்டுக்குச் சென்ருல் திரும்பி வரத் தாமதமாகும். இரண்டொருநாள் நளினி ஹேமா வின் வீட்டிலிருந்து திரும்பி வருவதற்குள் சத்யேந்திரன் ஆபீஸிலிருந்து வந்துவிட்டான். அந்த மாதிரியான நிலேமையில் சத்யேந்திரனுக்கு மிகுந்த சங்கடமாகப் போய்விட்டது. அவன் ஏதாவது நினேக்கிருனே இல்லேயோ, நளினிக்கு மிகுந்த வெட்கமாகப் போய் விட்டது, ஏனென்ருல் கச்சேரியிலிருந்து திரும்பி வந்ததும் தன் கையினுல் விசிறினுல்தான் அவனுடைய அலுப்புத் தீரும். இது அவளுக்குத் தெரியும். தெய்வ சங்கற்பம் ; பெருத்த முயற்சிக்குப் பின்பும்கூட அன்றும் ஏழு மணிக்குமுன் நளினியால் வீடு திரும்ப முடியவில்லே. வீட்டுக்கு வந்து பார்த்தாள். சத்யேந்திரன் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். அதுவரையில் ஒன்றும் சாப்பிடவில்லே. அவனுக்குச் சாதம் போடும் பொறுப்பை

நளினி தானே ஏற்றுக் கொண்டிருந்தாள். அருகே வந்ததும் சத்யேந்திரன் சிரித்தான். ஆனால் அந்தச் சிரிப்பு நளினிக்குச் சகஜமாக இல்லை. அவள் மனத்திற்குள் பயந்தாள். ஆசனத்தை எடுத்துப்போட்டுப் பரிமாற ஆயத்தம் செய்தாள். ஆனால் சத்யேந்திரன் ஒன்றையும் தொடவே இல்லை. "கொஞ்சமும் பசி இல்லை!'' என்று சொல்லிவிட்டான். பல தடவை வேண்டிக்கொண்ட பிறகும் அவன் ஒன்றும் சாப்பிடவில்லை. அவன் ஏன் இப்படிக் கோபித்துக்கொண்டிருக்கிறான் என்பதை நளினி அறிந்துகொண்டாள்.

## 6

அன்று ஹேமாங்கினி தன் புக்ககம் செல்கின்றாள். அவளை அழைத்துப்போக அவள் கணவன் உபேந்திரபாபு வந்திருந்தார். நளினி பல தினங்களாக ஹேமாவைச் சந்திக்கவில்லை. ஆகையால் ஹேமா மிகுந்த துக்கத்துடன் அவளை வரும்படி கடிதம் எழுதி இருந்தாள்.

கணவன் உத்தரவில்லாமல் எங்கும் செல்வதில்லை என்று நளினி சபதம் செய்துகொண்டிருந்தாள். இந்தப் பிரதிக்ஞையைக் கடைப்பிடிப்பதானால் அவளுடைய ஆருயிர்த் தோழியைச் சந்திக்க முடியாது. நளினிக்குப் பெருத்த சங்கடமாகிவிட்டது. மூன்றுமணி வண்டிக்குப் போவதாக ஹேமா எழுதி இருந்தாள். நளினி எப்படிக் கணவனிடம் உத்தரவு பெற முடியும்? வெகுநேரம் சிந்தித்துவிட்டு, புறப்படுவதென்று நிச்சயம் செய்தாள். நளினி போகும்போது சரியாக மூன்று மணிக்கு ராய்பாபு வீட்டிற்கு வண்டி அனுப்பும்படி வேலைக்காரியிடம் சொல்லிவிட்டுச் சென்றாள். வண்டியும் அனுப்பப் பட்டது. ஆனால் ஹேமா மூன்றுமணி வண்டிக்குப்

போகவில்லை. ஆகையால் அவள் நளினியையும் விட வில்லை. மிகுந்த பிடிவாதம் செய்தும் ஹேமாவின் பிடி யினின்றும் அவளால் தப்பித்துவர முடியவில்லை. ஹேமா அன்று ஊருக்குச் செல்லுகிறாள். பிறகு எப்பொழுது சந்திப்பு ஏற்படுமோ? ஒன்றும் நிச்சயமில்லை. சுலபமாக எப்படி விட்டுவிடுவாள்?

வீட்டுக்குச் செல்லத் தாமதம் ஏற்பட்டால் கணவன் கோபிப்பான், என்று சொல்ல நளினிக்கு வெட்கமாக இருந்தது. இந்த வார்த்தையை யார்தான் சகஜமாகச் சொல்ல விரும்புவார்கள்? இந்தமாதிரியான தாழ்மையை யாராவது ஏற்றுக்கொள்வார்களா? அதுவும் இந்த வயதில். கடைசியில் அதையும் சொன்னாள். ஆனால் ஹேமா நம்பவில்லை. அவள் சிரித்துக்கொண்டே "என்னை முட்டாள் என்று எண்ணிக்கொண்டாயா? கோபதாப மெல்லாம் எனக்குத் தெரியும். உபேந்திரபாபுவுக்கும் கோபித்துக்கொள்ளத் தெரியும்!" என்றாள்.

நளினியின் வார்த்தையை ஹேமா விளையாட்டாக எடுத்துக்கொண்டாள். ஆனால் நளினிக்குக் கஷ்டமாகி விட்டது. எல்லோருடைய கணவன்மார்களும் ஒரே மாதிரியாகவா இருக்கிறார்கள்? எல்லோரும் உபேந்திர பாபுவைப் போலவா இருப்பார்கள்?

நளினி வீடு திரும்பும்போது இரவு மணி பத்தாகி விட்டது. வீட்டுக்குச் சென்றபிறகு, பாபு வெளியே படுத்துத் தூங்குவதாகக் கேள்விப்பட்டாள்.

மாதங்கினி நளினியின் தாய்வீட்டு வேலைக்காரி. நளினி யிடம் மிகுந்த பிரியம் கொண்டவள். ஆகையால், அவள் நளினியைக் கடிந்துகொண்டாள். சத்யேந்திரன் கோபித் துக்கொண்டு வெளியே படுத்திருக்கிறான் என்பது வீட்டில் அவள் ஒருத்திக்குத்தான் தெரியும்.

ஆழ்ந்த இரவில் படுக்கையில் படுத்தபடி கண்ணை மூடிக்கொண்டு தன் பழைய நினைவுகளை மீண்டும் மனத்தில் உருவகப்படுத்தலானான் சத்யேந்திரன். வெகு வெகு நாட்களுக்குமுன் மறைந்த அந்த மலர்ந்த கமலம் போன்ற முகம் அவனுக்கு நினைவு வந்தது. ஸரளாவின் அன்பின்முன் நளினியின் அன்பு கடலின்முன் சிறு குட்டை நீரைப்போல் அவன் மனத்திற்குத் தோன்றியது. அப்பொழுது மெள்ளக் கதவைத் திறந்துகொண்டு நளினி அந்த அறைக்குள் வந்தாள். சத்யேந்திரன் தலைநிமிர்ந்து பார்த்தான். நளினி அவன் காலடியில் வந்து அமர்ந்தாள். சத்யேந்திரன் கண்களை மூடிக்கொண்டான். இம் மாதிரியே வெகுநேரம் கழிந்தது. இதைக் கண்டு சத்யேந்திரன் கோபம் கொண்டான். அவன் புரண்டு படுத்தபடி புருஷன் என்ற முறையில் வெளிப்படையாக, "ஏது நீ இங்கே வந்தது?" என்றான்.

நளினி அழுதாள். ஒன்றும் பேசவில்லை. அழுவதைக் கண்டு டிப்டி துரை இன்னும் அதிகக் கோபம் அடைந்தார். "இரவு நெடுநேரமாகிவிட்டது போ, உள்ளே போய்ப் படுத்துக் கொள்" என்றான்.

நளினி அழுதுகொண்டிருந்தாள். கண்களைத் துடைத்துக்கொண்டு, "நீங்களும் வாருங்கள்!" என்றாள்.

சத்யேந்திரன் தலையை அசைத்து, "எனக்குத் தூக்கம் வருகிறது. என்னால் எழுந்திருக்க முடியாது!" என்றான்.

அழுதால் சத்யேந்திரனுக்குக் கோபம் வரும். நளினி கண்களைத் துடைத்துக்கொண்டு அவன் பாதங்களைத் தொட்டு, "இந்தத் தடவை மாத்திரம் என்னை மன்னித்து விடுங்கள். இங்கே உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும். உள்ளே வாருங்கள்!" என்றாள்.

இனி உள்ளே செல்வதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டிருந்தான் சத்யேந்திரன். அவன், "இரவு

காமராசர் ... நூலகம்

இந்த நேரத்திற்குப் பிறகு கஷ்டத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. நீபோய்த் தூங்கு. நானும் தூங்குகிறேன்!" என்ருன்.

நளினிக்குச் சத்யேந்திரனின் குணம் தெரியும். அவள் தன் அறைக்குச்சென்று இரவு பூராவையும் அழுதபடியே கழித்தாள். ஹேமாங்கினி எங்கே சென்ருள்! ஒருமுறை வந்து பார்த்துவிட்டுப் போகக்கூடாதா? கோபதாபம் எல்லாம் அவளுக்குத் தெரியுமே! அவள்வந்து இந்தச் சண்டையைச் சமாதானம் செய்யமாட்டாளா? என்று எண்ணியது அவள் மனம்.

மறுநாளும் சத்யேந்திரன் உள்ளே வரவில்லை. நளினியைச் சந்திக்கவும் இல்லை. நளினி மாதங்கினியின் மூலம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினுள். சத்யேந்திரன் அதைப் படிக்காமலே கிழித்து எறிந்துவிட்டு, "இனிமேல் இந்த மாதிரிக் கடிதங்களை இங்கே எடுத்து வராதே!" என்று சொல்லி யனுப்பினுன்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் நளினியின் அண்ணன் நரேந்திரபாபு பபனுவுக்கு வந்தான். திடீரென்று அண்ணனைக்கண்டு நளினிக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அதைவிட ஆச்சரியமும் ஏற்பட்டது.

"அண்ணு, ஏது இப்படி?"

நரேந்திரபாபு சிரித்துக் கொண்டே, "வீட்டுக்குச் செல்ல நீ ஏன் இப்படி உபத்திரம் செய்கிருய் நளினி?" என்ருன்.

உபத்திரவமா! இந்த வார்த்தையின் அர்த்தத்தை நளினி உடனே அறிந்துகொண்டாள். அவளும் சிரித்துக் கொண்டே, "உங்களை யெல்லாம் பார்த்து வெகு நாட்களாகின்றன அல்லவா?" என்ருள்.

# 7

கணவன் பாதங்களில் சிரம்வைத்து வணங்கி விடை பெற்றுத் தன் அண்ணனுடன் நளினி ஊருக்குச் சென்ருள். அன்று இரவு பூராவும் சத்யேந்திரனுல் தூங்கவே முடியவில்லை. அவன் இரவு முழுவதும் யோசிக்கலானுன். வெகுநேரம் வரையில் "இன்னமும் சமயம் இருக்கிறது. இப்பொழுதுகூட வண்டியைத் திருப்பி நளினியை அழைத்துக்கொண்டு வந்துவிடலாம். இதைச் செய்தே ஆகவேண்டும்" என்று எண்ணினுன். ஆனுல் அவனுடைய சுயமரியாதையின் காரணமாக நளினியைத் திருப்பி அழைத்துவர அவனுல் முடியவில்லை.

நளினி போகும்போது மாதங்கினியும் கூடச் சென்ருள். அவளுக்குத்தான் தெரியும் இந்தப் பிரயாணத்தின் காரணம். வீட்டில் யாரிடமும் இதைச் சொல்ல வேண்டாமென்று நளினி அவளைக் கண்டித்திருந்தாள். இதை வெளியிட்டால் கணவனுக்கு அவச்சொல் ஏற்படும். நல்லதோ கெட்டதோ தன் கணவனை ஏன் பிறர் குறைகூற வேண்டும் என்று எண்ணினுள் நளினி.

பிறந்தவீடு சென்று நளினி தாய் தந்தையருக்கு நமஸ்காரம் செய்தாள். சிறிய தம்பியை மடியில் எடுத்துக் கொண்டு கொஞ்சினுள். ஆனுல், அவளால் சிரிக்க முடியவில்லை.

"ஒருநாள் பிரயாணத்திலேயே என் பெண் நளினி சோர்ந்துவிட்டாள்" என்ருள் தாய். ஆனுல் நளினியின் சோர்ந்த முகம் மீண்டும் மலரவே இல்லை.

சிறிய காரணத்தின் மூலமாய்க்கூட உலகில் பெரும் துன்பங்கள் ஏற்படுவதைக் காண்கிருேம். சூர்ப்பனகையின் சிறு மனச்சஞ்சலம்தான் சொர்ணமயமான இலங்கை அழியக் காரணமாக இருந்தது. ராஜா ஹரிச்சந்திரன் சிறு

காரணத்திற்காகத்தான் மகத்தான துன்பத்தை அனுபவித்தான். உலகில் இம்மாதிரி உதாரணங்களுக்குக் குறைவே இல்லை. இங்கும் ஒரு சாதாரண அபிமானத்தின் காரணமாகத்தான் பெரும் ஆபத்து வந்திருக்கிறது. சத்யேந்திரநாதன்மேல் என்ன குறைகூற முடியும்?

நளினி ஒருபோதும் கர்வம் அடைந்ததில்லை. கணவனின் கஷ்டத்தை எண்ணி அவள் பேசாமல் சகித்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவளால் நெடுகச் சகிக்க முடியவில்லை. இந்தச் சிறு காரணத்திற்காகக் கணவன் அவளைக் கைவிட்டுவிட முடியுமா? இதைவிட நாம் இறந்து விடுவதேமேல் அல்லவா! என்று எண்ணினாள்.

ஆழ்ந்த அபிமானத்தின் காரணமாய் நளினி மெலியலானாள். அங்கே சத்யேந்திரனின் அகங்காரமும் சிதறியது. ஒரு நிமிஷம் மனைவியைப் பிரிந்திருக்க முடியாதவனின் பொய் அகம்பாவம் எத்தனை நாட்களுக்கு நிலைத்திருக்க முடியும்? அவன் அகம்பாவம் கொடும் கஷ்டத்திற்குக் காரணமாயிற்று. சத்யேந்திரன் பிரதிதினமும் எதிர்பார்க்கலானான். இன்று நளினியிடமிருந்து கடிதம் வரும். 'என்னைவந்து அழைத்துச் செல்லுங்கள்' என்று எழுதுவாள். 'நான் போய் அழைத்து வருவேன். இனி அவளிடம் அநுசிதமாக நடந்துகொள்ளவே மாட்டேன்' என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் விதியை யார் தடுக்க முடியும்? நடக்க வேண்டியதுதான் நடக்கும். நானும் நீங்களும் என்ன, கேவலம், துச்சமான ஜீவன்கள். இன்று, நாளை என்று ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன. அகங்காரத்தின் காரணமாக ஒருவரும் கடிதம் எழுதவில்லை. சத்யேந்திரன் ஆத்திரப்பட்டான். அடக்கத்தைக் கைக்கொள்ளவில்லை. ஆறு மாதங்கள் கழிந்தன. சத்யேந்திரனால் சகிக்க முடியவில்லை. மறைந்த அகங்காரம் மீண்டும் கிளைத்தது. அத்துடன் கோபமும்

சேர்ந்தது. நன்மை, தீமை என்ற பகுத்தறிவுடன் தன் குறையைச் சத்யேந்திரன் சீர்தூக்கிப் பார்க்கவில்லை. இவ்வளவு அகம்பாவம் உள்ளவளிடம் சரியானபடி வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று எண்ணினான். இருவரும் தங்கள் பிழையை உணரவில்லை. பாதியளவு ஒன்றுபட்ட இதயங்கள் மீண்டும் பிரிய லாயின.

சத்யேந்திரா! உன்மீது குற்றமில்லை என்றால் அவள் மீதும் குற்றம் கூறமுடியாது. இருவரும் தவறு செய்திருக் கிறீர்கள். தவறை உணர்ந்து பச்சாத்தாபமடையும் தன்மை யாரிடம் அதிகம் இருக்கிறதென்பதைக் கடவுள் தான் அறிவார். எனக்கும் தெரியாது; உங்களுக்கும் தெரியாது. எந்த அபிலாஷையைப் பூர்த்திசெய்ய இதை யெல்லாம் செய்கிறீர்கள் என்பதே தெரியவில்லை.

பற்று அழிவதில்லை; அழிய விரும்புவதும் இல்லை. பற்று என்பது என்ன என்பதும் நன்றாகவிளங்குவதில்லை. இளகிய உள்ளம் திருப்தியற்ற ஒரு விருப்பத்தினால் எப்பொழுதும் அலண்டுகொண்டே இருக்கிறது. என்ன நடக்கிறது? ஏன் இம்மாதிரி ஒன்றும் புரியாமல் லட்சிய மற்ற திசையில் செல்கிறோம் என்பதை நிர்ணயம் செய்யவே முடியவில்லை.

நடப்பது நடந்தே தீரும். விருப்பமிருந்தால்—மனத் துடன் இடைவிடாது போராடினால்—பிறகு குற்றங் களினின்றும் உனக்கு விடுதலை கொடுப்பேன். கொடுப் பதென்ன?

## 8

எவ்வளவு அழகான நாட்டுப்பெண் வந்திருக்கிருள். ஆயினும் தன் மகனுக்குப் பிடிக்கவில்லை. இந்த விஷயம் சத்யேந்திரனின் தாய்க்கு மிகுந்த துக்கத்தை அளித்தது. சொர்ண விக்கிரகம் போன்ற பெண் வீட்டுக்கு வந்தும் அவளால் குடும்பம் நடத்த முடியவில்லை என்பதை எண்ணி அவள் மனம் வருந்தியது. தாயின் முயற்சிகளால் மகனின் மனம் திரும்பவில்லை. இனி வேறு வழி என்ன? மகனுக்கே பிடிக்காவிட்டால், நாட்டுப் பெண்ணை எப்படி அழைக்க முடியும்? மகன் ஆதரவு செய்தால்தானே நாட்டுப் பெண்ணுக்கு ஆதரவு ஏற்படும்? நான் இதில் என்ன செய்ய இருக்கிறது? அவனேபார்த்துக் கல்யாணம் செய்துகொள்வதாலுல் நான் தடுக்கவா போகிறேன்? இம்மாதிரியெல்லாம் கூறி மறுபடியும் விவாக ஏற்பாடு களைத் தாய் செய்யலானுள்.

ஹரதேவ பாபு இறந்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. அதை நினைத்ததும் அவள் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. பிறகு நளினியின் ஞாபகம் வந்தது. கண்ணீரின் வேகம் இன்னும் அதிகரித்தது. என்னவோ, எப்படிப்பட்ட மருமகள் வரப்போகிருளோ? சத்யேந்திரனின் தந்தை இருந்தால் இவளுக்கு இந்தக் கஷ்டங்களெல்லாம் ஏற்பட்டிரா.

சத்யேந்திரன் மணம் செய்துகொண்டு வந்தான். தாய் இருவரையும் ஆசிர்வதித்தாள். உலர்ந்த கண்களில் மீண்டும் கண்ணீர் பெருகியது. அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "கண்ணில் ஏதோ பட்டு விட்டது. அதனுல்தான் கண்ணீர் வருகிறது!" என்ருள்.

கிரிபாலா வாய்த் துடுக்குள்ளவள். நளினிக்கு அவள் ஒன்றுவிட்ட சகோதரி ஆகவேண்டும். அவள், "இந்த

வயதிற்குள்ளேயே மூன்று மணம் ஆகிவிட்டது. இன்னும் எத்தனை தடவை என்னென்ன இருக்கிறதோ, யார் கண்டார்கள் ?'' என்றாள்.

இவ்வார்த்தைகள் சத்யேந்திரன் செவிகளையும் எட்டி விட்டன. மறுநாள் சாந்தி முகூர்த்தம்.

எங்கிருந்தோ சீர்வகைகள் வந்தன. பெண்ணுக்கும், பிள்ளைக்கும் உயர்ந்த சேலையும் வேஷ்டியும் வந்தன. பெண்ணுக்கு வந்திருந்த பனாரஸ் பட்டுப் புடவையைப் போல் அதுவரையில் அந்தக் கிராமத்தில் ஒருவருக்கும் வந்ததே இல்லை என்று பேசிக்கொண்டார்கள். "இவை களெல்லாம் எங்கிருந்து வந்தன?" என்று எல்லோரும் கேட்டார்கள். சத்யேந்திரனின் தாய் மென்று விழுங்கிக் கொண்டே, "சத்யேந்திரனின் நண்பர் ஒருவர் அனுப் பினார்!" என்று சொல்லி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு சிரித்த முகத்துடன் பக்ஷணங்களை எல்லோருக் கும் வழங்கினாள்.

எல்லோரும் வாங்கிக்கொண்டு சென்றனர். போகும் போது, "சிறப்பான சீர்!" என்றாள் ராஜபாலா.

"இல்லாமல் என்ன? பெரிய மனிதர்கள் வீட்டில் எல்லாம் இப்படித்தான்!" என்றாள் நிருத்யகாளி.

இந்த வார்த்தைகள் அடங்கியதும், "சரி, ஏன், மறு மணம் செய்து கொண்டார்?" என்றாள் யோகமாயா.

"எனக்கு என்ன அம்மா தெரியும்? நல்ல அழகான பெண், என்னவோ ஒன்றும் புரியவில்லை!" என்றாள் ஞானதா.

ராஸமணி என்பவள் நாவிதன் மகள். அவள் நன்றாகத்தான் இருந்தாள். பார்ப்பதற்கும் நன்றாக இருப்பாள். அவள்மீது பொறாமை கொண்ட சிலர் அவள் கண்களைக் குறைகூறுவது வழக்கம். அவள் சற்று வாய்ப்பதட்டமானவள். அவள் சிரித்துக்கொண்டே,

"உங்களுக்கெல்லாம் புத்தி இருந்தால் நீங்கள் இப்படிப் பேசுவீர்களா? சிரித்துச் சிரித்துப் பேசுகிறவர்களிடம் எப்பொழுதுமே எனக்குச் சந்தேகம்தான். அவள் நடத்தை சரி இல்லையடி, சரி இல்லை. இல்லாவிட்டால் அவளை அனுப்பிவிட்டு வேறு கல்யாணம் செய்வார்களா?" என்றாள்.

வாய்திறந்து ஒன்றும் சொல்லாவிட்டாலும் பலர் இதை ஆமோதித்தனர். இரண்டு மூன்று தினங்களுக் கெல்லாம் கிராமத்தில் இதைப்பற்றியே பேசினார்கள். "ராஸமணி ஜமீன்தார் வீட்டு ரகசியத்தை அறிந்து விட்டாள். நாவிதப் பெண்ணுக்குள்ள சாமர்த்தியம் பிராமணப்பெண்களுக்கு வருமா!" என்று சொன்னார்கள். விஷயத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டனர்.

சத்யேந்திரனின் தாயும் இதைக் கேள்விப்பட்டாள். அவள் தன் அறையின் கதவை மூடிக்கொண்டு படுத்து அழலானாள். என் நளினி களங்கமுள்ளவளா? ஏன் அவள் ஸரளாவைவிட நளினியிடம் அதிகப் பிரியம் வைத்தாள்? நளினியின் வாழ்நாள் பூராவும் வீணாகி விட்டது. அவள் யோசிக்கலானாள்: 'சத்யேந்திரன் வைத்துக்கொண்டால் வைத்துக்கொள்ளட்டும். இல்லா விட்டால் நளினியை அழைத்துக்கொண்டு நான் காசிக்குச் சென்றுவிடுகிறேன், பாவம், இந்த ஜன்மம் பூராவும் பாழாகிவிட்டதே' என்று எண்ணினாள்.

பிறகு கதவைத் திறந்து மாதங்கினியை உள்ளே அழைத்துக்கொண்டு மறுபடியும் கதவைச் சாத்திக் கொண்டாள். மாதங்கினிதான் சீர்கொண்டு வந்திருந் தாள்.

இருவரும் வெகுநேரம் கண்ணீர் பெருக்கினார்கள். நளினியின் பொன்போன்ற மேனி எப்படிக் கறுத்து விட்டது? எந்தக் குற்றத்திற்காகச் சத்யேந்திரன்

அவளை உதறிவிட்டான். வருத்தத்துடன் அவள் மாமிக்கு நமஸ்காரம் சொல்லச் சொன்னாள். ஆகிய சகல விஷயங்களையும் மாதங்கினி கண்களைத் துடைத்துக்கொண்டே கூறினாள். கேட்கக் கேட்கச் சத்யேந்திரனின் தாய்க்கு மருமகள்மேல் இருந்த வாஞ்சை இன்னும் பன்மடங்காகப் பெருகியது. மகனிடம் ஒரு வெறுப்பும் ஏற்பட்டது. அவள் யோசிக்கலானாள். "சத்யேந்திரனிடம் எனக்கு உரிமை இல்லையா? நான் சொல்வதெல்லாவற்றையும் அவன் அசட்டை செய்துவிட முடியுமா? என் வார்த்தை ஒன்றையாவது கேட்கமாட்டானா? நான் நளினியை மீண்டும் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன். என் லட்சுமிக்குக்கூட இந்தக் கதி நேரலாமா?" என்றெல்லாம் எண்ணினாள்.

அன்று சாயங்காலம் தாய் மகனை அழைத்து "நளினியை அழைத்துக் கொண்டுவா!" என்றாள்.

மகன் தலையசைத்துவிட்டு "முடியாது" என்றான்.

தாய் அழுதுகொண்டே, "அடே! என் நளினியைப் பற்றிக் கிராமத்தில் என்னென்ன அவதூறு பேசுகிறார்கள்? நீ அவள் கணவனல்லவா? அவளுக்கு ஓர் இழுக்கு வந்தால் அது உனக்கு இல்லையா?" என்றாள்.

"என்ன அவதூறு."

"இம்மாதிரி அவளை அனுப்பிவிட்டு வேறு கல்யாணம் செய்துகொண்டால் ஊர் வாயை மூடிவிட முடியுமா?"

"ஊர் வாயை மூடி என்ன ஆகவேண்டும்?"

"அப்படியானால் அழைத்துக் கொண்டுவர மாட்டாயா?"

"முடியாது!"

தாய் மிகுந்த கோபம் கொண்டாள். எப்படிக் கோபித்துக்கொள்ள வேண்டும்; எப்படிப் பேசவேண்டும்

என்பதை அவள் முன்னமேயே தீர்மானித்திருந்தாள். ஆகையால் அவளுக்கு யோசிக்க அவசியமே ஏற்பட வில்லை. "அப்படியானால் நாளைக்கே என்னைக் காசிக்கு அனுப்பிவிடு. இனி ஒரு கணம் கூட நான் இங்கே இருக்க விரும்பவில்லை!" என்றாள்.

சத்யேந்திரன் இப்பொழுது முன் சத்யேந்திரன் அல்ல. ஒருசமயம் ஸரளாவின் அன்பையும் ஆதரவையும் பெற்றான். விளையாட்டுப் பொம்மையாக இருந்தான். அலட்சியத்துடன் இருந்தான். நளினி பெருமுயற்சியுடன் அவனை மனிதனாக்கினாள். அந்தச் சத்யேந்திரன் இன்று முற்றிலும் மாறுபட்டிருந்தான். அவன் தன் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு வெட்கம், மானம், நன்மை, தீமை என்ற ஞானமே இல்லாமல், ஜடமாகி விட்டான். ஆகை யால் அனுயாசமாக, "உனக்கு எங்கே இஷ்டமோ செல்லலாம். இனி என்னால் ஒருவரையும் அழைத்து வர முடியாது!" என்று சொல்லி விட்டான்.

சத்யேந்திரன் வாயிலிருந்து இம்மாதிரி வார்த்தைகள் வருமென்று தாய் கனவிலும் எதிர்பார்க்கவில்லை அவள் அழுதுகொண்டே சென்றுவிட்டாள். போகும்போது "என் நாட்டுப்பெண் களங்கமற்றவள்! ஸதி! இதை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்! ஊரிலுள்ளவர்கள் எது வேண்டுமானாலும் சொல்லட்டும், ஆனால் நான் ஒன்றையும் நம்பமாட்டேன்!" என்று சொன்னாள்.

மறுநாள் அத்தை சத்யேந்திரனை அழைத்து, "உன் நண்பன் சீர் அனுப்பி இருந்தானே பார்த்தாயா?" என்று கேட்டாள்.

சத்யேந்திரன் தலையை ஆட்டிவிட்டு, "இல்லையே!" என்றான்.

"தெரியாதா? உட்கார், துணிமணிகளை எடுத்துக் கொண்டுவந்து காட்டுகிறேன்!"

சிறிது நேரத்திற்கெல்லாம் அத்தை ஒரு துணி மூட்டையை எடுத்துவந்தாள். சத்யேந்திரன் பார்த்தான். எல்லாம் விலையுயர்ந்த துணிகள். அவன் ஆச்சரிய மடைந்து போனான். எந்த நண்பன் அனுப்பினான்? பனாரஸ் புடவையைக் கவனத்துடன் பார்த்தான். அதன் தலைப்பில் ஏதோ முடிந்திருந்தது. அவிழ்த்துப் பார்த்தான். சிறு கடிதம். கையெழுத்தைப் பார்த்ததும் சத்யேந்திரனுக்குச் சுரீரென்றது. அதில், "சகோதரிக்கு! இந்த அன்பின் வெகுமதியைத் திருப்பி அனுப்பவேண்டாம். இதை ஏற்றுக் கொள்ளுக" என்று எழுதி இருந்தது.

சாந்திமுகூர்த்த இரவின் மலர்ப்படுக்கை, அன்று சத்யேந்திரனுக்கு முட்படுக்கையாகி விட்டது.

வாலிபத்தின் கர்வத்தை யாரிடமாவது கண்டிருக்கிறீர்களா? சத்யேந்திரனைப்போல் அகங்காரம் கொண்டு அனர்த்தத்தைத் தேடிக்கொண்ட வாலிபன் யாரையாவது பார்த்திருக்கிறீர்களா? சத்யேந்திரநாதா! நீ இதயத்துடன் விளையாடுகிறாய். அதனால் ஏற்படும் தண்டனைக்குப் பயப்படுகிறாயா?

நீங்கள் யுவர்கள். உலகம் முழுவதும் உங்களுக்கு இன்பப் பொக்கிஷம். ஆனால் இதைச் சொல்லுங்கள். உங்களுக்கு எப்பொழுதாவது உயிர் ஒரு சுமை என்று தோன்றியதுண்டா? வாழ்க்கையின் ஒவ்வொரு பந்தமும் தளர்ந்து நழுவி விடுவதைப்போன்ற உணர்ச்சி ஏற்பட்டதுண்டா? இதுவரையில் அம்மாதிரியான சந்தர்ப்பம் ஏற்பட்டிராவிட்டால் ஒருமுறை சத்யேந்திரனைச் சென்று பாருங்கள். வெறுக்க வேண்டும் என்று தோன்றினால், தாராளமாக வெறுங்கள்! வெறுங்கள்! ஆனால் அனுதாபப்பட வேண்டாம். வெறுங்கள். ஒன்றும் சொல்ல

மாட்டான், தயை காட்ட வேண்டாம்! இறந்து விடுவான்.

பாபி இறந்தால் பலனை யார் அனுபவிப்பார்கள்? சத்யேந்திரனின் சாந்தமான வாழ்க்கையின் ஒவ்வொரு தினமும் சகிக்க முடியாத பாரமாகிவிட்டது. நாள் முழுவதும் துடித்தும்கூட அவனால் அந்தச் சுமையை இறக்க முடியவில்லை.

இடையிடையே கழிந்துபோன தன் வாழ்நாட்கள் அவன் மனத்தினின்றும் நீங்கிவிட்டதைப்போல் தோன்றியது. ஆனால் அவனுடைய அன்பான நளினி பபனாவில் களங்கமடைந்தாள். அதனால் அவள் கணவன் அவளைக் கைவிட்டான் என்பதை மாத்திரம் அவன் மறக்கவே இல்லை.

சத்யேந்திரன் மணம் செய்துகொண்டு இரண்டு மாதங்கள் கழிந்தன. அன்று அவனுக்கு ஒரு கடிதமும் ஒரு பார்சலும் வந்தது. கடிதம் நளினியின் சகோதரன் நரேந்திரன் எழுதி இருந்தான். அது வருமாறு:

"சத்யேந்திர பாபு! நான் மிகுந்த வெறுப்புடன் இந்தக் கடிதத்தை எழுதுவதற்குக் காரணம் என் உயிரினும் இனிய சகோதரி நளினிதான். இறக்குமுன் அவள் ஏதேதோ சொன்னாள். இந்த மோதிரத்தை மீண்டும் உங்களிடம் அனுப்பச் சொன்னாள். உங்கள் பெயர் பொறித்த மோதிரத்தைத் திருப்பி அனுப்புகிறேன். இதைத் தங்கள் புதிய மனைவிக்கு அணிவிக்க வேண்டுமென்பது என் சகோதரியின் விருப்பம். அவளுடைய ஆசை பூர்த்தியாகுமென்று நம்புகிறேன். இறக்கும்போது அவள் தங்களை மிகவும் வேண்டிக்

கொண்டாள். அவளுடைய இந்தச் சகோதரியாவது கஷ்டப்படாமல் சௌக்கியமாக இருக்கட்டும், என்ருள்.

தங்கள்,

நரேந்திர நாதன்.

நளினிக்கு ஒரு குழந்தை பிறந்து இறந்தபோது சத்யேந்திரன் இதை அவளுக்கு அணிவித்தான். இந்த விஷயம் அவனுக்கு ஞாபகம் வந்ததோ என்னவோ?

சத்யேந்திரன் இப்பொழுது பபனுவில் இல்லை. எந்தக் காரணத்தினுலோ தெரியவில்லை. தாயும் காசியில் வசிக்க முடியவில்லை. புதிய நாட்டுப் பெண்ணின் பெயர், **விது.** அவள் ஒருவேளை பூர்வஜன்மத்தில் நளினியின் சகோ தரியோ என்னவோ?

# பிரகாசமும் சாயையும்

ஆரம்பத்திலேயே மட்டம் தட்டியிருந்தால், இம் மாதிரி நடந்திராது. அப்பொழுது முடியவில்லை. முடியும் என்றாலும்—உலகத்தில் எவ்வளவோ நடக்கின்றன— எல்லாமா எனக்குத் தெரிகின்றன? இந்தக் கதையைப் படியுங்கள். இதனால் எவ்வித ஹானியும் ஏற்படாது என்பது என் நம்பிக்கை. கதை எழுத உட்காரும்போது எல்லாம் உண்மையாக எழுதவேண்டுமென்று பிரதிக்ஞை செய்துகொள்ள முடிவதில்லை. இரண்டொரு தவறுகளும் இருக்கலாம். அபிப்பிராய பேதங்களும் இருக்கலாம். இதனால் என்ன குடியா முழுகிப்போய்விடப் போகிறது? ஆமாம்; கதாநாயகன் பெயர் யக்ஞதத்த முகர்ஜி. ஆனால் ஸுரமா அவனைப் 'பிரகாஷ்' என்றுதான் அழைப்பது வழக்கம். கதாநாயகியின் பெயர்தான் தெரிந்துவிட்டதே. ஆனால் யக்ஞதத்தன் அவளைச் 'சாயா' என்றுதான் அழைப்பது வழக்கம். சில தினங்கள்வரையில் யார் பிரகாசம், யார் சாயை என்ற விவாதம் இருந்தது. ஆனால் ஒருவிதமான முடிவும் ஏற்படவில்லை, கடைசியில் ஒரு நாள் ஸுரமா, "உன் கூர்மையான புத்திக்கு இதுகூட விளங்கவில்லையா? நீ இல்லாவிட்டால் நான் ஏது? ஆனால் நான் இல்லாமல் நீ நெடுநாள் இருக்கலாம்; ஆகையால் நீ பிரகாசம், நான் சாயை" என்றாள்.

யக்ஞதத்தன் சிரித்தான். "ஒருபக்ஷமாக 'டிக்ரி' பெறவிரும்பினால், வாங்கிக்கொள். ஆனால் விஷயம் தீர்ந்து விடவில்லை" என்றான்.

" இல்லை, தீர்ந்துவிட்டது, அழகாகத் தீர்ந்துவிட்டது. பிரகாஷ்! இனிமேல் சண்டையிட வேண்டிய அவசியம் இல்லை. நீ பிரகாசம், நான் சாயை!" என்று சொல்லிக் கொண்டே சாயா பலவந்தமாகப் பிரகாசனை ஓய வைத்து விட்டாள்.

*　　　*　　　*

கதை இதுவரையில்தான் வந்திருக்கிறது, ஆனால், இனி உங்களுக்குள் சண்டை வந்துவிடப் போகிறதே என்ற பயம்தான். இவர்கள் ஸ்திரீ—புருஷர் என்று நீங்கள் சொல்லுவீர்கள். நான் சொல்வேன்; " ஸ்திரீ—புருஷர்கள்தான்; ஆனால் கணவன், மனைவி இல்லை" என்று. உங்கள் புருவங்கள் விரியும். அப்படியானால் " முறையற்ற காதலா?" என்பீர்கள். " இல்லை, புனித மான காதல்" என்பேன் நான். உங்களுக்கு நம்பிக்கையே ஏற்படாது. முகத்தைத் தூக்கிக்கொண்டு, ' வயதென்ன?' என்று கேட்பீர்கள். " பிரகாசனுக்கு வயது இருபத் தொன்று: சாயாவுக்குப் பதினெட்டு" என்பேன் நான். இதற்கு மேலும் அறிய விரும்பினால் இதோ ஆரம்பிக் கிறேன்.

யக்ஞதத்தன், சிறிய அழகிய தாடி, கண்ணுக்குக் கண்ணாடி, தலையில் 'லவண்டர்' வாஸனை, தேர்ந்தெடுத்த அழகான கரையுள்ள வேஷ்டி, சட்டைக்கு 'ஸெண்ட்' காலில் சாயா தன் கையினால் பூவேலை செய்த 'மக்மல் ஸ்லிப்பர்' இவைகளோடு விளங்குவான். லைப்ரரி நிறையப் புஸ்தகங்கள்; வீட்டில் அநேக வேலைக்காரர் கள்; மேஜை அருகே அமர்ந்து யக்ஞதத்தன் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறான். எதிரே பெரிய நிலைக் கண்ணாடி. படுதாவை விலக்கிக் கொண்டு ஜாக்கிரதை யாகச் சாயா உள்ளே பிரவேசிக்கிறாள். பேசாமல்

பின்னால்வந்து பிரகாசனின் கண்ணைப் பொத்த வேண்டு மென்பது அவள் விருப்பம். ஆனால் அருகே வந்து கையை எடுத்ததுமே அவள் உருவம் கண்ணாடியில் தெரிந்துவிட்டது. பார்த்தான் யக்ஞதத்தன்; அவள் முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டிருந்தான். ஸுரமாவும் சிரித்துவிட்டாள்? "ஏன் பார்த்தாய்?" என்றாள்.

"இது என் குற்றமா?"

"பின்னே யார் குற்றம்?"

"பாதி உன்னுடையது. பாதி இந்தக் கண்ணாடி யினுடையது!"

"இப்பொழுதே அதை உடைத்து விடுகிறேன்!"

"உடைத்து விடாதே, இதை உடைத்து விடுவா யானால் மற்றொரு பாதிக்கு என்ன செய்வாய்?"

ஸுரமா இரண்டொருதரம் அசைந்து கொடுத்துக் கொண்டு "பிரகாஷ்!" என்றாள்.

"சொல்லு சாயா!"

"நீ ஏன் இளைத்துப் போகிறாய்?"

"எனக்கு அப்படித் தோன்றவில்லையே!"

"நீ ஏன் சாப்பிடுவதில்லை?"

யக்ஞதத்தன் சிரித்துக் கொண்டே, "சாயா, சண்டைபோட வந்திருக்கிறாயா?" என்றான்.

"ஆமாம்!"

"நான் அதற்குத் தயாராக இல்லை."

"நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?"

"இதற்குத்தான் தினம் ஒருமுறை பதில் சொல்லு கிறேனே!"

"இல்லை, செய்துகொண்டே ஆகவேண்டும்."

"சாயா, நீ ஏன் விவாகம் செய்துகொள்ளவில்லை?"

ஸுரமா யக்ஞதத்தனின் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு, "சீச்சி, விதவைகள் எங்கேயாவது கல்யாணம் செய்து கொள்வதுண்டா?" என்ருள்.

யக்ஞதத்தன் சிறிதுநேரம் சும்மா இருந்தான். பிறகு. "எப்படிச் சொல்வது? சிலர் செய்து கொள்வதுண்டு என்கிருர்கள். சிலர் இல்லே என்கிருர்கள்" என்ருன்.

"அப்படியானுல் இந்த விஷயத்தில் என்னைக் குற்றவாளியாக்க ஏன் முயற்சிக்கிருய்?"

யக்ஞதத்தன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டு, "அப்படியானுல் எனக்கு ஸேவை செய்தே உன் வாழ்நாளைக் கழித்து விடுவாயா?" என்ருன்.

"உம்" என்று சொல்லி அவள் கண்ணீர் விட்டு அழலானுள்.

யக்ஞதத்தன் அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "சாயா, உன் மனேபீஷ்டம் என்ன? எனக்கு விவரமாய்ச் சொல்லமாட்டாயா?" என்ருன்.

"என்னைப் பிருந்தாவனத்திற்கு அனுப்பிவிடு."

"என்னை விட்டுவிட்டுத் தனியாக இருப்பாயா?"

ஸுரமாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லே. இரண்டுதரம் தலேயை அசைத்தாள். கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது.

## 2

"யக்ஞ அண்ணு, அந்தக் கதையை மறுபடியும் ஒருதரம் சொல்லமாட்டாயா?"

"எந்தக் கதையைச் சாயா?"

"அதைத்தான், என்னைப் பிருந்தாவனத்தில் விலேக்கு வாங்கினுயே; எத்தனை ரூபாய்க்கு வாங்கினுய்?"

"ஐம்பது ரூபாய்க்கு. அப்பொழுது எனக்கு வயது பதினெட்டு. பி. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டு அந்தப் பக்கம்

சுற்றுவதற்கு வந்திருந்தேன். தாய் உயிருடன் இருந்தாள். அவளும் கூட வந்திருந்தாள். ஒருநாள் மத்தியான்னம் மாலதி குஞ்சத்திற்கருகில் வைஷ்ணவிகளின் கூட்டமொன்று பாடிக் கொண்டே சென்றது. முதல் முதல் உன்னை அங்கேதான் கண்டேன். (யௌவனத்தின் முதல் படி ஏறும்போது உலகம் அழகாகவும் இனிமையாகவும் தோன்றுகிறது. அதன் இனிமை முழுவதையும் நம் கண்களாலேயே பருக முடியவில்லை. துணையிருந்தால்-இன்னும் இரண்டு கண்கள் இதைப்போலவே ஒன்ருக இந்தச் சோபையின் இனிமையை அநுபவிக்க முடியுமானுல்.) சரி, அவளுக்கு நான் என்ன சொல்ல முடியும்! இதென்ன சாயா, அழுகிருயா என்ன?" என்ருன்.

"இல்லை, நீ சொல்."

"நீ அப்பொழுது பதினைந்து வயதுள்ள புதிய வைஷ்ணவி. கையில் தம்பூரா இருந்தது; பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாய்."

"போயேன், நான் என்ன பாட்டுப் பாடியிருக்கப் போகிறேன்?"

"அப்பொழுது உன்னுல் பாட முடிந்தது. அதன் பிறகு மிகுந்த சிரமத்தின்பேரில் உன்னை அடைந்தேன். நீ பிராமணப் பெண், பால்ய விதவை. உன் தாய் தீர்த்த யாத்திரைக்குவந்து பிறகு வீடு திரும்பவில்லை. ஸ்வர்க்கத்திற்குச் சென்றுவிட்டாள். நான் உன்னை அழைத்துக் கொண்டுவந்து அம்மாவிடம் ஒப்பித்தேன். அவள் உன்னை மார்புடன் அணைத்துக்கொண்டாள். அதன் பிறகு அவள் இறக்கும்போது எனக்கே திருப்பிக் கொடுத்துவிட்டாள்" என்ருன் யக்ஞதத்தன்.

"பிரகாஷ் அண்ணு, எங்கள் வீடு எங்கே?"

"எங்கோ கிருஷ்ணநகருக்கு அருகே என்று கேள்வி."

"எனக்கு உறவினர் ஒருவரும் இல்லையா ?"

"நான் இல்லையா? சாயா, நான்தான் உனக்கு எல்லாம்!"

ஸுரமாவின் இமைகள் மீண்டும் நனைந்தன. "நீ என்னை மறுபடியும் விற்றுவிட முடியுமா?" என்றாள்.

"இல்லை, அது முடியாது. என்னை விற்றுக் கொள்ளாமல் இந்தக் காரியம் நடவாது."

ஸுரமா ஒன்றும் பேசவில்லை. முன்போல் கண்ணீர் வழியும் கண்களுடன் அவன் பக்கம் பார்த்தாள். வெகு நேரத்திற்குப் பிறகு மெதுவாக, "நீ அண்ணா, நான் தங்கை, நம் இருவருக்கும் மத்தியில் ஒரு மதனியை அழைத்துக்கொண்டு வாயேன்!" என்றாள்.

"ஏன், எதற்காக ?"

"நாள் பூராவும் அவளுக்குச் சிங்காரம்செய்து அவளை அழைத்து வந்து உன் அருகே உட்கார வைப்பேன்."

"நீ அதை உன் முழு மனத்துடன் செய்வாயா ?"

ஸுரமா தலைநிமிர்ந்து கண்கொட்டாமல் அவன் முகத்தைப் பார்த்தாள்; பிறகு "அவளைக்கண்டு பொறாமைப்பட நான் என்ன அப்படி இழிவானவளா ?" என்றாள்.

"பொறாமைப் படமாட்டாய், ஆனால் உன் ஸ்தானத்தை இழந்துவிடுவாய் அல்லவா ?"

"ஏன் இழக்கப்போகிறேன்? நான் ராஜாவுக்கு ராஜாவாகவே இருப்பேன். சும்மா ஒரு மந்திரியை நியமிக்கிறேன். இருவருமாகச் சேர்ந்து உன் ராஜ்யத்தை நடத்துவோம். மிக்க ஆனந்தமாக இருக்கும்"

"இங்கே பார் சாயா, விவாகம் செய்துகொள்ள எனக்கு இஷ்டமில்லை? ஆனால் உனக்கு ஒரு தோழி வேண்டுமென்றால் செய்துகொள்ளுகிறேன்."

"ஆமாம் அவசியம் செய்துகொள். மிக்க ஆனந்தமாக இருக்கும் இருவரும் சந்தோஷமாக நாட்களைக் கழிப்போம்" என்று சொல்லிவிட்டு மனத்திற்குள் "மூன்று உலகத்திலும் எனக்கு ஒருவரும் இல்லை. மான அவமானமும் இல்லை. ஆனால் என்பொருட்டு நீ ஏன் களங்கத்தைச் சுமக்க வேண்டும்? நீ எனது கடவுள்; நீ விவாகம் செய்துகொள். உன் முகத்தைப்பார்த்து நான் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டாள்.

## 3

கல்கத்தாவில் பலர் தங்கள் பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதைக்கூடத் தெரிந்துகொள்வதில்லை. சிலர் நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பார்கள். தெரிந்தவர்கள் "யக்ஞதத்தன் பி. ஏ. பாஸ் செய்திருந்தால் என்ன? சுத்த உதவாக்கரைப் பையன். ஸுரமா ஆட்டிவைத்தபடி ஆடுகிறான்," என்று சொல்வதுண்டு. சிலசமயம் இந்த வார்த்தைகள் ஸுரமா, யக்ஞதத்தன், இருவர் செவிகளிலும் விழுவதுண்டு; கேட்டு இருவரும் சிரிப்பார்கள்.

ஆனால் நீ நல்லவனாக இருந்தாலும் சரி, கெட்டவனாக இருந்தாலும் சரி, பெரிய மனிதனாக இருந்தால் தான் உன் வீட்டுக்கு எல்லோரும் வருவார்கள். குறிப்பாக ஸ்திரீகள் சிலர் ஸுரமாவிடம், "ஸுரமா, உன் அண்ணாவுக்குக் கல்யாணம் செய்துவைக்கக் கூடாதா?" என்று கேட்பார்கள்.

"செய்து வைக்க வேண்டும், நல்ல பெண்ணைப் பார்த்து!" என்று பதிலளிப்பாள் ஸுரமா.

ஸுரமாவின் தோழி சிரித்துக்கொண்டே "சரிதான் நல்ல பெண் கிடைப்பது கஷ்டம். உன்னுடைய அழகைக் கண்டு அவன் கண்கள் பூத்துப்போயிருக்கும்போது அவன் ......" என்பாள்.

"சீ, நாசமாய்ப் போறவளே" என்று சொல்லும் போதே ஸுரமாவின் கன்னங்கள் அன்பினுலும் கர்வத்தினுலும் சிவந்துவிடும்.

அன்று மத்தியான்னம் மழை பெய்துகொண்டிருந்தது. ஸுரமா அறைக்குள் நுழைந்ததும், "ஒரு பெண் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன்!" என்ருள்.

"போ, ஒருகவலை ஒழிந்தது, எங்கே? சொல்லு கேட்போம்!" என்ருன் யக்ஞதத்தன்.

"அந்தத் தெரு மித்ரர் வீட்டில்"

"பிராமணனுக இருந்துகொண்டு காயஸ்தன் வீட்டிலா?"

"ஏன்; காயஸ்தர்கள் வீட்டில் பிராமணர்கள் இருக்க மாட்டார்களா? அவள் தாய் அங்கே சமையல் வேலை செய்கிருள். பெண் ரொம்ப நன்ருக இருப்பாள் என்று கேள்வி. பார்த்துவிட்டு வா. மனத்திற்குப் பிடித்திருந்தால் வீட்டுக்கு அழைத்துவந்து விடலாம்!"

"நான் என்ன அப்படிப்பட்ட அபாக்யவானு? ஊரிலுள்ள பிச்சைக்காரிகள் இல்லாமல் என் வாழ்நாள் கழியாதா?"

"பிச்சைக்காரிகளைப் பிடித்துக்கொண்டு வருவது உனக்குப் புதிதல்லவே!"

"உம், அப்புறம்?"

"இல்லை, நீ போ, போய்ப் பார்த்துவிட்டு வா. மனத்திற்குப் பிடித்திருந்தால், முடியாது என்று மாத்திரம் சொல்லிவிடாதே"

"எவ்விதத்திலும் மனத்திற்குப் பிடிக்கப் போவதென்னவோ இல்லை."

"பிடிக்கும், ஐயா, கட்டாயம் பிடிக்கும். ஒரு முறை பார்த்து விட்டு வாரும்!"

பிறகு சாயாதேவி பிரகாச தேவனுக்கு அடியிற் கண்ட தண்டனையை அளித்தாள். அவனுக்கு வாசனைத் திரவியங்கள் பூசி, தலைசீவி, அவனைச் சிங்காரித்துக் கண்ணாடியின் முன் கொண்டுபோய் நிறுத்தியபோது யக்ஞதத் தனுக்கே வெட்கமாகப் போய்விட்டது. அவன் "சீச் சீ, இதெல்லாம் ரொம்ப அதிகப்படி" என்றான்.

"இருக்கட்டும், நீ போய்ப் பார்த்து விட்டு வா."

வண்டியில் ஏறிப் பெண் பார்க்கச் சென்றான் யக்ஞ தத்தன். வழியில் கண்ட ஒரு நண்பனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டான், "வா, மித்தர் வீட்டுக்குச் சென்று 'டிபன்' சாப்பிட்டு விட்டு வரலாம்" என்றான்.

"இதன் கருத்து?"

"அவர் வீட்டில் ஒரு பிச்சைக்காரப்பெண் இருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்!"

"என்ன அப்பா சொல்லுகிறாய் நீ? யார் சொன்னார்கள் உனக்கு இதை?"

"நீங்கள் பொறாமைப்பட்டுச் சாகிறீர்களே, அதே சாயாதேவி தான்!"

யக்ஞதத்தன் தன் நண்பனுடன் பெண் பார்க்க மித்தர் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். பெண் ஜமக்காளத்தின்மேல் உடகார்ந்திருந்தாள். பல தடவை வெளுத்து வலையைப்போல்இருந்த ஒரு சுதேசிப்புடைவையை உடுத்தியிருந்தாள். கையில் கறு வளையல். தாம்பர வர்ணத்தில் ஒரு பொற் கடகம் அணிந்திருந்தாள். பல இடங்களில் அதன் உள்ளே இருக்கும் செப்புக்கட்டை தெரிந்தது. தலையில் தடவிக்கொண்டிருந்த எண்ணெய் நெற்றி பூராவும் வழிந்தது. நடுத் தலையில் பின்னலை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். நண்பர்கள் இருவரும் பார்த்துவிட்டு நகைத்தனர். சிரிப்பை அடக்கிக்கொண்டு, பெண்ணைப்

பார்த்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான் யக்ஞதத்தன்,

பெண் தன்னுடைய பெரிய கருவிழிகளை அவன் முகத்தின்மேல் செலுத்தி "பிரதுல்!" என்றது.

யக்ஞதத்தன் தன் நண்பனைக் கிள்ளிப் புன்னகையுடன், "ஏன் அப்பா கதாதரன் அல்லவே!" என்றான்.

நண்பன் மெள்ள அவனை நெட்டிவிட்டு, "அதிகமாக அளக்காதே, சீக்கிரம் தீர்மானம் செய்!" என்றான்.

"சரி என்ன படித்திருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை."

"ரொம்ப நல்லதாயிற்று."

"வீட்டுக் காரியம் செய்யத் தெரியுமா?"

பிரதுல் தலையை அசைத்தாள். அருகே ஒரு வேலைக்காரி நின்றிருந்தாள். அவள் வியாக்யானம் செய்தாள். "ரொம்பக் கெட்டிக்காரப் பெண் பாபுஜி! சமையல் செய்வது, பரிமாறுவது, வீட்டுவேலை இவைகளில் தன் தாய்க்குச் சமானமாய்ச் செய்வாள். வாய்விட்டுப் பேச மாட்டாள்: மிக்க சாந்தம்" என்றாள்.

"அதுதான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு அப்பா இருக்கிறாரா?"

"இல்லை."

"எங்கள் வீட்டுக்கு வருகிறாயா?"

"ஆஹா" என்று தலையசைத்தாள் அந்தப் பெண். இதற்குள் அந்த ஜன்னல் பக்கம் கவனம் சென்றது. அங்கே இரண்டு கருவிழிகள் அனலைக் கக்கிக்கொண்டிருந்தன. அவள் பயந்துகொண்டு, "இல்லை" என்றாள்.

வெளியே வந்து மித்தர் பாபுவைச் சந்தித்தார்கள்.

"பெண் எப்படி?"

"நல்ல பெண்!"

"அப்படியானால் முகூர்த்தம் குறிப்பிடலாமா?"

"ஆஹா!"

## 4

பத்துப் பன்னிரண்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் சுவாரஸ்யமான நாவலைப் படித்துக்கொண் டிருக்கும் போது, ரஸமற்ற ஒருவன் அதைப் பிடுங்கிக்கொண்டு விட்டானானால் அவன் நிலைமை எப்படி இருக்கும்? அவன் உள்ளம் நொந்து சங்கையடைந்து வாடிய முகத்துடன், இந்த அறைக்கும் அந்த அறைக்குமாய் ஓடுவான் பயந்த பார்வையுடன் தனக்குப்பிரியமான அப்பொருளைத் தேடிப் பிடிப்பதில் முனைந்து நிற்பான். அப்பொழுது அவனுக்கு, யாரிடம் கோபித்துக் கொள்ளலாம் என்று தோன்றும். இதே மாதிரிதான் ஸுரமாவும் யக்ஞதத்தனுக்காகத் துடிக்கலானாள். அவளுக்கென்ன தெரியும், அவள் எதைத் தேடிப் பிடிக்கப்போகிறாள். நாற்காலி, மேஜை, ஸோபா, கட்டில், அறை, தாழ்வாரம், எல்லாவற்றின்மீதும் அவள் கோபம் கொண்டாள். தெருப்பக்கம் இருந்த ஜன்னல் ஒன்றுகூட அவளுக்குப் பிடிக்கவில்லை. இங்கே சற்றும் அங்கே சற்றுமாக உட்காரலானாள். யக்ஞதத்தன் அறைக்குள் நுழைந்தான்.

"பிரகாச மஹாசயரே, என்ன ஆயிற்று?"

பிரகாசனின் முகம் கம்பீரமடைந்தது.

"பெண் பிடித்ததா?"

"பிடித்தது."

"கல்யாணம் எப்பொழுது?"

"அநேகமாய், இந்த மாதத்திலேயே—"

உற்சாகத்துடன் ஸுரமா அங்கே வந்தாள். ஆனால் எவ்விதத் தொந்தரவும் செய்யவில்லை. "என் தலைமேல் ஆணை; உண்மையாகச் சொல்!" என்றாள்.

"இதென்ன ஆபத்து, உண்மையாகத்தான் சொல்லுகிறேன்."

" என் முகத்தைப் பார், சொல், பிடித்திருக்கிறதா?"

" ஆமாம்."

தேடிப் பார்த்தும் ஸுரமாவுக்கு இதற்குப் பதில் சொல்ல வார்த்தைகள் அகப்படவில்லை. அடிபட்ட குழந்தை அழுவதற்கு முன் எப்படி இங்குமங்கும் தலையை ஆட்டி அர்த்தமில்லாமல் பேசுகிறதோ அதேபோல் ஸுரமாவும் தலையை ஆட்டிக்கொண்டே அழுத்தமான குரலில், " நான் முன்பே கூறவில்லையா?" என்றாள்.

யக்ஞதத்தன் ஏதோ தன் நினைவில் ஆழ்ந்திருந்தான், ஆகையால் அவன் மறுக்கிறானா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் பெண் பிடிக்கும் என்று ஸுரமா ஒருபோதும் சொன்னதில்லை. அவளும் பெண்ணை நேரில் பார்த்ததில்லை. தவிர இவ்வளவு சீக்கிரம் பெண் பிடித்து விவாகம் நிச்சயமாகும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. ஆகையால் நாள் பூராவும் தன் அறையில் அமர்ந்து இதைப்பற்றியே அவள் சிந்திக்கலானாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு யக்ஞதத்தனுக்கு ஒருவாறு பிரமை நீங்கிற்று, அவன் " சாயா, எனக்கு இந்தக் கல்யாணத்தைச் செய்து வைக்காதே!" என்றான்

" பேஷ், இது எங்கேயாவது நடக்குமா? நிச்சயம் செய்தாகி விட்டதே!"

" நிச்சயம் ஒன்றும் செய்யவில்லை."

" இல்லை, அதுமுடியாது. துக்கப்படும் பெண்ணைச் சுகப்படுத்த வேண்டும். இதைச் சற்று யோசி, தவிர வாக்குக் கொடுத்துவிட்டு அதிலிருந்து மாறலாமா?"

யக்ஞதத்தனுக்குப் பிரதுல குமாரியின் முகம் ஞாபகத்திற்கு வந்தது. அன்று அவளுடைய கறுவிழிகளில் அவன் பொறுமையையும் சாந்தத்தையும் கண்டான். ஆகையால் அவன் மௌனமாக இருந்தான். எனினும்

பல விஷயங்களைச் சிந்திக்கலானான். ஸுரமாவைப் பற்றித்தான் அதிகமாக எண்ணினான். மழைக் காலத்தில் ஈசல் வீட்டில் நிறைவதைப்போல, அவன்மனம் அலுப்பி னால் நிறைந்தது. ஆனால் அது இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க மட்டும் முடியவில்லை. ஸுரமாவின் வாய் வார்த்தைகள் ஹிருதயத்திலிருந்து எந்த விருப்பத்தைத் திரட்டிக்கொண்டு வருகின்றன என்பதும் தெரியவில்லை. அவன் கண்முன் மங்கலாக ஒரு வலை விரித்திருப்பதைப் போல் இருந்தது. அதில் ஸுரமாவின் முகம் தென்பட வில்லை.

## 5

கல்யாணம் செய்துகொண்டு மணப் பெண்ணை வீட்டுக்கு அழைத்துவந்தான் யக்ஞதத்தன். நோயாளி இருக்கும் வீட்டில் வேறொருவரும் இல்லாவிட்டால் அவன் எப்படி ஓடிப்போய்த் தண்ணீர்க் குடத்தைக் கட்டிக் கொள்ளுவானோ, அதேபோல் ஸுரமா புது மணப்பெண் ணைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டாள். தன்னிடம் இருந்த நகைகளையெல்லாம் அவளுக்கு அணிவித்தாள். தன் பெட்டியிலிருந்த புடவைகளை யெல்லாம் அவள் பெட்டியில் எடுத்து வைத்தாள். நாள் பூராவும் நாட்டுப் பெண்ணை அலங்காரம்செய்து கொண்டிருப்பதைக் கண்டு யக்ஞதத்தனின் முகம் சுண்டிவிட்டது. பயங்கரமான கனவையும் சகித்துக்கொள்ளலாம்; ஏனென்றால் சகிக்க முடியாதபோது தூக்கம் கலைந்துவிடும். ஆனால் விழித்துக் கொண்டே கனவு காண்பதில் மூச்சுத் தடுமாறிப் போய் விடுகிறது. அது முடிவடைவதே இல்லை. கலைவதற்குத் தூக்கமும் இல்லை. சில சமயம் இது கனவென்றும், சிலசமயம் இது உண்மையென்றும் தோன்றுகிறது.

பிரகாசன், சாயா இருவருக்குமே இப்படித்தான் தோன்றியது. ஒருநாள் அவளைத் தன் அறைக்கு அழைத்து, "சாயா!" என்றான் யக்ஞதத்தன்.

"என்ன யக்ஞ அண்ணா?"

"பிரகாஷ் என்று சொல்ல மாட்டாயா?"

ஸுரமா தலை குனிந்துகொண்டு "பிரகாஷ்" என்றாள்.

யக்ஞதத்தன் இரு கைகளையும் விரித்துக் கொண்டு "வெகு நாட்களாக அருகே வரவில்லையே, வா" என்றான்.

ஸுரமா ஒருதரம் அவன் முகத்தைப் பார்த்தாள். அடுத்தகணம், "பேஷ், நல்லவேலை செய்தேன் நான், நாட்டுப் பெண்ணைத் தனியாய் விட்டுவிட்டு வந்துவிட்டேனே!" என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டாள்.

பழக்கமற்ற ஒருவரைக் கோபமிகுதியால் கன்னத்தில் அறைந்து, அவர்களும் சாந்தமாக அதைப் பொறுத்துக் கொண்டு மன்னித்துவிட்டுச் சென்றால், அந்தச் சமயம் மனம் என்ன பாடுபடும்! அதேமாதிரி மன்னிப்புக் கிடைத்த குற்றவாளியைப்போல், அவன் மனமும் உற்சாகம் இழந்தது. திரும்பத் திரும்பத் தான் ஏதோ தவறு செய்து விட்டதாகவும், தெரிந்தும் ஸுரமா அதை மன்னித்து விட்டுச் சென்றதாகவுமே அவனுக்குத் தோன்றியது.

ஸுரமா சகல ஆபரணங்களையும் போட்டு நாட்டுப் பெண்ணை அவனருகே கொண்டு வந்து உட்கார வைப்பாள். சாயங்காலமானதும் வெளியே கதவைத் தாழிட்டுவிடுவாள். யக்ஞதத்தன் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு யோசித்துக் கொண்டிருப்பாள். நாட்டுப்பெண்ணும் சிலவற்றை அறிந்துகொள்வாள். அவள் வயதான பெண்ணாக இல்லாவிட்டாலும், ஸ்திரீயல்லவா! சாதாரண ஸ்திரீக்குள்ள புத்தியைக்கூடக் கொடுக்காமல்

கடவுள் ஸ்திரீகளை வஞ்சிப்பதில்லை. அவளும் இரவு முழுவதும் விழித்துக்கொண்டிருப்பாள்.

கல்யாணம் நடந்து எட்டுத் தினங்கள் கூட ஆகவில்லை. இதற்குள்ளாகவே ஒரு நாள் காலையில் யக்ஞதத்தன் ஸுரமாவை அழைத்து, "சாயா, நாட்டுப்பெண்ணை அழைத்துக்கொண்டு போய் அத்தைக்குக் காட்டி விட்டு வரட்டுமா?" என்றான்.

தாமோதர நதியின் அக்கரையில் இருந்தது அத்தையின் கிராமம். யக்ஞதத்தன் அத்தை வீட்டுக்குச் சென்றதும் "அத்தை, நாட்டுப்பெண் வந்திருக்கிறாள் பார்!" என்றான்.

"அடே கல்யாணம் செய்துகொண்டு விட்டாயா? ஓஹோ! ஆயுசோடு இரு! நூறு வயசு உனக்கு! சந்திரனைப்போல் நல்ல நாட்டுப்பெண். இனி நல்ல பிள்ளையாய்க் குடும்பம் நடத்து அப்பா!" என்றாள் அத்தை.

"இதற்காகத்தான் ஸுரமா பலவந்தமாகக் கல்யாணம் செய்து வைத்தாள்!"

"நல்லது, ஸுரமாவா செய்து வைத்தாள்?"

"அவள்தான் செய்து வைத்தாள், ஆனால் தலை எழுத்துச் சரி இல்லை. இந்த நாட்டுப் பெண்ணுடன் வீட்டுக்குப்போக முடியாது."

"ஏன், ஏண்டாப்பா?"

"தெரியாதா அத்தை உனக்கு. நான் மனித கணம். இந்தப் பெண் ராக்ஷஸகணம்; ஒன்றாய் இருந்தால் உயிரோடு இருக்க முடியாதென்று ஜோசியன் சொல்லியிருக்கிறான்"

"அப்படியாப்பா, சேதி?"

"அந்த அவசரத்திலே இதெல்லாம் பார்க்கமுடியவில்லை. இனி இவள் உன் வீட்டிலேயே இருக்கட்டும்.

மாதம் ஐம்பது ரூபாய் அனுப்புகிறேன். அதைக்கொண்டு உங்கள் காலக்ஷேபம் நடந்துவிடாதா அத்தை?"

"ஆஹா, நடந்துவிடும். பட்டிக்காட்டில் அதிகக் கஷ்டம் ஒன்றுமில்லை. அடே தங்கமான பெண். பெரியவளாகிவிட்டாள். ஏண்டா ஜக்கூ! ஏதாவது சாந்தி கீந்தி செய்தால் சரியாகிவிடாதா?"

"ஆகும். நான் பட்டாசாரியரிடம் கேட்டுக்கொண்டு என்ன செய்யவேண்டுமென்பதற்கு உனக்குத் தகவல் கொடுக்கிறேன்."

"சரி, அப்படியே செய், அப்பா!"

சாயங்காலம் யக்ஞதத்தன் அந்தப் பெண்ணை அருகே அழைத்து "அப்படியானால் நீ இங்கேயே இரு!" என்றான்.

அவள் தலையை அசைத்து, "ஆஹா!" என்று சொல்லிவிட்டாள்.

"உனக்கு எப்பொழுது ஏது வேண்டுமானாலும் எனக்குச் சொல்லி அனுப்பு!"

"சரி."

"உனக்குக் கடிதம் எழுதத் தெரியுமா?"

"தெரியாது."

"பின்னே எப்படித் தகவல் தெரிவிப்பாய்?"

அந்தப் பெண் வீட்டில் வளர்த்த மான்போல் கண்களை மிரள மிரள விழித்துக்கொண்டு நின்றாள். யக்ஞதத்தன் திரும்பிச் சென்றுவிட்டான்.

அத்தை வீட்டில் நாட்டுப்பெண் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்துவிடுவாள். உட்கார்ந்துகொண்டிருக்க அவளுக்குத் தெரியாது. புதிதாக இருந்தாலும், பழகியவளைப்போல வீட்டு வேலைகளைச் செய்யலானாள். இரண்டொரு தினங்களில், இம்

மாதிரிப் பெண் எல்லோருக்கும் கிடைத்துவிட மாட்டாள் என்பதை அத்தை நன்ருகத் தெரிந்துகொண்டாள்.

நாட்டுப்பெண் நிறைய நகை அணிந்திருந்தாள். தெருவிலுள்ளவர்கள் பார்க்க வந்தார்கள். அதில் ஒருத்தி, "இந்த நகைகளை யாரம்மா போட்டார்கள், உன் தந்தையா?" என்று கேட்டாள்.

"எனக்குத் தாய் தந்தையர் இல்லை. நாத்தனுர் போட்டாள்."

சமவயதுள்ள இரண்டு பெண்கள் அவளுக்குச் சிநேகமானுர்கள். பிறகு இவளைக் கிண்டிக் கிண்டி ரகசியத்தை அறிய முயற்சித்தார்கள். ஒருத்தி, "உன் நாத்தனுர் ஒரு வேளை பெரிய பணக்காரியோ?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"நகைகள் எல்லாம் அவளுடையனவா?"

"ஆமாம்!"

"அவள் அணிந்துகொள்வதில்லையா?"

"அவள் கைம்பெண். அணிவதில்லை."

"வயதென்ன இருக்கும்?"

"நம்மைவிடச் சற்றுப் பெரியவள். அவள்தான் பலவந்தமாகத் தன் சகோதரனுக்கு என்னைக் கல்யாணம் செய்து வைத்தாள்."

"உன் கணவன் அவள் சொல்வதையெல்லாம் கேட்கிருன் அல்லவா?"

"ஆமாம், அவள் ஸதி, லக்ஷ்மி. எல்லோரும் அவளை விரும்புகின்றனர்."

# 6

மேலே அமர்ந்து ஜன்னல் வழியாகப் பார்த்தாள் ஸுரமா. யக்ஞதத்தன் வீடு திரும்பிக்கொண் டிருந்தான். ஆனால் கூட நாட்டுப் பெண்ணைக் காணவில்லை. அவன் உள்ளே நுழைந்ததும், "அண்ணா, மன்னியை எங்கே விட்டுவிட்டு வந்துவிட்டாய்?" என்று கேட்டாள்.

"அத்தையின் வீட்டில்."

"ஏன் விட்டுவிட்டு வந்தாய்?"

"இருக்கட்டும், கொஞ்சநாள் பொறுத்துப் பார்த்துக் கொள்ளலாம்."

இந்த வார்த்தை சுரீரென்று ஸுரமாவின் உள்ளத்தில் தைத்தது. இருவரும் மௌனமாக இருந்தார்கள். நண்பர்களோடு விவாதித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று சண்டை வந்துவிட்டால் இருவரும் மனம் நொந்து சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்து விடுவது வழக்கம். இவர்கள் இருவரும்கூடச் சற்றுநேரம் அவ்வாறே இருந்தார்கள். "ஸ்நானம் செய்து சாப்பிடு, வெகு நேரமாகிவிட்டது" என்பாள் ஸுரமா.

"உம், போகிறேன்," என்பான் யக்ஞதத்தன். இவ்வாறே சில தினங்கள் கழிந்தன.

ஒன்றாக இருப்பவர்கள் இப்படியே எப்பொழுதும் குடும்பம் நடத்த முடியாது; ஆகையால் மறுபடியும் ஸௌஜன்யம் ஏற்பட்டது. யக்ஞதத்தன் மீண்டும் அன்போடு "சாயா!" என்று அழைக்கலானான். ஆனால் சாயா இப்பொழுது அவனைப் 'பிரகாஷ்' என்று அழைப்பதில்லை. சில சமயம் யக்ஞதத்தன் என்றும், சில சமயம் அண்ணா என்றுமே அழைத்து வந்தாள்.

ஒருநாள் ஸுரமா, "அண்ணு, கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகப்போகின்றனவே, போய் மன்னியை அழைத்துக் கொண்டுவா" என்ருள்.

யக்ஞதத்தன், அவள் பேச்சை மறுத்து "எல்லாம் வருவாள்" என்ருன். அவன் மனோபாவத்தை அறிந்து ஸுரமா பேசாமல் இருந்துவிட்டாள்.

அத்தையிடமிருந்து சிற்சில சமயம் கடிதம் வரும். அதில், 'நாட்டுப் பெண்ணுக்கு மலேரியா ஜுரம்; வைத்தியம் செய்யவேண்டும்' என்று எழுதுவாள். விஷயத்தை அறிந்துகொண்டு யக்ஞதத்தன் கொஞ்சம் ரூபாய் அனுப்புவான். பிறகு ஒரு மாதம் வரையில் ஒன்றும் இருக்காது.

இப்படி இருக்கையில் திடீரென்று 'அத்தை இறந்துவிட்டாள்' என்று கடிதம் வந்தது.

யக்ஞதத்தன் அந்த ஊருக்குச் சென்ருன். போகும் போது ஸுரமா தன் தலையின்மேல் ஆணையிட்டு "மதனியை அழைத்துவர வேண்டும்!" என்று சொல்லி அனுப்பினுள்.

அத்தையின் காரியங்கள் ஆனதும் ஒருநாள் மத்தியானம் யக்ஞதத்தன் தாழ்வாரத்தில் நின்றபடி வீட்டுக்குத் திரும்புவதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். இடைக்கட்டில் நெற்குதிருக் கருகே பிரதுல் நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தான். இருவர் கண்களும் சந்தித்தன. கைஜாடை காட்டி அவளை அருகே அழைத்தான். அவள் அருகே வந்தாள்.

"என்ன?"

"உங்களிடம் ஒரு விஷயம் சொல்லலாமா?"

"சொல்லேன்!"

நாட்டுப்பெண் மென்று விழுங்கிக்கொண்டே, "எனக்கு ஏதாவது தேவையாக இருந்தால் உங்களைக் கேட்கும்படி சொன்னீர்களே—" என்ருள்.

"ஆமாம், ஆமாம், என்ன வேண்டும், சொல்—"

"வீட்டில் எல்லோரும் நான் பெரும் அவலக்ஷணம் என்று சொல்லுகிறார்கள். இனி என்னால் இங்கே இருக்க முடியாது."

"எங்கே இருக்க விரும்புகிறாய்?"

"கல்கத்தாவில் எந்தப் பெரிய மனிதர் வீட்டிலாவது இடம் கிடைத்தால்—எனக்கு எல்லா வேலையும் தெரியும்."

"நீ உன் வீட்டுக்குப் போகிறாயா?"

"என் வீடா? எங்கே இருக்கிறது? இனி அவர்கள் அங்கே இருக்க விடுவார்களா?"

யக்ஞதத்தன் தன் கையினால் மனைவியின் முகத்தைத் தூக்கி "என் வீட்டுக்கு வருகிறாயா?" என்று கேட்டான்.

"வருகிறேன்."

"ஸுரமா உனக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறாள்."

ஸுரமாவின் பெயரைக் கேட்டதும் அவள் முகம் மலர்ந்தது. "ஜீஜி என்னை நினைவு வைத்துக்கொண்டிருக்கிறாளா?" என்றாள்.

"ரொம்ப!"

"அப்படியானால் அழைத்துச் செல்லுங்கள்."

உலகத்தில் பிறரைப்பற்றி அபிப்பிராயம் கூறத்தெரியாத மனிதர்களும் இருக்கிறார்கள். ஆனால் கூடவே அவர்களிடம் ஒரு நல்ல குணமும் இருக்கிறது. அவர்கள் தங்கள் விஷயத்தைப்பற்றியும் பிறரிடம் ஆலோசனை கேட்பதில்லை. நாட்டுப்பெண் இந்த வகையைச் சேர்ந்தவள். அவள் தன் விஷயத்தைத் தானே யோசிப்பாள். பிறரைக் கேட்பதில்லை. அவள் மீண்டும், "உங்களுக்குத் தீங்கு ஏற்படும் என்று எனக்குப் பயமாயிருக்கிறது. ஆனால் நான் எங்கே இருப்பது? நான் கீழேயே இருக்கிறேன்.

வேலைகளைச் செய்யக் கீழே எனக்குச் சௌகரியமாக இருக்கும்" என்றாள்.

"ஏன் நீ இருப்பதற்கு மேலே அறை இல்லையா?" என்றான் யக்ஞதத்தன்.

"இருக்கிறது. ஆனால் கீழே இருக்கும் அறையிலேயே நான் சௌகரியமாக இருப்பேன்!"

யக்ஞதத்தன் வேறொன்றும் கேட்கவில்லை. இவளுடைய வார்த்தைகள் என்னவோ முட்டாள்கள் பேசும் வார்த்தைகளாய் இல்லை. 'நீ அவலக்ஷணம் இல்லை; ராக்ஷஸகணம் என்று சொல்வதெல்லாம் பொய் என்று சொல்லிவிடுவோமா' என்று பலதடவை எண்ணினான். ஆனால், பொய் சொல்லவேண்டிய காரணம் என்ன என்று கேட்டால் என்ன சொல்லுவது? பிறகு 'வீட்டுக்குச் சென்று முன்பு இருந்த சௌஜன்யத்தோடுகூட இருக்க முடியும்' என்ற நம்பிக்கையைக்கூட அல்லவா அவள் இழந்துவிடுவாள் என்று எண்ணிப் பேசாமல் இருந்துவிட்டான்.

## 7

ஸௌரமா பார்த்தாள். நாட்டுப் பெண் வந்துவிட்டாள். ஆத்திரத்தின் தாக்குதலைச் சமாளித்துக்கொண்டு சாந்தமடைந்தாள். சாந்தமாக அன்புடன் அவளோடு வார்த்தையாடினாள். வாய்ப்பேச்சு மட்டுமல்ல; அந்தரங்கத்தோடு பேசினாள். அவளுடைய வாடிய முகம் மறுபடியும் மலர்ச்சி யடைந்தது. "நாட்டுப்பெண்ணே! உனக்கு அங்கே உடம்பு அசௌகரியமா?" என்று கேட்டாள்.

நாட்டுப்பெண் தலையை அசைத்துக்கொண்டே "அடிக்கடி ஜுரம் வருவதுண்டு!" என்றாள்.

ஸுரமா அவள் நெற்றி வியர்வையைத் துடைத்து விட்டு, " இங்கே வைத்தியம் செய்துகொண்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்ருள்.

நாட்டுப் பெண்ணுக்காகக் கீழே இருக்கும் அறை சுத்தம் செய்யப்படுகிறது என்ற விஷயம் ஸுரமாவுக்கு மத்தியான்னம் தெரிந்தது. அவமானத்தால் அவள் கண் களில் கண்ணீர் வந்துவிட்டது. ஒருவாறு அதை அடக்கிக் கொண்டு யக்ஞதத்தனிடம் சென்று, " அண்ணு, நாட்டுப் பெண் கீழ் அறையிலா தூங்கப்போகிருள் ?" என்று கேட்டாள்.

யக்ஞதத்தன் புஸ்தகத்திலிருந்து தலை நிமிராமலே, "அவள் அப்படித்தானே சொன்னுள் ;" என்ருன்.

" நீ ஒன்றும் சொல்லமாட்டாயா ?"

"நான் என்ன சொல்வது, யாருக்கு என்ன இஷ் டமோ செய்துகொள்ளட்டும் !"

லஜ்ஜையாலும் வெறுப்பாலும் ஸுரமாவினுல் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அவன் முன் னேயே அழுதுவிட்டு மறுபுறம் சென்ருள். மேலே நடந்த இந்த விஷயம் கீழே எட்டவில்லை.

நாட்டுப்பெண் வீட்டு வேலையில் முனைந்திருந்தாள். நாளடைவில் ஸுரமாவின் சகல வேலைகளையும் தானே ஏற்றுக்கொண்டாள். மேலேமாத்திரம் போவதில்லை. கண வனைச் சந்திப்பதில்லை. நாளடைவில் ஸுரமாவும் மேலே போவதை விட்டுவிட்டாள். நாட்டுப்பெண் மலர்ந்த முகத் துடன் காரியம் செய்வாள். ஸுரமா பேசாமல் அருகே அமர்ந்து பார்த்துக்கொண்டிருப்பாள். வேலை செய்வதில் எவ்வளவு சுகம் இருக்கிறது என்பதைக் கண்டாள் ஒருத்தி ; வேலை செய்வதால் சகல துக்கங்களும் மறந்து விடுகின்றன என்பதைக் கண்டாள் மற்ருெருத்தி. இரு வரில் ஒருவரும் அதிகமாகப் பேசுவதில்லை. ஆயினும்

இருவரிடையேயும் பரஸ்பரம் அனுதாபமும் அன்பும் அதிகரித்துக்கொண்டே வந்தன.

அடிக்கடி நாட்டுப்பெண்ணுக்கு ஜுரம் வந்துவிடும். இரண்டொருநாள் உபவாஸம் இருப்பாள். தானுகச் சொஸ்தமாகிவிடும். மருந்து சாப்பிட அவள் விரும்புவதும் இல்லை; சாப்பிடுவதும் இல்லை. அந்தச் சமயம் வேலைகளை வேலைக்காரிகள் செய்வார்கள். ஸுரமாவினுல் முடிவ தில்லை. ஆசையிருந்தாலும் அது அவள் சக்திக்குப் புறம் பான விஷயம்.

தங்கப் பதுமைபோல் இருந்த ஸுரமாவின் நிறம் மாறியது. பழைய காந்தி இப்பொழுது இல்லை. அந்த அழகு பூராவும் இந்த இரண்டு மாதங்களுக்குள் எங்கோ மறைந்துவிட்டது. நாட்டுப்பெண் சிற்சில சமயம் "ஜீஜி, நீ ஏன் நாளுக்குநாள் இப்படியாகிக்கொண்டு வருகிருய்?" என்று கேட்பாள்.

"நானு? நல்லது மன்னி! உடம்பைப் பார்த்துக் கொள்வோம் என்று எங்கேயாவது வெளியே சென்ருல் உனக்குக் கஷ்டமாக இருக்காதா?"

"ஆமாம், கஷ்டமாகத்தான் இருக்கும்!"

"அதனுல்தான் நான் போகவில்லை."

"சரி, ஜீஜி, நீ போகவேண்டாம். இங்கே இருந்த படியே ஏதாவது மருந்து சாப்பிடு, சரியாகப் போய்விடும்" என்ருள் பிரதுல். அன்பின் மிகுதியால் ஸுரமா அவள் நெற்றியில் முத்தமிட்டாள்.

ஒருநாள் ஸுரமா யக்ஞதத்தனுக்காகத் தட்டுத் தயாரித்துக்கொண்டிருந்தாள். யக்ஞதத்தன் வாடிய முகத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் தலை நிமிர்ந்ததும் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, "இறந்து விட்டால் நல்லது என்று தோன்றுகிறது" என்ருன்.

"ஏன்?" என்றாள் ஸுரமா. அவள் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

"பயமாக இருக்கிறது. இன்னும் எவ்வளவு நாள் இந்த உயிரைச் சுமந்துகொண்டிருக்க வேண்டுமோ?"

துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததும் காட்டு விலங்குகள் பூமியைவிட்டு வானத்துக்கு ஓடப் பிரயத்தனப்படுகின்றன. ஆனால் முடிவதில்லை. வேறு வழியின்றி பூமியிலேயே விழுந்து அதைத் தழுவிப் பிராணனை விடுகின்றன. ஸுரமாவும் துடிதுடித்து முதலில் வானத்தைப் பார்த்தாள். பிறகு அவைகளைப் போலவே பூமியில் வீழ்ந்து அழலானாள். "யக்ஞ அண்ணா! மன்னித்துக்கொள்; நான் உன் சத்துரு. என்னை வேறு எங்கேயாவது அனுப்பிவிடு, நீ சுகமடைவாய்!" என்றாள்.

வேலைக்காரி வந்துவிடப் போகிறாளே என்ற பயத்தினால் யக்ஞதத்தன் கையைப் பிடித்து அவளைத் தூக்கினான். அன்புடன் அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே "சீச்சீ! இதென்ன சிறுபிள்ளைத்தனம்?" என்றான். கையை விடுவித்துக்கொண்டு ஸுரமா சட்டென்று தன் அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

## 8

இதன் பிறகு ஒருநாள் ஸுரமா மதனியைத் தன்னருகே அழைத்து அமரிக்கையாக, "ஏன் மன்னி, அண்ணா உன்னை என்றாவது ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டாள்.

பிரதுல் சகஜமான பாவத்துடன் "என்ன சொல்லப் போகிறார்?" என்றாள்.

"அப்படியானால் நீ ஏன் அவரிடம் செல்வதில்லை? உனக்குச் செல்ல இஷ்டமில்லையா?"

நாட்டுப் பெண்ணுக்கு முதலில் வெட்கமாக இருந்தது. பிறகு தலைகுனிந்துகொண்டு, "இஷ்டமில்லாமல் என்ன ஜீஜி, ஆனால் போக முடியவில்லையே!" என்றாள்.

"ஏன் அம்மா?"

"உனக்கு ஞாபகமில்லையா?"

"இல்லையே!"

"அடே ஒருவேளை நீ மறந்திருப்பாய். நான் ராக்ஷஸ கணம், அவர் மனித கணம் அல்லவா!"

"யார் சொன்னார்கள்?"

"அவர்தான் அத்தையிடம் சொன்னார். அதனால் தான்—"

ஸூரமாவுக்கு மயிர்க்குச்செறிந்தது. "இது பொய் அம்மா!" என்றாள்.

"பொய்யா?" விரிந்த கண்களுடன் அவள் ஸூரமாவின் முகத்தைப் பார்த்தாள்.

ஸூரமாவின் உடல் நடுங்கியது. அடிக்கடி மயிர்க்குச் செறிந்தது. அவள் "பிரதுல், இது பொய் அம்மா, முழுப் பொய்!" என்றாள்.

"நான் நம்பவில்லை. அவர் பொய் சொல்வாரா?"

ஸூரமாவினால் பொறுக்க முடியவில்லை. அவள் மதனியைத் தன் இரு கைகளாலும் கட்டிக்கொண்டு தேம்பித்தேம்பி அழலானாள். "நாட்டுப் பெண்ணே, நான் மகா பாதகி!" என்றாள்.

நாட்டுப் பெண் தன்னை விடுவித்துக்கொண்டு, மெதுவாக "ஏன் அக்கா?" என்றாள்.

"ஐயோ! அதை இப்பொழுது கேட்காதே. நான் சொல்லமுடியாது!"

* * *

புயலைப்போல் ஸுரமா யக்ஞதத்தன் அறைக்குப் போனாள், "மன்னியை இந்தமாதிரியா ஏமாற்றுகிறாய்? அடாடா! எப்படிப்பட்ட பொய்யன் நீ!" என்றாள்.

யக்ஞதத்தன் இடிந்து போனான்.

"ஸுரோ, இதென்ன?"

"ரொம்ப கெட்டிக்காரன்தான் நீ! சீச்சீ. வெட்கமாக இல்லையா உனக்கு?"

யக்ஞதத்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பேசாமல் கடும் சொற்களைக் கேட்டுக்கொண்டான்.

"என்ன நினைத்துக்கொண்டு கல்யாணம் செய்து கொண்டாய்? என்ன நினைத்துக்கொண்டு அவளை விட்டு விட்டு வந்தாய்? எனக்காகவா? என் முகத்தைப் பார்த்தா இந்த மாதிரி ஏமாற்றி வருகிறாய்?"

"ஸுரமா, உனக்குப் பைத்தியமா என்ன?"

"நானா பைத்தியம்? உன்னைவிட எனக்குப் புத்தி அதிகம் இருக்கிறது. என்னை வேறு எங்கேயாவது அனுப்பிவிடு" என்று சொல்லும்போதே அவள் நாவறண்டது. "இனி ஒரு நாள்கூட நான் இங்கே இருக்க முடியாது!" என்றாள்.

யக்ஞதத்தன் உரக்கச் சத்தமிட்டு "என்ன சொல்லுகிறாய் நீ?" என்றான்.

"நீ பொய்யன், மோசக்காரன் என்று சொல்லுகிறேன்!"

ஒரு நிமிஷத்திற்குள் யக்ஞதத்தனின் மூளைக்குள் தீப்பற்றியதைப் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. காரணமில்லாமல் அவன் உயிர் அவனைவிட்டு வெளியே வந்து அவனைப் போரிட அழைப்பதைப்போல் இருந்தது. அவன் சுய புத்தியை இழந்து மேஜைமேல் இருந்த தடித்த ரூல் தடியை எடுத்து, உரக்கச் சத்தமிட்டு, "நான் அயோக்கியன்! மோசக்காரன்! பொய்யன்! இதோ

அதற்குப் பிராயச்சித்தம் செய்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே தன் முழுபலத்தோடும் ஓங்கி ஸுரமாவை ஓர் அடி அடித்தான்.

மண்டை உடைந்து ரத்தம் பெருகியது. ஸுரமா உடைந்த குரலில், "ஐயோ, அம்மா!" என்றுள். பிறகு மூர்ச்சையடைந்து தரையில் வீழ்ந்தாள். யக்ஞதத்தன் அவளைப் பார்த்தான். தன் முகம் பூராவும் ரத்தம் வழிவதையும் கண்டான். கண்ணின் மேல் ரத்தம் வழிந்ததால் பார்வை மங்கலாகத் தெரிந்தது. அவன் வெறி கொண்டவனைப்போல் "இனி என்ன?" என்றுன். இதற்குள் பின்னுலிருந்து யாரோ வந்து அவனைப் பிடித்துக்கொண்டார்கள். திரும்பிப் பார்த்தான்; மனைவி. "நீ வந்துவிட்டாயா?" என்றுன் அழுதுகொண்டே. அவள் தோளில் தலையைச் சாய்த்துக்கொண்டு அவனும் மூர்ச்சையானுன்

ஸுரமா வேகமாக மேலே ஓடிவருவதைக் கண்டு, பிரதுல் ஆச்சரியமும் சந்தேகமும் கொண்டாள். ஆகையால் பேசாமல் அவளுக்குப் பின்னுல் வந்து கதவருகே மறைந்து நின்றிருந்தாள். சகல விஷயங்களையும் கேட்டாள். எல்லாவற்றையும் பார்த்தாள். அநேக உண்மைகள் அவள் மனதிற்கு ஸூரிய வெளிச்சத்தைப்போல் ஸ்பஷ்டமாக விளங்கின. அவள் மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது. கண்கள் பஞ்சடைந்தன. தன்னைச் சமாளித்துக்கொண்டு இந்த ஆபத்துக் காலத்தில் கணவன் தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டாள்.

# 9

ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு நினைவு வந்தபோது, "அண்ணாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது!" என்று கேட்டாள் ஸுரமா.

"சௌகரியமாக இருக்கிறது!" என்றாள் வேலைக்காரி.

"நான் பார்த்துவிட்டு வரட்டுமா?" என்று சொல்லிக் கொண்டே ஸுரமா எழுந்தாள். ஆனால் படுத்துவிட்டாள்.

"நீ ரொம்பப் பலவீனமாய் இருக்கிறாய் அம்மா, ஜுரம் வேறு வந்திருக்கிறது. எழுந்திருக்காதே, டாக்டர் சொல்லி இருக்கிறார்!" என்றாள்.

யக்ஞதத்தன் பார்க்க வருவான், மதனி வருவாள், என்று எதிர்பார்த்தாள் ஸுரமா. ஒரு நாள், இரண்டு நாள் என்று ஒரு வாரம் கழிந்தது. ஒருவரும் வரவில்லை. யாரும் தகவலும் சொல்லவில்லை.

ஜுரம் நின்றுவிட்டது. ஆனால் பலவீனம் அதிகமாய் இருந்தது. எழுந்திருக்க முயற்சித்தால் எழுந்திருக்கலாம். ஆனால் அவமானத்தினால் எழுந்திருக்க மனம் வரவில்லை. அவள் தன் மனத்திற்குள்ளேயே தேம்பித் தேம்பி அழலானாள். கண்களைத் துடைத்துக்கொண்டு தன்னுடைய 'பிரகாசன், சாயா' கதையை நினைக்கலானாள்.

தீவிரமான ஒளியையும் ஆழ்ந்த சாயையையும் வைத்துக்கொண்டு அவர்கள் விளையாட்டை ஆரம்பித்தார்கள். இப்பொழுது பிரகாசம் அணைந்துகொண்டிருக்கிறது. மத்தியான சூரியன் மேற்கே சாய்ந்துவிட்டான். ஆகையால் ஆழ்ந்த சாயை ஸ்பஷ்டமற்று விகாரமாகப் பிரேதத்தைப் போல் ஆகிவிட்டது. இப்பொழுது அந்தச் சாயை அறியாத ஓர் அந்தகாரத்தில் சென்று ஒடுங்கிவிட மெள்ள

மெள்ள நழுவிக்கொண்டிருந்தது. அழுதுகொண்டே ஸுரமா தூங்கிவிட்டாள்.

உடம்பில் தன் சுடு கரங்களை வைத்து யாரோ, "ஜீஜி!" என்றழைத்தார்கள்.

ஸுரமா எழுந்து உட்கார்ந்தாள். "இதென்ன மன்னி?" என்று கேட்டாள்.

அவள் கண்கள் சிவந்திருந்தன. முகம் வறண்டு போயிருந்தது. உதடுகள் கறுத்திருந்தன. ஸுரமா மறுபடியும் "ஏண்டி பிரதுல், என்ன உடம்பு உனக்கு?" என்று கேட்டாள்.

"எனக்கு என்ன உடம்பு? நீ என்னை இந்த வீட்டுக்கு அழைத்து வந்தாய். ஆகையால் உன்னிடம் சொல்லிக் கொள்ள வந்திருக்கிறேன். ஜீஜி! எனக்கு விடைகொடு. நான் போகிறேன்!" என்றாள்.

"ஏன் அம்மா? எங்கே போகப் போகிறாய்?"

பிரதுல் ஸுரமாவின் பாதங்களில் தலை வைத்துத் தரையில் படுத்து நமஸ்காரம் செய்தாள்.

ஸுரமா பார்த்தாள். நாட்டுப்பெண்ணின் உடல் நெருப்புப்போல் கொதித்தது. "இதென்ன? உனக்கு நல்ல ஜுரம் வந்திருக்கிறதே?" என்றாள். இதற்குள் வேலைக்காரி கூவிக்கொண்டே ஓடி வந்தாள், "ஜீஜி! நாட்டுப்பெண் எங்கே? அடியம்மா! ஜுரவேகத்தில் ஓடி வந்து விட்டாள். இன்று எட்டு நாட்களாகப் பிரக்ஞையற்றுக் கிடந்தாள். அம்மா! எப்படி வந்தாள் இங்கே?" என்றாள்.

"எட்டு நாட்களாகவா ஜுரம்? டாக்டர் வந்து பார்த்தாரா?"

"ஒருவரும் இல்லை அம்மா! முந்தா நாள் காலையில் கூட நாட்டுப்பெண் குழாயடியில் அரை மணி நேரம்

தலையை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள், எவ்வளவோ தடுத்தேன், கேட்கவில்லை" என்றாள்.

*　　*　　*

சாயங்காலம் ஸுரமா யக்ஞதத்தன் அறைக்குச் சென்று அழுதுகொண்டே, "அண்ணா! மன்னி இனிப் பிழைப்பது கடினம்!" என்றாள்.

"பிழைப்பது கடினமா? ஏன்?"

"என் அறைக்கு வந்து பார். அண்ணா! இனி அவள் பிழைப்பது கடினம்."

இரண்டொரு டாக்டர்கள் வந்து, "பலமான ஜன்னி பிறந்திருக்கிறது" என்று கூறி, இரவு பூராவும் வீணாகச் சிரமப்பட்டு விட்டுக் காலையில் சென்றார்கள்.

இரவு பூராவும் யக்ஞதத்தன் மனைவியின் தலைமாட்டருகே உட்கார்ந்திருந்தான். பல தடவை அவள் முகத்தருகே தன் முகத்தைக்கொண்டு சென்றான். ஆனால் பிரதுவால் ஒன்றையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

டாக்டர்கள் சென்றபிறகு யக்ஞதத்தன் அழலானான். "பிரதுல், ஒரு தரம் கண்திறந்து பார். ஒரு தரம் சொல், மன்னித்துவிட்டேனென்று!" என்று கதறினான்.

ஸுரமா காலருகே அமர்ந்து புடவைத் தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டு விளக்கமற்ற குறலில் "மன்னி, ஏன் இம்மாதிரியான தண்டனை அளித்துவிட்டுச் செல்கிறாய்?" என்றாள்.

ஆனால் யார் பேசுகிறார்கள்? மானாவமானம், ஆதரவு, அனாதரவு இவைகளைச் சட்டை செய்யாமல் இவ்வுலகை விட்டு அனந்தத்தில் சென்று கலந்துவிட்டாள் பிரதுல் குமாரி.

*　　*　　*

"அண்ணா எங்கே?" என்றாள் ஸுரமா.

"நேற்று எங்கோ மேற்கே சென்றார்!" என்றாள் வேலைக்காரி.

"எப்பொழுது வருவார்!"

"தெரியாது, அநேகமாகச் சமீபத்தில் வரமாட்டார்!"

"நான் எங்கே இருப்பது?"

"உனக்கு வேண்டிய மட்டும் பணம் கொடுக்கும்படி குமாஸ்தாவிடம் சொல்லி இருக்கிறார். உனக்கு எங்கே இஷ்டமோ அங்கே இருக்கலாம்!"

ஸுரமா ஆகாசத்தைப் பார்த்து, "கண்டேன். உலகத்தின் பிரகாசம் அணைந்துவிட்டது. சூரியன் இல்லை, சந்திரன் இல்லை; ஒரு நக்ஷத்திரம்கூடத் தென்படவில்லை. அக்கம் பக்கம் பார்த்தேன். ஸ்பஷ்டமற்ற அந்தச் சாயை கூடத் தென்படவில்லை. எங்கே சென்று விட்டது அது? நாற்புறமும் கோர அந்தகாரமாக இருக்கிறது. ஹிருதயம் நின்று விடும்போல் இருக்கிறது. கண்கள் மங்குகின்றன. விழிகள் நின்றுவிட்டன!" என்று கதறினாள்.

"ஜீஜி!" என்று அழைத்தாள் வேலைக்காரி. ஸுரமா மேலே பார்த்துக்கொண்டே "யக்ஞ அண்ணா!" என்றாள். பிறகு மெள்ளக் கீழே சாய்ந்தாள்.

# சித்திரம்

இந்தக் கதை நிகழ்ந்த காலத்தில் பிரும்மதேசம் (பர்மா) ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படவில்லை. அப்பொழுது அதற்குத் தனியாக ராஜாவும், ராணியும் இருந்தனர். மந்திரி, பிரதானி சதுரங்கசேனை யாவும் இருந்தன. அவர்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஆட்சி புரிந்தார்கள்.

மாண்டலே அதற்குத் தலைநகராக இருந்தது. ஆனால் ராஜவம்சத்தைச் சேர்ந்த பலர் தேசத்தின் வெவ்வேறு நகரங்களில் வசித்துவந்தனர். அவர்களில் ஒருவன் வெகு நாட்களுக்கு முன்பே பெகுவுக்குத் தெற்கே ஐந்து குரோச தூரத்தில் இமேதின் என்ற கிராமத்தில் குடியேறி வசித்து வந்தான்.

அவனுக்கு பெரிய மாளிகை இருந்தது. உத்தியான வனம் இருந்தது. போதுமான ஆஸ்தி இருந்தது. அவன் ஒரு பெரிய ஜமீன்தாரனாக விளங்கினான். திடீரென்று ஒருநாள் பரலோகத்திலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. அப்பொழுது அவன் தன் நண்பனை அழைத்து, "அப்பா, பாகோ! உன் மகனுக்கு என் மகளை மணம்செய்து கொடுக்கவேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அந்தச் சுபகாரியத்தை என் கண்களால் காணக் கொடுத்து வைக்கவில்லை. மாசோயேயை விட்டுவிட்டுச் செல்கிறேன். கவனித்துக்கொள்!" என்றான்.

"இதைவிட அதிகமாக ஒன்றும் சொல்லவேண்டியதில்லை, அது அவசியமும் இல்லை" என்று அவன் எண்ணினான். பாகோ, அவனுடைய பால்ய நண்பன். ஒரு சமயம் அவனும் பணக்காரனாக இருந்தான். ஆனால் கோயில் கட்-

டியதாலும், பிக்ஷுக்களுக்கு ஏராளமாக அன்னதானம் செய்ததாலும் தன் சொத்துக்கள் யாவற்றையும் அவன் இழந்தான். அது மாத்திரமல்ல; கடன்காரனும் ஆனன். ஆயினும் அவனிடம் தன் மகளை ஒப்பிக்க இவன் சற்றும் தயங்கவில்லை. தவிர வாழ்க்கையில் இது ஒரு பொன்னன தருணம் என்றும் கருதினன். ஆகையால் பயமின்றித் தன் மகளை அவனிடம் ஒப்பித்துவிட்டுச் சென்றன்.

ஆனல், பாகோ இந்தப் பாரத்தை அதிக நாள் சுமக்க வில்லை. அவனுக்கும் யமலோகத்திலிருந்து 'ஸம்மன்' வந்து விட்டது. அந்த உத்தரவைச் சிரமேல்தரித்து வருஷச் சக்கரம் பூராவும் சுழலும் முன்பே அவன் இவ்வுலக வாழ்வை நீத்தான்.

ஏழைமையடைந்த இந்தத் தர்மாத்மாவிடம் கிராமத்து ஜனங்கள் மிகுந்த பக்தியும் மதிப்பும் வைத்திருந்தனர். ஆகையால் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் அவனுடைய மரண விழாவைக் கொண்டாடினர்கள்.

பாகோவின் சவத்தைப் புஷ்ப மாலைகளாலும் சந்தனத்தாலும் அலங்கரித்துக் கட்டிலில் வைத்தார்கள். அதன் முன் வேடிக்கைகள், ஆடல்பாடல், விருந்து முதலிய ஆர்ப்பாட்டங்கள் இரவு பகல் இடைவிடாது நடந்தன. இவைகளுக்கு ஒரு முடிவே இல்லையோ என்று கூடத் தோன்றியது.

பித்ருசோகத்தின் மிகுதியால் இந்த ஆனந்தத்திலிருந்து சற்று ஒதுங்கி இருக்க விரும்பினன் பாதின். ஆகையால், ஜனசந்தடியற்ற இடத்தில் ஒரு மரத்தடியில் சென்றமர்ந்து அழலானன். திடீரென்று திரும்பிப் பார்த்தான். மாசோயே பின்னல் நின்றுகொண்டிருந்தாள். அவள் பேசாமல் அவன் கண்களைத் துடைத்துவிட்டு அவனருகே அமர்ந்தாள். பிறகு அவன் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, "அப்பா என்னவோ இறந்துவிட்டார்.

ஆனால் உன்னுடைய மாசோயே உயிருடன் இருக்கிறாள்; கவலைப்படாதே!" என்றாள்.

## 2

**பா**தின் சித்திரம் எழுதுவான்; தான் எழுதிய கடைசிப் படத்தை ஒரு வியாபாரியின் மூலம் ராஜாவின் தர்பாருக்கு அனுப்பினான். ராஜா சந்தோஷத்துடன் அதை வாங்கிக்கொண்டு விலையுயர்ந்த மோதிரம் ஒன்றைப் பரிசாக அளித்தான்.

சந்தோஷத்தின் மிகுதியால் மாசோயேயின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவள் அவன் அருகே வந்து நின்றுகொண்டு இனிய குரலில், "பாதின், நீ உலகத்தில் சிறந்த சைத்திரிகனாக ஆகிவிடுவாய்!" என்றாள்.

பாதின் சிரித்தான். "அப்படியானால், தந்தையின் கடனைத் தீர்த்துவிடுவேன் என்று தோன்றுகிறது!" என்றான்.

மாசோயேயின் தந்தையிடமும் பாதினின் தந்தை கடன் வாங்கி இருந்தான். ஆகையால் இந்த வார்த்தைகளைக்கேட்டு அவள் லஜ்ஜையடைந்தாள். "நீ அடிக்கடி இப்படிச் சொன்னால் இனி நான் உன்னிடம் வரமாட்டேன்" என்றாள்.

பாதின் மௌனமானான்; ஆனால் தந்தையின் கடனைத் தீர்க்காவிட்டால் தனக்கு விடுதலை கிடைக்காது என்பதை எண்ணியபோது அவனை அறியாமல் அவன் உள்ளம் குமுறலாயிற்று.

பாதின் நாளுக்குநாள் அதிகமாக உழைக்கலானான். புத்தருடைய வாழ்க்கையிலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்து அதைச் சித்திரமாகத் தீட்டலானான். அன்று பூராவும் தலைநிமிர்ந்து பார்க்கக்கூட அவனுக்கு நேரமில்லை.

பிரதி தினமும் வருவதைப்போல் மாசோயே அன்றும் வந்தாள். பாதின் தூங்கும் அறை, அவன் சாப்பிடும் அறை, அவன் சித்திரம் எழுதும் அறை யாவற்றையும் சுத்தம் செய்து சாமான்களையெல்லாம் சரியாக எடுத்து வைத்து ஒழுங்கு செய்துவிட்டு அவள் போவது வழக்கம். இந்த வேலைகளை யெல்லாம் வேலைக்காரர்களிடம்விட அவளுக்கு இஷ்டமில்லை.

எதிரே ஒரு நிலைக்கண்ணாடி இருந்தது. அதில் பாதினின் பிரதிபிம்பம் தெரிந்தது. மாசோயே வெகு நேரம் வரையில் கண்கொட்டாமல் அதையே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, "பாதின்! நீ என்னைப்போல் பெண்ணாக இருந்திருந்தால் இதற்குள் இந்தத் தேசத்தின் ராணியாகி இருப்பாய்!" என்றாள்.

பாதின் தலை நிமிர்ந்து சிரித்துக்கொண்டே, "ஏன்? என்ன விஷயம், சொல்லேன்!" என்றான்.

"ராஜா உன்னை மணந்துகொண்டு சிம்மாதனத்தில் ஏற்றிவைப்பான். அவனுக்கு அநேக ராணிகள் இருக்கிறார்கள். ஆயினும் இம்மாதிரியான நிறம், தலை மயிர், இவ்வளவு அழகான முகம், இவைகள் அவர்களில் யாருக்காவது இருக்கிறதா?" என்று சொல்லிவிட்டு மீண்டும் அவள் தன் வேலையைக் கவனிக்கலானாள்.

தான் மாண்டலேயில் சித்திரம் எழுதக் கற்றுக்கொண்டபொழுது தன்னைப்பற்றி இப்படிப் பலர் சொன்னது பாதினுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அவன் சிரித்துக்கொண்டு "அழகைத் திருடிக்கொள்ள ஏதாவது வழியிருந்தால் நீ என்னைத் தள்ளிவிட்டு ராஜாவின் பக்கத்தில் சென்று அமர்ந்துவிடுவாய்!" என்றான்.

இந்த வார்த்தைகளுக்கு மாசோயே யாதொரு பதிலும் கூறவில்லை. ஆனால் தனக்குள், "நீ பெண்களைப்போல்

துர்ப்பலமானவன். பெண்களைப்போல் மென்மையான வன். பெண்களைப்போல் அழகு வாய்ந்தவன். உன்னுடைய சௌந்தரியத்திற்கு ஓர் எல்லையே கிடையாது!" என்று சொல்லிக்கொண்டாள்.

இந்த அழகின் முன் அவள் தன்னை மிகவும் துச்சமாக மதிக்கலானாள்.

# 3

பிரதி வருஷமும் வசந்தகால ஆரம்பத்தில் அந்த இமேதின் கிராமத்தில் குதிரைப் பந்தயம் வெகு தடபுடலாக நடப்பது வழக்கம். அன்று அதே பந்தயத்திற்காக வெளி மைதானத்தில் ஏராளமாக ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

மாசோயே மெள்ள மெள்ளப் பாதினின் பக்கத்தில் வந்து நின்றாள். அவன் தன் முழுக் கவனத்தையும் ஓவியம் தீட்டுவதில் செலுத்தி இருந்தான். ஆகையால், அவள் வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை.

"நான் வந்திருக்கிறேன், சற்றுத் தலைநிமிர்ந்து பார்!" என்றாள் மாசோயே.

பாதின் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். பிறகு ஆச்சரியத்துடன், "என்ன இன்றைக்குப் பிரமாதமாக அலங்காரம் செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"பேஷ்! இன்று நமது கிராமத்தில் குதிரைப் பந்தயம் என்பது உனக்குத் தெரியவே தெரியாதுபோல் இருக்கிறது. ஜயிப்பவர்கள் எனக்கு மாலையிடுவார்கள்!"

"அப்படியா? நான் ஒன்றையும் கேள்விப்படவில்லையே?" என்று சொல்லிவிட்டு அவன் மறுபடியும் சலாகையை எடுக்கக் கையை நீட்டினான்; இதற்குள் மாசோயே அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "இல்லை,

இல்லை, உனக்குத் தெரியும். நீ எழுந்திரு. எவ்வளவு தாமதம் செய்கிறாய்?" என்றாள்.

இருவருக்கும் சமவயதுதான். பாதின் நாலைந்து மாதம் பெரியவனாக இருப்பான். ஆனால் குழந்தை பருவத்திலிருந்து பத்தொன்பது வயது வரையில் இப்படியே கழித்து விட்டார்கள். விளையாடினார்கள், விவாதித்தார்கள், சண்டை போட்டுக்கொண்டார்கள். ஒருவருக்கொருவர் அன்பும் கொண்டார்கள்.

எதிரே இருந்த கண்ணாடியில் இருவருடைய முகங்களும் அப்பொழுது மலர்ந்த ரோஜா மலர்கள்போல் காட்சியளித்தன. பாதின் அவைகளைக் காட்டி, "இதோ, இதைப் பார்!" என்றான்.

மாசோயே கண நேரம் மௌனமாகத் திருப்தியற்ற பார்வையுடன் அந்த இரண்டு முகங்களையும் பார்த்தாள். தானும் மிகுந்த அழகுடன் இருப்பதாக அன்றுதான் அவளுக்குத் தெரிந்தது. ஆவேசத்தினால் அவள் இரு கண்களும் குவிந்தன. அவள் மெதுவாகக் காதோடு, "நான் சந்திரனின் களங்கம்" என்றாள்.

பாதின் அவள் முகத்தை இன்னும் அருகே இழுத்துக்கொண்டு, "இல்லை, நீ சந்திரனின் களங்கமல்ல. நீ எதற்கும் களங்கம் அல்ல. நீ சந்திரனின் சந்திரிகை. ஒருதரம் நன்றாகப் பார்!" என்றான்.

ஆனால் மாசோயேக்குக் கண்ணைத் திறக்கத் தைரியம் வரவில்லை. அவள் முன்போலவே கண்களை மூடிக்கொண்டிருந்தாள்.

இப்படியே சில விநாடிகள் கழிந்தன. ஆனால் அதே சமயம் ஆண்பெண் இருபாலாரும் அடங்கிய பெரிய கூட்டம் ஒன்று ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும், தெரு வழியே சென்றது. உற்சவத்தில் கலந்துகொள்ளச் சென்

றதுபோலும். மாசோயே படபடப்புடன் எழுந்து நின்று, "புறப்படு, நேரமாகிவிட்டது!" என்றாள்.

"மாசோயே! நான் வருவதென்பது முடியாத காரியம்!"

"ஏன்?"

"இந்தச் சித்திரத்தை ஐந்து தினங்களுக்குள் முடித்துத் தருவதாக வாக்களித்திருக்கிறேன்!"

"வாக்கை நிறைவேற்றாவிட்டால்?"

"அவன் மாண்டலே சென்று விடுவான். சித்திரத்தை வாங்கிக் கொள்ளவும் மாட்டான். பணம் கொடுக்கவும் மாட்டான்!"

பணத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் மாசோயே மனக்கஷ்டமும் லஜ்ஜையும் அடைவாள். ஆகையால் அவள் கோபத்துடன் "இருக்கட்டும், அதற்காக இம்மாதிரி ஓய்வின்றி உழைக்க உன்னை நான் விடமாட்டேன்!" என்றாள்.

பாதின் இதற்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் தந்தையின் கடன் நினைவுக்கு வந்ததும் அவன் முகத்தில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. மாசோயே இதைக் கவனிக்காமல் இல்லை. ஆகையால் "சித்திரத்தை எனக்கு விற்றுவிடு, நான் இரட்டிப்பு விலை கொடுக்கிறேன்!" என்றாள்.

இந்த விஷயத்தில் பாதினுக்குச் சந்தேகமில்லை. அவன் சிரித்துக்கொண்டே, "ஆனால் இதை நீ என்ன செய்வாய்?" என்று கேட்டான்.

மாசோயே கழுத்தில் இருந்த மணிமாலையைக் காட்டி 'இதிலுள்ள முத்துக்களாலும், கெம்புகளாலும் இதை அலங்கரிப்பேன். பிறகு இதைப் படுக்கை அறையில் என் கண் எதிரில் தெரியும்படி மாட்டிவைப்பேன்!" என்றாள்.

"அதன் பிறகு என்ன செய்வாய்?"

"அதன் பிறகு, நன்றாக நிலவு விரிந்த இரவில் திறந் திருக்கும் ஜன்னல் வழியாக அதன் சந்திரிகை, தூங்கிக் கொண்டிருக்கும் உன் முகத்தின்மீது விளையாடும்போது-"

"அதன் பிறகு ?"

"அதன் பிறகு உன் தூக்கத்தைக் கலைத்து—"

வார்த்தை முடிவடையவில்லை. இதற்குள் கீழே காத் துக்கொண்டிருந்த மாசோயேயின் வண்டிக்காரனின் குரல் கேட்டது.

பாதின் பதட்டத்துடன், "இதன் பிறகு உள்ள விஷ யங்களைப் பிறகு கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது வேண்டாம். உனக்கு நேரமாகிவிட்டது. நீ சீக்கிரம் போ!" என்றான்.

ஆனால் இம்மாதிரி நேரம் கழிவதைப்பற்றி மாசோ யேக்குச் சற்றும் கவலையே கிடையாது. அவள் இன்னும் நன்றாக உட்கார்ந்துகொண்டு, "என் மனம் சரியாக இல்லை. நான் போகப் போவதில்லை!" என்றாள்.

"போகப் போவதில்லையா ? வாக்குக் கொடுத்திருக் கிறாயே? எல்லோரும் உற்சாகத்துடன் தலைநிமிர்ந்து உன் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள் என்பதை மறந்துவிட்டாயா ?"

மாசோயே பலமாகத் தலையை அசைத்து, "எதிர் பார்க்கட்டும். வாக்குத் தவறுவதில் எனக்கு லஜ்ஜை ஒன்றும் இல்லை. நான் போகவில்லை!" என்றாள்.

"சிவ! சிவா! இம்மாதிரி எங்காவது உண்டா ?"

"அப்படியானால் நீயும் வா!"

"வர முடியுமானால் அவசியம் வருவேன். ஆனால் எனக்காக நீ வாக்குத் தவறும்படி விடமாட்டேன். தாம தம் செய்யாதே, போ!"

அவனுடைய கம்பீரமான முகத்தையும், சாந்தமும் திடமும் நிறைந்த வார்த்தையையும் கண்டு மாசோயே

எழுந்து நின்றுள். அபிமானத்தினுல் அவள் முகம் வாடி யது. "நீ உன் சௌகரியத்திற்காக என்னை அப்புறப் படுத்த விரும்புகிருய். நான் போகிறேன். ஆனுல் இனி மேல் உன்னிடம் வரமாட்டேன்!" என்றுள்.

கணத்திற்குள் பாதினின் திடமான கடமை, அன்பு என்னும் ஜலத்தில் ஆழ்ந்துவிட்டது. அவன் அவளைத் தன்னருகே இழுத்துச் சிரித்துக்கொண்டே, "மாசோயே! இப்படிக் கடுமையான பிரதிக்ஞை ஒன்றையும் செய் யாதே. இதன் பலன் என்ன ஆகும் என்பது எனக்குத் தெரியும்: ஆனுல் இனிமேல் தாமதம் செய்தால் காரியம் நடவாது, செல்!" என்றுன்.

மாசோயே முன்போலவே கடுகடுத்த முகத்துடன் "நான் இல்லாவிட்டால், உன்னுடைய ஊண், உடை, விஷயம் முதல், தூங்கும் விஷயம்வரையில் நீ எவ்வளவு சிரமப்படுவாய் என்பது, எனக்குத் தெரியும். அந்த நிலை மையை என்னுல் சகிக்கமுடியாது. ஆகையால்தான் நீ என்னை இன்று இதைவிட்டுப் போகச் சொல்லுகிருய்!" என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராமலே வேகமாக வெளியே சென்று விட்டாள்.

## 4

**பி**ற்பகலில் மாசோயேயின் அலங்காரம் செய்த மாட்டுவண்டி மைதானத்திற்குள் பிரவேசித்தது. ஜனங் கள் ஆரவாரம் செய்தார்கள்.

அவள் யுவதி, அழகி, விவாகமாகாதவள், தவிர நிறை யச் செல்வம் படைத்தவள். மனிதர்களின் யௌவன ராஜ்யத்தில் அவளுக்கு உயர்ந்த ஸ்தானம் உண்டு. ஆகை யால் இங்கும் அவளுக்குக் கௌரவமான ஆசனம் கிடைத் தது. இன்று அவள் மாலை கொடுக்கப் போகிருள். பிறகு எல்லோருக்கும் முன்னிலையில் எந்தப் பாக்கியசாலி அவள்

கழுத்தில் மாலையிடுகிருனே அவன் அதிர்ஷ்டத்தைக் கண்டு உலகமே பொருமை அடையப்போகிறது.

சிவப்பு வர்ணமுள்ள ஆடைகள் அணிந்து, அலங்கரிக்கப்பட்ட குதிரைகளின்மேல் ஏறி நின்ற வீரர்கள் தங்கள் உற்சாகத்தையும் சஞ்சலத்தையும் சிரமத்துடன் அடக்கிக் கொண்டார்கள். இன்று அவர்களைப் பார்க்கும்போது உலகில் அவர்களால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமே இல்லை என்று தோன்றியது.

மெள்ளச் சமயம் நெருங்கியது. தங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீக்ஷிக்கவந்த அவர்கள் ஒரு வரிசையாக வந்து நின்ருர்கள். மணி ஓசை கேட்டதும் உயிரைத் துச்சமாக மதித்து அவர்கள் தங்கள் குதிரையுடன் பறந்தார்கள்.

இது வீரச்செயல், யுத்தத்தின் அம்சம். மாசோயேயின் தந்தை பாட்டன் எல்லோரும் வீரர்கள். போர் புரிவதுதான் அவர்களுடைய தொழில். அவள் பெண்ணுக இருந்தாலும் அவளுடைய மூதாதையர்களின் வீர ரத்தம் அவள் நரம்புகளில் ஓடிக்கொண்டிருந்தது. ஆகையால் வெற்றியடைந்தவனைத் தன் முழுமனத்துடன் புகழாமல் இருக்க அவளால் முடியவில்லை.

அடுத்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு யுவன் முகம் சிவக்க வேர்வை வழிய, கைநடுங்க அவளுக்கு வெற்றி மாலையை அணிவித்தான். அப்பொழுது மற்ற ஸ்திரீகளுக்கு இதைக்கண்டு பொருமை ஏற்படாமல் இல்லை. திரும்பும்போது மாசோயே அவனைத் தன் வண்டியிலேயே ஏற்றிக்கொண்டாள். தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு தழதழத்த குரலில், "உன் விஷயத்தைப்பற்றி மிகவும் பயந்து விட்டேன். அவ்வளவு பெரிய சுவரைத் தாண்டும்போது கால் வழுக்கிவிடப் போகிறதே என்று கூட எண்ணினேன்!" என்ருள்.

வாலிபன் விநயத்துடன் தலை குனிந்தான். ஆனால் இந்த ஒப்புயர்வற்ற வீரனுடன் ஸாதுவும் சாமர்த்தியம் அற்றவனுமான சைத்திரிகன் பாதினை ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க அவளால் முடியவில்லை.

இந்த யுவனின் பெயர் போகின். இவனும் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவன், செல்வவந்தன், தவிர அவளுக்கு எட்டிய உறவு என்பதும் அவன் வார்த்தையினின்றும் வெளியாயிற்று. அன்று மாசோயே அநேகரைச் சாப்பிட அழைத்திருந்தாள். அவர்களும் இன்னும் தொலைவிலிருந்து வந்தவர்களும் வண்டியின் பின்னால் வந்துகொண்டிருந்தனர். அவர்களுடைய கூட்டத்தினால் ஏற்பட்ட புழுதி வானத்தைத் திரையிட்டது. அவர்களுடைய சங்கீதம் அந்த மாலை நேரத்தில் திசையைக் கிடுகிடுக்கச் செய்தது.

இந்தப் பயங்கரமான ஜனக்கூட்டம் பாதின் வீட்டு வாசல் வழியாகச் செல்லும்போது அவன் சில நிமிஷங்கள் தன் வேலையை நிறுத்திவிட்டு ஜன்னலருகே வந்து நின்றுகொண்டு பேசாமல் பார்க்கலானான்.

இந்த விருந்துக்கு மறுநாள் மாசோயே பாதினிடம், "நேற்றுச் சாயங்காலவேளை மிகுந்த ஆனந்தத்துடன் கழிந்தது. தயைவைத்து வெகுபேர் வந்திருந்தனர். உனக்கு நேரமில்லை. ஆகையால் நீ மாத்திரம் வரவில்லை!" என்றாள்.

அந்தச் சித்திரத்தை முடித்துவிட வேண்டுமென்று அவன் முழுமனத்துடன் வேலையில் முனைந்திருந்தான். ஆகையால் தலை நிமிராமலே, "நல்லதாயிற்று!" என்று சொல்லிவிட்டு மீண்டும் தன் வேலையைக் கவனிக்கலானான்.

மாசோயே ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப்போனாள். வேலைத் தொந்தரவினால் முதல் நாள் கொண்டாட்டத்தில்

பாதின் கலந்துகொள்ளவில்லை. ஆகையால் அவனுடன் வெகுநேரம் வரையில் பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டு அவள் வந்திருந்தாள். ஆனால் இங்கே அதற்கு நேர்மாருக இருந்தது. தனியாகப் பிரலாபிக்கலாம். ஆனால் தனியாக அளவளாவிப் பேசமுடியுமா? ஆகையால் அவள் செயலற்று உட்கார்ந்திருந்தாள். எதிர்த் தரப்பின் அசட்டையையும் மௌனத்தையும் குலைத்து உள்ளே பிரவேசிக்கமுடியும் என்ற நம்பிக்கைகூட அவளுக்கு ஏற்படவில்லை. தினசரி அவள் செய்துவிட்டுப் போகும் வேலைகள் அப்படியே கிடந்தன. எதையும் செய்ய அவளுக்குப் பிடிக்கவில்லை, இம்மாதிரியே வெகு நேரம் கழிந்தது. பாதின் ஒருமுறைகூட அவளை நிமிர்ந்து பார்க்கவே இல்லை. ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நேற்றைய விஷயத்தில் தனக்குச் சற்றும் ஆர்வமில்லாதவனைப் போலும் தனக்கு மூச்சுவிடக்கூட நேரமில்லாதவனைப் போலும் காணப்பட்டான்.

வெகுநேரம் வரையில் ஒன்றும் தோன்ருமல் லஜ்ஜையுடன் உட்கார்ந்திருந்தாள் மாசோயே. கடைசியில் களைப்புடன் எழுந்திருந்து, மிருதுவான குரலில், "சரி, நான் போய் வருகிறேன்!" என்ருள்.

பாதின் சித்திரத்தில் கவனம் செலுத்தியபடியே "சரி, போய்வா!" என்ருன்.

போகும்பொழுது 'இந்த மனிதனின் உள்ளக் கிடக்கை எனக்கு விளங்கிவிட்டது' என்று எண்ணினுள் மாசோயே. 'கேட்போமா' என்று ஒருமுறை எண்ணினுள். ஆனால் வாய் திறந்து கேட்கமுடியவில்லை. பேசாமல் போய்விட்டாள்.

வீட்டுக்குச் சென்ருள். அங்கே போகின் உட்கார்ந்திருந்தான். முதல் நாள் இரவு நடந்த விருந்தைப்

பாராட்டிவிட்டுப் போகவே அவன் வந்திருந்தான். வந்திருந்த அதிதியை மாசோயே உபசரித்தாள்.

அவன் முதலில் மாசோயேயின் ஐசுவரியத்தைப் பற்றிப் பேசினான். பிறகு அவள் வம்சத்தைப் பற்றியும் அவள் தந்தையின் கீர்த்தியைப்பற்றியும் அவருக்கு அரண்மனையில் இருந்த செல்வாக்கைப் பற்றியும் பேசினான். இன்னும் ஏதேதோ பேசினான்.

இவைகளில் சிலவற்றை அவள் கவனத்துடன் கேட்டாள். சிலவற்றிற்குச் செவிசாய்க்கவே இல்லை. ஆனால் அவன் குதிரை சவாரி செய்யும் வீரன் மாத்திரமல்ல; மிகுந்த கபடனும்கூட. மாசோயேயின் இந்த அலட்சியத்தை அவன் அறிந்துகொண்டான். மாண்டலேயின் ராஜ குடும்பத்தைப்பற்றி முதலில் பேச்சை ஆரம்பித்தான். பிறகு அவளுடைய அழகைப்பற்றி வர்ணிக்கலானான். அடிக்கடி அவளுடைய அழகையும் யௌவனத்தையும் புகழ்ந்து பாடலானான். இவைகளையெல்லாம் கேட்கும்போது அவளுக்கு லஜ்ஜையாகத்தான் இருந்தது. ஆயினும் இவைகளால் ஒரு விதமான ஆனந்தத்தையும் கௌரவத்தையும் அவள் அனுபவிக்காமல் இல்லை.

சம்பாஷணை முடிந்தபிறகு போகின் விடைபெற்றுக் கொண்டான். அப்பொழுது அன்றிரவும் அவனைச் சாப்பிட வரும்படி அழைத்தாள் மாசோயே.

ஆனால் அவன் சென்ற பிறகு அவனுடைய பேச்சு வார்த்தைகளை எண்ணி எண்ணி அவள் மனம் புண்பட்டது. அவனை விருந்துக்கு ஏன் அழைத்தோம் என்ற வருத்தமும் ஏற்பட்டது. அவள் உடனே வேலைக்காரனை அழைத்து இன்னும் சில நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அழைப்பு அனுப்பினாள். குறிப்பிட்ட நேரத்தில் விருந்தினர் யாவரும் வந்து சேர்ந்தனர். அன்றும் சிரிப்பு, வேடிக்கை, ஆடல், பாடல் யாவும் நடைபெற்றன. இவை

களெல்லாம் முடிவடையும்போது இரவு வெகுநேரம் ஆகிவிட்டது.

களைப்பும் சோர்வும் அடைந்து மாசோயே படுக்கைக்குச் சென்றாள். ஆனால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. இவ்வளவு நேரம் வரையில் யாருடன் அவள் பொழுதைக் கழித்தாளோ அவர்களில் ஒருவராவது அவள் நினைவுக்கு வரவில்லை. நடந்த நிகழ்ச்சிகள் யாவும் ஏதோ கழிந்த யுகத்தில் நடந்தவைபோலும், ரஸமற்றனவாகவுமே அவளுக்குத் தோன்றின. திரும்பத் திரும்ப அவள் மனத்திற்கு ஒரே ஒரு மனிதனைப்பற்றிய நினைவுதான் எழுந்தது. அவன் அவளுடைய உத்யானவனத்தின் ஒரு மூலையில் உள்ள ஜன சந்தடியற்ற ஒரு வீட்டில் இருந்தான். அன்றைய இந்த ஆர்ப்பாட்டங்களில் எதுவும் அவன் செவிகள்வரை எட்டவே இல்லை.

## 5

வெகுநாள் பழக்கத்தின் காரணமாய் பொழுது விடிந்ததும் மாசோயேயின் மனம் பாதினின் பக்கம் விரைந்தது. அவள் அவனுடைய அறைக்குச் சென்று அமர்ந்தாள். வழக்கம்போல அன்றும் அவன் 'வா' என்று சொல்லி மரியாதை தெரிவித்துவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கலானான். இந்த மனிதன் மௌனமாகத் தன் அருகே அமர்ந்திருந்தாலும் நம்மைவிட்டு வெகு தொலைவில் சென்றுவிட்டான் என்று தோன்றியது மாசோயேவுக்கு. வெகுநேரம் வரையில் என்ன பேசுவதென்று அவளுக்குத் தோன்றவில்லை. பிறகு சங்கோசத்தை விட்டுவிட்டு, "இன்னும் வேலை எவ்வளவு பாக்கி இருக்கிறது?" என்று கேட்டாள்.

"நிறைய இருக்கிறது!"

"அப்படியானால் இந்த இரண்டு நாட்களாக என்ன செய்தாய்?"

பாதின் இதற்குப் பதில் சொல்லாமல் புகைச் சுருட்டுகள் நிறைந்த பெட்டியை அவள் முன் நீட்டி, "இந்தச் சாராய நாற்றத்தை என்னால் சகிக்க முடியவில்லை" என்றான்.

மாசோயே இந்த ஜாடையை அறிந்துகொண்டாள். அவள் ஆத்திரத்துடன் தடாலென்று பெட்டியைத் தட்டிவிட்டு விட்டு "நான் அதிகாலையில் சுருட்டுப் பிடிப்பதில்லை. சாராய நாற்றத்தை ஒளிக்கவும் முயற்சிப்பதில்லை. நான் அப்படி அற்பத்தனமான குலத்தில் பிறந்தவளும் அல்ல!" என்றாள்.

பாதின் தலை நிமிர்ந்து சாந்தமான குரலில், "ஒருவேளை அது உன் ஆடைகளில் சிந்திவிட்டதோ என்னமோ? சாராய நாற்றத்தைப்பற்றி நான் இட்டுக் கட்டிப் பேசவில்லை!" என்றான்.

மாசோயே மின்னலைப்போல் எழுந்து நின்றாள் "நீ மகா மோசக்காரன்; பொறாமைக்காரன். ஆகையால்தான் என்னைக் காரணமின்றி இம்மாதிரி அவமானம் செய்தாய். நல்லது! இனி என் துணி நாற்றம் உன் வீட்டில் ஒரு நாளும் வராதபடி செய்துவிடுகிறேன்!" என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பார்க்காமலே வேகமாக அவ்விடம் விட்டு அவள் செல்லலானாள். இதற்குள் பாதின் அவளை அழைத்துத் தணிவான குரலில், "இதுவரையில் ஒருவரும் என்னை மோசக்காரனென்றோ பொறாமைக்காரனென்றோ சொன்னது கிடையாது. நீ ஒரேயடியாய்ப் படுவீழ்ச்சியின் மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கிறாய். ஆகையால் உன்னைச் சற்று ஜாக்கிரதைப் படுத்தினேன்!" என்றான்.

மாசோயே திரும்பி நின்றாள், "நான் படுவீழ்ச்சியின்

மார்க்கத்திலா சென்று கொண்டிருக்கிறேன்?" என்று கேட்டாள்.

"எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது!"

"நல்லது; உன்னுடைய புத்திமதியை நீயே வைத்துக்கொள். என் தந்தை எனக்குச் சாபத்தை வைத்துவிட்டுச் செல்லவில்லை. நிறைய ஆசிகளை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். என்னுடன் உனக்கு ஒத்துக்கொள்ளாது!" என்று சொல்லிவிட்டு அவள் சென்றுவிட்டாள். ஆனால் பாதின் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டான். எந்தக் காரணத்தை முன்னிட்டாவது ஒருவர் மற்றவருடைய உள்ளத்தை இவ்வாறு தாக்கமுடியுமா? நீண்ட நாளைய அன்பு இம்மாதிரி ஒரே நாளில் விஷமாக மாறிவிடுமா? இவைகளை அவனால் யோசிக்கவே முடியவில்லை.

மாசோயே வீட்டுக்கு வந்து பார்த்தாள். போகின் உட்கார்ந்திருந்தான். அவளைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்று இனிமையாகப் புன்னகை செய்தான்.

அவன் புன்னகையைக் கண்டு மாசோயேயின் புருவங்கள் அவளை அறியாமல் விரிந்தன. "ஏன் ஏதாவது முக்கியமான வேலையாக வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை, அப்படி முக்கியமான வேலை ஒன்றும்—"

"சரிதான், அப்படியானால் இப்பொழுது எனக்கு அவகாசமில்லை!" என்று சொல்லிவிட்டு மாசோயே படி ஏறி மாடிக்குச் செல்லலானாள்.

முதல் நாள் இரவு நடந்த சம்பவங்களை எண்ணிப் போகின் மூளை குழம்பிப் போனான். ஆனாலும் வேலைக்காரன் கையில் ஒரு ரூபாயை வைத்து அழுத்திவிட்டுச் 'சீட்டி' அடித்துக்கொண்டே அவன் வெளியே சென்றுவிட்டான்.

# 6

சிறு வயதிலிருந்து ஒரு நிமிஷம்கூட ஒருவரை ஒருவர் பிரிந்ததில்லை. ஆனால் விதியின் கூத்தினால் ஒரு மாதமாக ஒருவரை ஒருவர் முகாலோபனம் கூடச் செய்து கொள்ளவில்லை.

மாசோயே தனக்குள் 'இது நல்லதாயிற்று. இவ்வளவு நாட்கள் வரையில் என்னைப் பிணித்திருந்த மோகவலை அறுந்து சிதறிவிட்டது. இனி அவனுக்கும் எனக்கும் துளிக் கூடச் சம்பந்தமில்லை' என்று எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டாள். அவள் பணக்காரப் பெண். தந்தை இருக்கும்போதே இம்மாதிரிக் காரியங்களைச் செய்யவிரும்பினாள். ஆனால் அடக்கமும், கண்டிப்பான குணமும் உள்ள பாதினின் கோபத்திற்குப் பயந்தே பேசாமல் இருந்தாள். ஆனால் இன்று அவள் சுதந்திரமானவள். அவள் தனக்குத் தானே யஜமானி. ஒருவருக்கும் அவள் பதில் சொல்ல வேண்டியதில்லை. இந்த ஒரு விஷயத்தைவைத்துக்கொண்டு தான் இரவு பகலாக அவள் தன் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தாள். ஆனால் ஒரு நாளாவது அவள் தன் உள்ளத்தின் ரகசிய அறையின் கதவைத் திறந்து அங்கே என்ன இருக்கிறது என்று பார்க்கவே இல்லை. பார்த்திருந்தால்-பார்க்க முடியுமானால் அவள் தனக்குத்தானே அடங்கியிருப்பாள். அந்த ரகசியமான ஏகாந்த அறையில் இரவு பகலாக இருவரும் எதிர் எதிராக உட்கார்ந்திருக்கிறார்கள். இருவர் கண்களிலும் கண்ணீர் வழிகிறது. இருவரும் மௌனமாக இருக்கிறார்கள்.

தன் வாழ்க்கையில் எழுந்த இந்தச் சோகச் சித்திரம் அவள் மனக்கண்முன் தென்படவில்லை. ஆகையால் அவள் வீட்டில் அடிக்கடி ஆடல்பாடல்கள் நடக்கலாயின.

தோல்வியின் வெட்கம். அவளைத் தரையோடு தரையாக்கி விடவில்லை.

ஆனால் இன்றையதினம் மட்டும் ஏன் அப்படிக் கழிய வில்லை.

ஒவ்வொரு வருஷமும் தன்னுடைய பிறந்த நாளை அவள் தடபுடலாகக் கொண்டாடுவது வழக்கம். அன்று பெரியவிருந்து நடப்பதுண்டு. இந்த வருஷமும் அந்த வைபவம் மிகுந்த ஆடம்பரத்துடன் ஆரம்பமாயிற்று. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து கலந்து கொண்டார்கள். ஆனால் அவளுக்கு ஒரு வேலையிலும் மனம் கொள்ளவில்லை. காலையில் இருந்தே இவைகளெல்லாம் 'வீண்,வீண் சிரமம்' என்றே அவளுக்குத் தோன்றின. இவ்வளவு தினங்களுக்குப் பிறகுதான் 'அவனும் உலகத்தில் மற்றவர்களைப்போல் மனிதன்தான். அவனுக்கும் பொறுமை உண்டு. நமது வீட்டில் நடக்கும் இந்தத் தடபுடல்களெல்லாம் அவன் காதுகள் வரை எட்டாவா? இதனால் அவன் வேலைகள் ஒன்றும் தடைப்படாவா?' என்று எண்ணலானாள்.

"ஒருவேளை அவன் தன் சலாகையை எறிந்து விட்டுச் சிறிதுநேரம் பேசாமல் உட்கார்ந்திருப்பான். சற்றுச் சஞ்சலமடைந்து வீட்டிலேயே குறுக்கும் நெடுக்கும் நடப்பான். இரவு முழுவதும் தூக்கமின்றிப் படுக்கையில் கிடந்து புரண்டு மனம் கொதிப்பான். சரி. இவைகளைப் பற்றி நமக்கென்ன?" என்று எண்ணி ஒருவாறு மனம் தெளிந்தாள் மாசோயே.

மாசோயே கற்பனையிலேயே ஒருவிதமான ஆனந்தத்தை அனுபவித்து வந்தாள். ஆனால் இன்று திடீரென்று 'அவைகளில் ஒன்றும் இல்லை. எல்லாம் பொய், ஏமாற்றம்' என்றே தோன்றின. துர்ப்பலமான பாதினின் தேகம்

அசைக்க முடியாத மலையாக ஆகிவிட்டது. எந்தப் புயலும் அதைத் துளிகூட அசைக்க முடியவில்லை.

பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து கொண்டுதான் இருந்தன. போகின்தான் சகல காரியங்களையும் இருந்து நடத்தினான். இதைக் கண்ட சிலர் ரகசியமாக 'இவனே ஒரு நாள் இந்த வீட்டுக்கு எஜமானன் ஆவான். அந்த நாள் இன்னும் அதிக தூரத்தில் இல்லை' என்று பேசிக்கொண்டார்கள்.

கிராமத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் வீடு நிறைய வந்துகூடி இருந்தார்கள். நாற்புறமும் ஒரே சந்தோஷ ஆரவாரமாக இருந்தது. ஆனால் மாசோயே மட்டும் வெறுப்புடனும் மனச் சோர்வுடனும் காணப்பட்டாள். அவள் முகத்தில் வருத்தத்தின் சாயை நடமாடியது. இந்த வருத்தம் வெளி மனிதர்கள் ஒருவருக்கும் தென்படா விட்டாலும் வீட்டிலுள்ள பழைய வேலைக்காரர்கள் இரண்டொருவருக்குத் தெரியாமல் இல்லை. 'இவர்களெல்லாம் எதற்கு? இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குப் பிரதி வருஷமும் ஒருவன் வருவான். மௌனமாக இவள் கழுத்தில் மாலையிட்டு இவளை ஆசீர்வதிப்பான். இன்று அந்த மனிதன் வரவில்லை. மாலையும் இல்லை. ஆசீர்வாதமும் இல்லை! ஏன் இப்படி?' என்று எண்ணினார்கள்.

மாசோயேயின் தந்தைக்கு ஒரு நண்பர் இருந்தார். அந்தக் கிழவர் வந்து, "அம்மா குழந்தாய்? எங்கே இன்று அவனைக் காணவில்லையே?" என்று கேட்டார். அந்தக் கிழவரின் வீடு அடுத்த கிராமத்தில் இருந்தது. பாதினுக்கும் மாசோயேயுக்கும் உள்ள மனவருத்தம் அவருக்குத் தெரியாது. இங்கே வந்த பிறகுதான் வேலைக்காரர்கள் மூலம் விஷயத்தைக் கேள்விப்பட்டார். அதனால் தான் கேட்டார்.

மாசோயே வெறுப்புடன், "அவனைப் பார்க்கவேண்டு மானால் அவன் வீட்டுக்குச் செல்வதுதானே? இங்கே ஏன் வந்தீர்கள்?" என்றாள்.

"நல்லது, செல்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே அந்தக் கிழவர் செல்லலானார். போகும்போது தனக்குள், "அவனை மாத்திரம் பார்க்க வரவில்லை. உங்கள் இருவரையும் சேர்ந்தாற் போல் பார்க்கத்தான் இவ்வளவு தூரம் வந்தேன்!" என்று சொல்லிக்கொண்டார்.

கிழவரின் மனோபாவம் மாசோயேயுக்குத் தெரியாமல் இல்லை. அப்பொழுது முதல் ஒருவிதமான சங்கடத்துடனேயே அவள் நேரம் கழியலாயிற்று. திடீரென்று விளக்கமற்ற ஒரு குரலைக் கேட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தாள். பாதின் எதிரே நின்றுகொண்டிருந்தான். மின்னலால் தாக்கப்பட்டதைப்போல் இருந்தது அவளுக்கு. ஆனால் கணப்பொழுதில் தன்னைச் சமாளித்துக்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு மறுபக்கம் சென்றாள்.

சற்று நேரத்திற்குப் பிறகு கிழவர் வந்தார். "குழந்தாய்! எப்படியாவது இருக்கட்டும். பாதின் உன்னுடைய விருந்தாளி. அவனுடன் ஒரு வார்த்தை பேசினால் என்ன?" என்று கேட்டார்.

"அவனை அழைத்து வரும்படி நான் உங்களிடம் சொன்னேனா?"

"இது என் தவறுதான்!" என்று சொல்லிவிட்டு அவர் செல்லலானார். இதற்குள் மாசோயே அவரை அழைத்து, "சரி என்னைத் தவிர இங்கே இன்னும் அநேகர் இருக்கிறார்களே. அவர்களுடன் பேசுவது தானே?" என்றாள்.

"பேசலாம். ஆனால் இனி அதற்கு அவசியமில்லை. அவன் சென்று விட்டான்!"

மாசோயே ஒருகணம் ஒன்றும் தோன்றுமல் நின்றுள். பிறகு, "என் பாக்கியம்! இல்லாவிட்டால் நீங்களாவது அவனைச் சாப்பிடச் சொல்லியிருக்கலாமே!" என்றுள்.

'இல்லே, நான் அவ்வளவு வெட்கம் கெட்டவனல்ல!' என்று சொல்லிவிட்டுக் கிழவர் கோபத்துடன் அவ்விடம் விட்டுச் சென்றுர்.

## 7

இந்த அவமானத்தினுல் பாதினின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. ஆனுல் அவன் ஒருவரையும் குறைகூறவில்லே. தன்னேயே வெறுத்துக்கொண்டு "நல்ல தாயிற்று. என்போன்ற வெட்கம் கெட்டவனுக்கு இது அவசியம் தான்!" என்று சொல்லிக்கொண்டான்.

ஆனுல் இந்த அவசியம் அன்று இரவோடு தீர்ந்து விடவில்லே. இதைவிட இன்னும் கடுமையான அவமானத்தை அடையவேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருந்தது, இது அவனுக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு தெரிந்தது. அந்த அவமானம் அவன் ஆயுள்வரை மறக்க முடியாமல் கரை கடந்ததாக இருந்தது.

இந்தக் கதையின் ஆரம்பத்தில் கூறிய அந்த யசோதரையின் சித்திரம் எழுதிப் பூர்த்தியாயிற்று. ஒரு மாதத்திற்கு மேலாகச் சிரமப்பட்டு அதை எழுதி முடித்தான். அன்று காலே நேரம் முழுவதும் இந்த ஆனந்தத்திலேயே கழிந்தது.

சித்திரம் அரசன் தர்பாருக்குப் போகப் போகிறது. அதை வாங்குபவனும் தகவல் தெரிந்து பணத்துடன் வந்தான். ஆனுல் சித்திரத்தின்மேல் இருந்த துணியை அகற்றியதும் அவன் திடுக்கிட்டுவிட்டான். அவன் சிறந்த ரசிகன். வெகுநேரம் வரையில் கண்கொட்டாமல் சித்திரத்

தையே பார்த்துவிட்டு முடிவில் வருத்தமான குரலில் "இந்தச் சித்திரத்தை நான் அரசனுக்குக் கொடுக்கமுடியாது?" என்ருன்.

பயத்திஞலும் ஆச்சரியத்திஞலும் நிலைகுலைந்தவனுய் "ஏன்?" என்ருன் பாதின்.

"ஏனென்ருல் நான் இந்த முகத்தை அறிவேன். மனிதர்கள் முகத்தை வைத்துத் தேவதைகளின் படத்தை எழுதுவது தேவர்களை அவமதிப்பதாகும். இந்த விஷயம் வெளிக்குத் தெரிந்தால் அரசன் என் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டான்!" என்று கூறிவிட்டு பாதினின் வருத்தம் தேங்கிய கண்களைச் சற்று நேரம் பார்த்துவிட்டுப் புன்னகையுடன், "கொஞ்சம் கவனித்துப் பார்த்தாயாஞல் இது யார் என்பது உனக்கே விளங்கும். இந்தச் சித்திரம் விற்பனை யாகாது!" என்ருன்.

பாதினின் கண்களினின்று முன்இருந்த இருள் விலக ஆரம்பித்து அந்தக் கனவான் சென்ற பிறகும் அவன் ஒன்றும் தோன்ருமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களினின்றும் கண்ணீர் பெருகியது. அவன் இவ்வளவு நாட்களாக மிகுந்த சிரமத்துடன், தன் உள்ளத்தில் குவிந்திருந்த சௌந்தர்யத்தை யெல்லாம் திரட்டி எழுதிய படம் புத்தரின் வாழ்க்கையில் வரும் யசோதரையினுடைய தல்ல. அவன் காதலி மாசோயேயின் படமாகத்தான் இருந்தது.

அவன் கண்களைத் துடைத்துக்கொண்டே தனக்குள், "கடவுளே! என்னை இப்படியா சோதிக்கவேண்டும்? நான் உன்னை என்ன செய்தேன்!" என்று சொல்லிக் கொண்டான்.

## 8

போகின் தைரியத்துடன், "தேவரும் உன்னைக் கண்டு பிரியப்படுவார். நான் என்ன மனிதன்தானே ;" என்ருன்.

மாசோயே அசட்டையாக, "ஆனுல் என்னிடம் அசட்டையாக இருப்பவர்கள் தேவர்களிலும் உயர்ந்தவர்களல்லவா ?" என்று கூறி இந்த விஷயத்தை மேற்கொண்டு வளர்க்காமல், "தர்பாரில் உனக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு என்று கேள்விப்பட்டேன், எனக்காக ஒருகாரியம் செய்வாயா ? சீக்கிரம் ?" என்ருள்.

போகின் உற்சாகத்துடன், " என்ன வேலை ?" என்ருன்.

" ஒரு மனிதன் எனக்கு நிறைய ரூபாய் கொடுக்க வேண்டும். அவன் கொடுக்கவில்லை. இதற்கு தஸ்தாவேஜும் ஒன்றும் இல்லை. இதை வசூல் செய்ய ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா ?"

" ஆஹா ! நிச்சயம் ! நான் அரசாங்க உத்தியோகஸ்தன் என்பது உனக்குத் தெரியாதா ?" என்று கூறி அவன் சிரித்தான்.

இந்தச் சிரிப்பிலேயே பதில் ஸ்பஷ்டமாக வெளியாயிற்று. மாசோயே பதட்டத்துடன் அவன் கையைஅமுக்கி " அப்படியானுல் ஏதாவது வழி செய், இன்றைக்கே. இனி ஒரு நாள் கூடத் தாமதம் செய்ய எனக்கு இஷ்டமில்லை !" என்ருள்.

போகின் தலையை அசைத்துச் " சரி, செய்கிறேன் !" என்ருன்.

இது சாதாரணமான கடன். இதைப்பற்றி ஒருவரும் நினைத்ததே இல்லை. ஆனுல் அரசாங்க உத்தியோகஸ்தனின் வாய் வார்த்தையைக்கேட்டு மாசோயேயின் உடல்

முழுவதும் படபடப்பினால் துடித்தது. அவள் தனது இருபுருவங்களும் விரிய இதைப்பற்றிய பூர்வ விருத்தாந் தங்களைக் கூறிவிட்டு, "நான் ஒரு தம்படிகூட விடப் போவதில்லை. அட்டை எப்படி ரத்தத்தை உறிஞ்சு கிறதோ அதைப்போல் சகலத்தையும் உறிஞ்சிவிட வேண்டும். இன்றைக்கே! இப்பொழுதே!" என்றாள்.

இந்த விஷயமாகப் போகினுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இது அவள் நினைப்பதற்கும் மீறிய விஷயம். அவன் தன்னுடைய சந்தோஷத்தையும் ஆவலையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு, "அரசாங்கச் சட்டம் ஒருவாரம் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அதுவரையில் எப்படியாவது தைரியத்துடன் இருங்கள். அதன் பிறகு எப்படி விருப்பமோ, எவ்வளவு வேண்டுமோ ரத்தத்தைக் குடிக்கலாம். நான் தடுக்க மாட்டேன்!" என்றான்.

"நல்லது, சரி, நீங்கள் சென்று வாருங்கள்" என்று கூறி அவனைக் கழித்துக் கட்டிவிட்டு மாசோயே மேலே செல்லலானாள்.

கடின சித்தமுள்ள இந்தப் பெண்ணினிடம் போகி னுக்கு அளவு கடந்த ஆசை. ஆகையால், அவளுடைய அசட்டைகளை யெல்லாம் அவன் ஒன்றும் சொல்லாமல் சகித்துக்கொண்டு வந்தான். இன்றும் அப்படியே சகித் துக்கொண்டான். ஆனால் வீடு திரும்பும்போது அவன் மனம் சந்தோஷமடைய ஆரம்பித்தது. 'இனி யாதொரு பயமும் இல்லை. என் வெற்றியின் மார்க்கம் சீர்பட இனி அதிகத் தாமதமாகாது. இது உண்மை, அதிகத் தாமத மாகாது. என்று எண்ணினான். எவ்வளவு சீக்கிரத்தில் கடவுள் என்னென்ன ஆச்சரியங்களைச் செய்துவிடுகிறார், என்பதை அவனால் கற்பனைகூடச் செய்யமுடியவில்லை.

# 9

கடன்காரரின் சம்மன் வந்தது. அதைக் கையில் வைத்துக்கொண்டு வெகுநேரம் பாதின் பேசாமல் உட்கார்ந்திருந்தான். இப்படி நடக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அவன் ஆச்சரியப்பட வில்லை. அதிக அவகாசம் இல்லை. சீக்கிரம் ஏதாவது செய்தாகவேண்டும்.

ஒருநாள் கோபத்தில் இவனுடைய தந்தையின் வீண் செலவைப்பற்றி மாசோயே கேலிசெய்தாள். அதை அவன் மறக்கவும் இல்லை. அவளை மன்னிக்கவும் இல்லை. ஆகையால் அவளிடம் இன்னும் அவகாசம்கேட்டு அதிக அவமானத்தைச் சம்பாதித்துக் கொள்ளவும் அவன் விரும்பவில்லை. அதைப்பற்றி நினைக்கவும் இல்லை. அவன் நினைத்ததெல்லாம் தன்னிடம் உள்ளவற்றையெல்லாம் கொடுத்துவிட்டால் தன் தந்தையின் கடன் அடைந்து விடுமா என்பதுதான். அந்தக் கிராமத்திலேயே ஒரு லேவாதேவிக்காரன் இருந்தான். மறுநாள் காலையிலேயே பாதின் அவனிடம் சென்றான். ரகசியமாகத் தன் சொத்துக்களையெல்லாம் விற்றுவிடுவதாகச் சொன்னான். அவன் கொடுக்கிறேன் என்று சொன்ன ரூபாய் கடனைத் தீர்க்கப் போதுமானதாக இருந்தது. பணத்தைப்பெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அகாரணமாய் ஒரு மனிதன் அவமானம் அடைந்தால் அவன் உள்ளத்தில் எப்படிப்பட்ட அதிர்ச்சி ஏற்படும் என்பது இன்று அவனுக்கு வந்த கடுமையான ஜுரத்திலிருந்து தெரிந்தது.

பகல் பொழுது கழிந்து இரவும் கழிந்தது. அவனுக்குத் தெரியவே இல்லை. நினைவு வந்ததும் கவனித்தான். அன்று தான் தவணையின் கடைசித் தினம்.

அன்று கடைசித்தினம், மாசோயே தன் அறையில்

ஒரு மூலையில் தனியாக உட்கார்ந்து ஏதோ கற்பனையில் ஆழ்ந்திருந்தாள். அவளுடைய அகங்காரம் ஒவ்வொரு கணமும் குலேந்து எதிரியின் அகங்காரத்தை அதிகரித்தது மன்றி அவனுக்கு உயர்ந்த ஸ்தானத்தையும் அளித்து வந்தது. அவளுடைய அந்தத் திமிரான அகம்பாவம் அவன் காலடியில் வீழ்ந்து மண்ணோடு மண்ணுகப் போகிறது. இதில் சற்றும் சந்தேகமே இல்லை.

அதேசமயம் வேலைக்காரன் மேலேவந்து பாதின் வந்திருப்பதாகத் தெரிவித்தான். மாசோயே தனக்குத் தானே ஒரு கொடும் சிரிப்புச் சிரித்துக் கொண்டு, "தெரியும்!" என்ருள். அவளும் அவனைத்தான் எதிர் பார்த்திருந்தாள்.

மாசோயே கீழே இறங்கிவந்ததும் பாதின் எழுந்து நின்ருன். ஆனல் அவன் முகத்தைக் கண்டதும் அவள் மார்பின் ரத்தம் உலர்ந்துவிட்டது. அவள் ரூபாய் வேண்டு மென்று விரும்பவில்லை. பணத்தின்மேல் அவளுக்குத் துளியும் ஆசையில்லை. ஆனல் ரூபாயின் மூலம் எப்படிப் பட்ட கொடுமையை இழைக்கலாம் என்பதை இன்றுதான் அவள் நேரில் கண்டாள். பாதின்தான் முதலில் பேசினுன். "ஏழு நாள் தவணையில் இன்றுதான் கடைசி நாள். ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்!" என்ருன்.

அடடா! உயிர் போனுலும் மனிதர்கள் கர்வத்தை விடுவதில்லை. இல்லாவிட்டால் மாசோயேயின் வாயி லிருந்து ஏன் இம்மாதிரியான பதில் வெளிவருகிறது. "நான் இந்தக் கொஞ்சம் ரூபாயை விரும்பவில்லை. கடன் முழுவதையும் தீர்க்க வேண்டும் என்று சொல்ல வில்லையா?" என்ருள்.

பாதினின் வறண்ட முகத்தில் சிரிப்பு நிறைந்தது. "வாஸ்தவம்! கடன் முழுவதையும் தீர்க்கத்தான் ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்!" என்ருன்.

"எல்லாவற்றிற்குமா? எங்கே சம்பாதித்தாய்?"

"நாளைக்குத் தெரிந்து கொள்ளுவாய். அந்தப் பெட்டியில் ரூபாய் இருக்கிறது. யாரையாவது விட்டு எண்ணி வைக்கச் சொல்!"

வண்டிக்காரன் வாசற்படிக்கு வெளியே இருந்தபடியே, "இன்னும் எவ்வளவு நேரமாகும்? அதிக நேரம் தாமதம் செய்தால் இரவு பெருவில் தங்கவும் இடம் கிடைக்காது!" என்றான்.

மாசோயே எட்டிப் பார்த்தாள். தெருவில் பெட்டி, படுக்கை முதலிய சாமான்கள் ஏற்றிய வண்டி ஒன்று நின்றிருந்தது. பயத்தினால் அவள் முகம் கணத்திற்குள் வெளுத்துவிட்டது. வருத்தத்துடன் அவள் ஆயிரம் கேள்விகள் கேட்கலானாள். "பெருவுக்கு எதற்காகப் போகிறாய்? வண்டி யாருடையது? எங்கிருந்து இவ்வளவு ரூபாய் கிடைத்தது? ஏன் மௌனமாக இருக்கிறாய்? நாளைக்கு எப்படித் தெரியும்? இன்று நீ பேசும்போது—"

பேசிக்கொண்டே அவள் தன்னை மறந்து அவன் அருகேவந்து அவன் கையைப் பற்றிக்கொண்டாள். பிறகு அவன் கையை விட்டுவிட்டு அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். உடனே திடுக்கிட்டு, "அடடா! கடுமையான ஜுரம் வந்திருக்கிறதே! அதுதான் கேட்டேன்! ஏன் முகம் இப்படி வெளுத்துவிட்டது?" என்றாள்.

பாதின் தன்னை விடுவித்துக்கொண்டு சாந்தமாக இனிய குரலில், "உட்காரு!" என்று கூறினான். அவனும் உட்கார்ந்தான். பிறகு, "நான் மாண்டலே செல்கிறேன். இன்று கடைசியாக நீ என்னுடைய வற்புறுத்தலைக் கேட்பாயா?" என்றான்.

மாசோயே தலையசைத்துக் 'கேட்கிறேன்' என்று தெரிவித்தாள். பாதின் சற்று அமரிக்கையடைந்து, "என்னுடைய கடைசி வார்த்தை என்னவென்றால்

'யாராவது ஒரு சிறந்த வரனைக் பார்த்துச் சீக்கிரம் மணம் செய்துகொள்,' என்பதுதான். இப்படியே கன்னிப் பெண்ணாக அதிக நாள் இருக்கவேண்டாம். இன்னும் ஒரு விஷயம்—" இதைக் கூறிவிட்டு அவன் சற்றுநேரம் மௌனமாக இருந்தான். பிறகு இன்னும் மிருதுவான குரலில், "இன்னும் ஒரு வார்த்தை; நீ நெடுநாள் வரையில் அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மறக்க வேண்டாம். நாணத்தைப் போலவே கர்வமும் பெண்களுக்கு அழகைத் தரக்கூடியதுதான். ஆனால் அளவுக்கு மிஞ்சிவிட்டால்—" என்றான்.

அவன் வார்த்தையை முடிப்பதற்குள் மாசோயே அதைரியமடைந்து அவனை இடைமறித்து, "இவைகளெல்லாவற்றையும் இன்னொரு நாளைக்குக் கேட்டுக் கொள்ளுகிறேன். உனக்கு ரூபாய் எங்கிருந்து கிடைத்தது? அதைச் சொல்!" என்றாள்.

பாதின் சிரித்தான். "இதை ஏன் கேட்கிறாய்? என்னுடைய விஷயங்களில் உனக்குத் தெரியாதது என்ன இருக்கிறது?" என்றான்.

"ரூபாய் எங்கிருந்து கிடைத்தது?"

பாதின் கூட்டி விழுங்கிக்கொண்டு கீழும் மேலும் பார்த்துக்கொண்டே தயக்கத்துடன், "தந்தையின் கடனை அவர் சொத்தைக்கொண்டே தீர்த்துவிட்டேன். இல்லாவிட்டால் என்னிடம் என்ன இருக்கிறது?" என்றான்.

"உன் பூந்தோட்டத்தை விற்றுவிட்டாயா?"

"அது தந்தையினுடையதுதானே!"

"உன்னுடைய புஸ்தகங்களெல்லாம்?"

"இனிமேல் புஸ்தகங்களை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன்? தவிர, அவைகளும் அவருடையது தானே!"

மாசோயே ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு "போகட்டும் நல்லதாயிற்று. மேலே சென்று படுத்துத் தூங்கு. வா! என்றாள்.

"இன்று நான் சென்றே ஆகவேண்டும்!"

"இந்த ஜுரத்துடனா? உன்னை இந்த நிலைமையில் விட்டுவிடுவேன் என்று உண்மையிலேயே நீ நம்பு கிறாயா?" என்று சொல்லி அருகேவந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள். இந்தத் தடவை பாதின் ஆச்சரியத் துடன் மாசோயேயின் முகத்தைப் பார்த்தான். ஒரு நாழிகைக்குள் அவள் முகமே மாறிவிட்டது. அவள் முகத்தில் கர்வம், நிராசை, துவேஷம் இவைகளின் சின்னம் கூட இல்லை. பயமும் அன்பும் குடிகொண்டிருந்தன. அந்த முகம் அவனை மந்திரத்தால் கட்டுப்பட்டவனைப் போல் ஆக்கிவிட்டது. அவன் பேசாமல் அவளைத் தொடர்ந்து மேலே சென்றான்.

அவனைப் படுக்கையில் படுக்கவைத்து மாசோயே அவனருகே அமர்ந்து, திருப்தியும் கண்ணீரும் நிறைந்த கண்களுடன் அவன் முகத்தைப் பார்த்து, "நீ ஏதோ கொஞ்சம் ரூபாய் கொண்டுவந்து விட்டதனால் உன் கடன் அடைந்துவிடும் என்று எண்ணினாயா? மாண்டலே செல்லும் எண்ணத்தை விட்டுவிடு. என் உத்தரவு இல்லாமல் இந்த வீட்டைவிட்டு வெளியே சென்றால் நான் இந்த மாடியிலிருந்து கீழே குதித்து உயிரை மாய்த்துக் கொள்வேன். நீ எனக்கு எவ்வளவோ வருத்தத்தைக் கொடுத்துவிட்டாய். இனி என்னால் சகிக்க முடியாது. இதை உன்னிடம் நிச்சயமாகச் சொல்லி வைக்கிறேன்" என்றாள்.

பாதின் ஒன்றும் சொல்லவில்லை. போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு புரண்டு படுத்துத் தூங்கலானான்.

# அண்ணனும் தம்பியும்

மஜூம்தார் வம்சம் பழமையானது. கிராமத்தில் அதற்கு மிகுந்த மதிப்பு உண்டு. மூத்தவரான குருசரணர் தான் வீட்டில் சகல காரியங்களுக்கும் அதிகாரி. வீட்டுக்கு மாத்திரமல்ல, கிராமம் பூராவுக்குமே அவர் தான் அதிகாரி என்றால் இதில் மிகை ஒன்றும் இல்லை. ஸ்ரீகுஞ்சபுரத்தில் பெரிய மனிதர் இன்னும் பலர் இருந்தனர். ஆயினும், இவரிடம் ஜனங்களுக்கு இருந்த பக்தி சிரத்தை மற்றவரிடம் கிடையாது. வாழ்நாளில் இவர் பெரிய உத்தியோகம் ஒன்றும் பார்த்ததில்லை. கிராமத்தைவிட்டு அவரை வெளியே அழைத்துச் செல்வதென்பது நடக்கக் கூடிய காரியமே அல்ல. வாலிப வயதில் அருகே இருந்த ஒரு ஜில்லா உயர்தரப்பள்ளியில் ஆசிரியர் வேலையில் புகுந்தார். அவ்வளவுதான். பிறகு அந்த வித்யாலயத்தை விட்டு வெளியே எங்கும் செல்ல அவர் பிரியப்படவே இல்லை. அங்கே அவருக்கு ரூபாய் முப்பதிலிருந்து ஐம்பது வரை உயர்ந்தது. இப்பொழுது அதில் பாதி, இருபத்தைந்து ரூபாய் பென்ஷன் கிடைக்கிறது.

அவர் வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டு மூன்று வருஷங்களாகின்றன. உலகத்தில் பணம்தான் பெரிது என்று இன்றுவரை அவர் எண்ணியதே இல்லை. அப்படி இருந்திருந்தால், சண்டை சாடியில் மத்யஸ்தம் செய்யவோ, வம்புவழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதிலோ, நல்ல காரியம் கெட்ட காரியங்களுக்கு யோசனை கேட்பதிலோ ஸ்ரீகுஞ்ரபுரத்து ஜனங்கள் அவர் கட்டளைப்படி நடந்திருக்கமாட்டார்கள். அவருடைய எல்லையற்ற

தர்மசிந்தனை, மாசற்ற ஒழுக்கம், சலியாத உறுதி இவை களைக்கண்டு எல்லோரும் அவருக்கு மரியாதையுடன் தலை வணங்கி நின்றனர். வயது கிட்டத்தட்ட அறுபது ஆகி விட்டது. அக்கம்பக்கத்துக் கிராமத்தில் யாராவது ஒருவன் மத்யஸ்தம் செய்வதில், தர்மம் பேசுவதில் நியாய மாக நடந்துவிட்டால் ஜனங்கள் அவனை 'அடேடே, நீ என்ன குருசரணராகி விட்டாய்போல் இருக்கிறது', என்று கூறத்தலைப்பட்டார்கள். அவ்வளவு தூரம் ஜனங்களுக்கு இவரிடம் மதிப்பு ஏற்பட்டிருந்தது.

குருசரணருக்கு மனைவியில்லை, ஒரே மகன் விமலன் தான் இருந்தான். உலகத்தில் அதிசயம் என்று சொல்ல ஏதாவது உண்டானால் அது இதுதான். இத்தனை நல்ல குணம்வாய்ந்த குருசரணருக்கு இவ்வளவு தீய ஒழுக்கம் வாய்ந்த மகன் எப்படிப் பிறந்தான் என்பதுதான் தெரிய வில்லை.

மகனுடன் தந்தைக்குக் குடும்ப பந்தம் ஒன்றுமே கிடையாது. இவருடைய உறவெல்லாம் அவருடைய சகோதரன் ஹரிசரணருடைய மூத்தமகன் பாரஸிடம் தான். அவனைத்தான் அவர் தன் மகனாய்ப் பாவித்தார். பாரஸ் எம்.ஏ. பரீட்சை தேறிவிட்டுச் சட்டகலாசாலையில் படித்துக் கொண்டிருந்தான். அவனை அரிச்சுவடி முதல் இன்றுவரை படிக்கவைத்தவர் அவர்தான். விமலன் ஒன்றும் படிக்கவில்லை என்ற துக்கம் இதன்மூலம் சற்றுக் குறைந்தது.

இளைய சகோதரர் ஹரிசரணர் இவ்வளவு நாட்கள் வரை எங்கோ தூரதேசத்தில் உத்யோகம் பார்த்து வந்தார். இந்த யுத்தத்திற்குப் பிறகு திடீரென்று அவர் எப்படியோ பணக்காரராகிவிட்டார். வேலையையும் விட்டு விட்டு வீட்டோடு வந்து சேர்ந்தார். இங்கு அதிக வட்டிக்குப் பணம் லேவாதேவி செய்யலானார். மனைவியின்

பெயருக்கு ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கினார் இப்படியாக இன்னும் ஏதேதோ செய்யலானார். இதன் காரணமாக அவருடைய பணவாசனை ஐந்தாறு கிராமங்கள்வரை வீசியது.

ஒருநாள் ஹரிசரணர் தன் தமையனிடம்வந்து வணக்கத்துடன், "அண்ணா! உங்களிடம் வெகு நாட்களாக ஒரு விஷயம் சொல்லவேண்டும் என்றிருக்கிறேன்" என்றார்.

"நல்லது சொல்லேன்!"

ஹரிசரணர் தோளைக் குலுக்கிக்கொண்டு, "நீங்கள் ஒண்டியாக இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இப்படி...?" என்றார்.

"அது வாஸ்தவந்தான். அறுபதாவது வயசு நடக்கிறது!" என்றார் குருசரணர்.

"அதனால்தான் சொல்லுகிறேன். இனி நான் வீட்டோடு இருக்கப்போகிறேன். நிலபுலன்கள் தாறுமாறாகக் கிடக்கின்றன. நானே எல்லாவற்றையும் இனிப் பார்த்துக்கொள்......"

குருசரணர் ஒருகணந்தான் தன் தம்பியின் முகத்தைப் பார்த்தார். பிறகு, "நிலபுலன்கள் சரியாகத்தான் இருக்கின்றன. இதில் தாறுமாறு என்ன இருக்கிறது? நீ பாகம் பிரித்துக்கொள்ளும் விஷயத்தைப்பற்றிப் பேசுகிறாயா?" என்றார்.

ஹரிசரணர் வெட்கித் தலைகுனிந்து, "இல்லை, அண்ணா இல்லை. இப்பொழுது நடப்பதைப் போலவே நடக்கட்டும். இதில் மாறுதல் ஒன்றும் வேண்டாம். ஏதோ நம்மிடம் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டாமா? சமையல் சாப்பாட்டு விஷயம் எப்பொழுதுமே தொல்லை பிடித்ததுதான். மற்றதெல்லாம் ஒன்றாகவே இருக்கட்டும். சமையல் மட்டும் தனியாகச் செய்து

கொள்ளுவோம். உங்களுக்குத் தெரியாததா?........." என்ருர்.

"தெரியாமல் என்ன? எனக்கு நன்ருகத் தெரியும். நல்லது, நாளையிலிருந்து அப்படியே செய்துவிட்டால் போகிறது."

"எப்படி நிர்ணயிப்பது என்பதைப்பற்றி, நீங்கள் ஏதாவது நிச்சயம் செய்தீர்களா ?"

"நிச்சயம் செய்ய இதுவரை அவசியம் ஏற்படவில்லை. இன்று ஏற்பட்டு விட்டதென்ருல் சகோதரர்கள் மூவரும் சரி சமபாகம் பிரித்துக்கொள்ள வேண்டியதுதான்"

ஹரிசரணர் ஆச்சரியத்துடன், "மூன்று பாகம் எப்படி? சின்ன நாட்டுப்பெண் விதவை. குழந்தை குட்டிகளும் இல்லை. அவளுக்கு எப்படிப் பாகம் சேரும்? மொத்தம் இரண்டு பாகம்தான்" என்ருர்.

குருசரணர் தலையசைத்துவிட்டு, "இல்லை, மூன்று பாகம்தான். சின்ன நாட்டுப் பெண் யார்? நமது சியாம சரணின் மனைவியல்லவா? அவள் உயிருள்ளவரை அவளுக்கும் பாகம் உண்டு" என்ருர்.

ஹரிசரணர் சற்றுக் கடுகடுப்புடன், "சட்டப்படி அவளுக்குப் பாகம் கிடைக்காது. ஏதோ சாப்பாட்டிற்குத் தான் வாங்கிக் கொள்ளலாம்" என்ருர்.

"அது வாங்கிக் கொள்ளத்தான் செய்வாள். இந்த வீட்டுக்குவந்த மருமகள் அல்லவா?"

"நாளை ஒருகால் நிலத்தை விற்ருே, அடகு வைத்தோ பணம் வாங்கவோ ஆரம்பித்தால்?"

"சட்டப்படி அப்படிச் செய்ய அவளுக்கு உரிமை உண்டானுல் செய்யத்தான் செய்வாள்."

ஹரிசரணரின் முகம் சுண்டியது. "உம், செய்வாள், செய்யமாட்டாளா?" என்ருர்.

மறுநாள் ஹரிசரணர் கயிறும் அளவுகோலும் எடுத்துக்கொண்டு வீட்டுவாசல்களை அளந்து கொண்டு திரிந்தார். குருசரணர் ஒன்றும் பேசவும் இல்லை; அதைத் தடுக்கவும் இல்லை. இரண்டு மூன்று தினங் களுக்குப் பிறகு செங்கல், காரை, மணல் யாவும் வந்து சேர்ந்தன. வீட்டில் வெகு நாட்களாக இருந்த வேலைக் காரி, "நாளையிலிருந்து கொத்தன்வந்து வேலை செய்யப் போகிறான். சின்னபாபு தன் பாகத்திற்குச் சுவர் எழுப்பிக் கொள்ளப்போகிறார்" என்றாள்.

குருசரணர் சிரித்துக் கொண்டே, "அதுதான் பார்த் துக் கொண்டிருக்கிறேனே! சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?" என்றார்.

ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை, கதவுக்கு வெளியே காலடிச் சத்தம் கேட்டது. குருசரணர் தலை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "பஞ்சு அம்மா, என்ன சேதி?" என்று கேட்டார்.

பஞ்சுவின் தாய் வெகு நாளைய வேலைக்காரி. அவள் கை ஜாடையினால் சுட்டிக் காட்டி, "பெரிய பாபு, சின்ன அம்மா நிற்கிறார்கள்" என்றாள்.

குருசரணரின் மனைவி இறந்தபின்பு சின்ன மருமகள் தான் வீட்டுக்கு எஜமானியாய்க் காரியங்களை நிர்வகித்து வந்தாள். மைத்துணன்முன் வருவதில்லை. மறைவில் நின்று தான் பேசுவது வழக்கம். அவள் மிருதுவான குரலில், "மாமனார் வீட்டில் எனக்கொன்றும் உரிமை இல்லையா? சின்ன மன்னி இராப்பகல் வாயில் வந்தபடி யெல்லாம் பேசுகிறாளே?" என்றாள்.

"ஏன் அம்மா, உரிமை இல்லாமல் என்ன? அவளுக் குள்ள உரிமை உனக்கும் உண்டு."

"ஆனால் இந்த மாதிரிச் செய்தால் வீட்டில் இருக்க முடியாதே!" என்றாள் பஞ்சுவின் தாய்.

குருசரணர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டு "பாரஸை வரச் சொல்லிக் கடிதம் எழுதி இருக்கிறேன். அவன் வந்தவுடன் யாவும் சரிப்பட்டு விடும். அதுவரை நீங்கள் கொஞ்சம் சகித்துக்கொள்ளுங்கள்!" என்றார்.

சின்ன மருமகள் இதைச் சற்று ஆட்சேபித்து, "ஆனால் பாரஸ் வந்து......?" என்று ஆரம்பித்தாள்.

குருசரணர் இடைமறித்து, "ஆனால் ஒன்றுமில்லை அம்மா. என் பாரஸ் விஷயத்தில் 'ஆனால் 'கீனால்' என்ற வார்த்தையே கிடையாது. ஹரி அவனுடைய தந்தைதான். ஆனால் அவன் என்னுடையவன். இந்த உலகமே ஒன்று சேர்ந்தாலும் அவன் என்னுடையவனாகவே இருப்பான். அவனுடைய பெரியப்பா, ஒரு நாளும் அநியாயம் செய்யமாட்டார் என்ற விஷயத்தை அவன் இதுவரை அறிந்து கொண்டிருக்காவிட்டால் அவனை இவ்வளவுநாள் வளர்த்துப் படிக்க வைத்தது வியர்த்தம் என்று எண்ணிக்கொள்" என்றார்.

வேலைக்காரி சொன்னாள் :—"இதில் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? அந்த வருஷம் தாய் இறந்து போனாள். அப்பொழுது எமன் வாயில் இருந்த அவனை நீங்கள் தானே மீட்டு வந்தீர்கள், பெரிய பாபு! அப்பொழுது சின்னபாபு எங்கே இருந்தார்? இந்த மாற்றாந் தாய் எங்கே இருந்தாள்? பயத்தினால் ஒருவரும் கிட்டே வந்து அண்டவே இல்லையே! அப்பொழுது பெரியப்பா தான் தனியாய் நின்றார். இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்தார்!"

"பாரஸின் தாயார் ஜீவித்திருந்தால் அவள் கூட இவ்வளவு செய்திருக்கமாட்டாள்!" என்றாள் சின்ன நாட்டுப் பெண்.

குருசரணருக்குச் சங்கோஜமாகப் போய்விட்டது. "இருக்கட்டும் அம்மா! அதெல்லாம் இப்பொழுது எதற்கு?" என்ருர்.

அவர்கள் சென்ற பிறகு விருத்தரான குருசரணரின் கண்முன் பாரஸ், விமலன் இருவர் பக்கம் பக்கமாக நின்று காட்சியளித்தார்கள். ஜன்னலுக்கு வெளியே உள்ள பரந்த வான வெளியைப் பார்த்து அவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக் கொண்டார். அதன் பிறகு பெரிய மூங்கில் தடியை எடுத்துக்கொண்டு சர்க்கார் சாவடிக்குச் சதுரங்கம் ஆடக் கிளம்பி விட்டார்.

**ம**றுநாள் மத்தியானம், குருசரணர் ரொட்டி சாப்பிட உட்கார்ந்தார். வீட்டின் வடபுரம் தாழ்வாரத்தில் ஒரு பாகத்தை அடைத்துக்கொண்டு ஹரிசரணர் சமையல் செய்து கொண்டிருந்தார். அங்கிருந்து ஒரு பெண் கடும் வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தாள். சொன்ன சொல் கணக்கில் அடங்காது. அவர் சமையல் தடைப்பட்டது. இதற்குள் ஆண்குரல் ஒன்று அத்துடன் கலந்து வந்தது. அவர் அதைக் காது கொடுத்துக் கேட்டார்.

சின்ன மருமகள் மறைவில் நின்றபடி 'ஆஹாஹா' என்று தவித்துப் போனுள். பஞ்சுவின்தாய் கோபத்தினுல் கூச்சலிட்டு இந்தச் சம்பவத்தைப் பகிரங்கப் படுத்தினுள்.

குருசரணர் முற்றத்துக்கு வந்து நின்று தம்பியிடம் "ஹரிசரண்! பெண்கள் வார்த்தையை நான் பொருட்படுத்துவதில்லை. ஆனுல் நீ புருஷனுக இருந்தும், உன் மதனியை இவ்வாறு அவமானப் படுத்தினுல் அவளால் இந்த வீட்டில் எப்படி இருக்கமுடியும்?" என்ருர்.

இவருடைய வார்த்தைக்கு ஒருவரும் பதில் சொல்ல வில்லை. ஆனால் வாசல் பக்கத்திலிருந்த ஹரிசரணரின் மனைவியின் கடும் சொற்கள் கேட்டன. அவள் கேலியாக, "ஆமாம், இந்தமாதிரி அவமானம் செய்யாதீர்கள். அப்புறம் மன்னி, இந்த வீட்டில் இருக்கமாட்டாள். அப்புறம் என்ன ஆகிவிடும் தெரியுமா?" என்றாள்.

இதற்கு ஹரிசரணர் பதில் சொன்னார்:—"உலகம், பாதாளத்திற்குப் போய்விடும். வேறு என்ன ஆகிவிடும்? யார் இருக்க வேண்டுமென்று காலைப்பிடித்துக் கொள்ளுகிறார்கள்? போனால் சனி தொலைந்தது!" என்றார்.

குருசரணர் தயங்கி நின்றார். அவர்களுடைய பேச்சு வார்த்தைகள் முடிந்த பிறகு பேசாமல் வெளியே செல்லலானார்.

<u>ஊ</u>ர்ப் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயரின் பெண்ணுடைய கல்யாணத்திற்காக குருசரணர் கிருஷ்ண நகருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். இதற்குள் பாரஸ் வீடு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாய் ஜுரமாய்ப் படுத்துவிட்டான். அவர் பயந்துகொண்டே பாரஸின் அறைக்குள் நுழைந்தார். எதிரே வந்த தம்பியைப் பார்த்து, "பாரஸுக்கு ஜுரமா வந்திருக்கிறது?" என்று கேட்டார்.

ஹரிசரணர் "உம்!" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். ஹரிசரணர் மனைவியின் தாய்வீட்டு வேலைக்காரி அவரை வழிமறித்து, "நீங்கள் உள்ளே போகாதீர்கள்!" என்றாள்.

"உள்ளே போகக்கூடாதா, ஏன்?"

"உள்ளே அம்மா இருக்கிறார்கள்!"

"அவர்களைச் சற்று விலகிக் கொள்ளச் சொல்!"

"அவர்கள் எங்கே விலகிக் கொள்வது? பிள்ளைக்கு நெற்றி வருடிக் கொண்டிருக்கிறார்கள்!" என்று சொல்லி விட்டு அவள் தன் காரியத்தைப் பார்க்கச் சென்றாள்.

குருசரணர் கனவில் இருப்பவர்போல் ஒரு கணம் அப்படியே நின்றிருந்தார். பிறகு பாரஸைக் கூப்பிட்டு "உடம்பு எப்படி அப்பா இருக்கிறது?" என்று கேட்டார்.

இந்த வருத்தம் தேங்கிய கேள்விக்கு உள்ளே இருந்து யாதொரு பதிலும் வரவில்லை. ஆனால் வேலைக்காரி எங்கோ இருந்தபடி, "சின்ன ஐயாவுக்கு ஜுரம், கேட்கிறதா?" என்றாள்.

குருசரணர் ஒன்றும் தோன்றாமல் இரண்டு மூன்று நிமிஷங்கள் நின்றார். பிறகு மெள்ள மெள்ள வெளியே வந்தார். ஒருவருடனும் ஒன்றும் பேசவில்லை. நேரே கிருஷ்ண நகருக்குப் போனார்.

* * * *

அங்கே கலியாண கோலாகலத்தில் ஒருவரும் இவரைக் கவனிக்கவில்லை. கல்யாணச் சந்தடி ஓய்ந்ததும் அவருடைய வெகுநாளைய நண்பரான தலைமை உபாத்தியாயர் குருசரணரைத் தனிமையில் அழைத்து, "என்ன விஷயம் குருசரண்? ஹரிசரண் ஏதோ உனக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேனே? வாஸ்தவமா?" என்று கேட்டார்.

குருசரணர் சமாளித்துக்கொண்டு "ஹரிசரணனா? இல்லையே!" என்றார்.

"இல்லாமல் என்ன? ஹரிசரணனின் விஷமங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்!"

குருசரணருக்குச் சட்டென்று சகல விஷயங்களும் நினைவிற்கு வந்தன. அவர், "ஆமாம், ஆமாம், அவன்

சொத்து சம்பந்தமாக ஏதோ தகராறு செய்து கொண்டிருக்கிறன்" என்றார்.

அவருடைய வார்த்தையின் தொனியினுல் அந்த நண்பர் வருத்தமடைந்தார். இருவரும் சிறு வயது முதல் கள்ளங் கபடமற்றுப் பழகியவர்கள். அப்படியிருந்தும் குருசரணர் தன் குடும்பச் சச்சரவை, மறைப்பதற்காக, அசட்டையாகப் பதில் சொல்ல முயல்வதைக் கண்டு, அவர் மேலே தொடர்ந்து ஒன்றும் விசாரிக்கவில்லை.

குருசரணர் கிருஷ்ணநகரத்திலிருந்து வீடு திரும்பி வந்து பார்த்தார். அவர் இங்கு இல்லாமல் இருந்த இந்தச் சில தினங்களுக்குள் ஹரிசரணர் வீட்டின் ரேழியிலும் முற்றத்திலும் பல இடங்களில் பள்ளங்களை வெட்டி வீட்டில் கால்வைக்க இடமில்லாமல் செய்திருந்தார். அவருடைய சௌகரியத்திற்கு, அவர் இஷ்டப்படி பிரித்துச் சுவர் எழுப்பிக்கொண்டார். அவரிடம் ரூபாய் இருக்கிறது. ஆகையால், பிறருடைய அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்று எண்ணினுர் போலிருக்கிறது.

குருசரணர் தம் அறைக்குச் சென்று ஆடைமாற்றிக் கொண்டிருந்தார். இதற்குள் சின்ன நாட்டுப் பெண்ணுடன் பஞ்சுவின் தாய் வந்து நின்றுள். குருசரணர் விஷயத்தை விசாரிக்க வாய் திறந்தார். அதற்குள் அவள் விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள். அவள் அழுது கொண்டே, "முந்தாநாள் காலையில் சின்ன நாட்டுப் பெண்ணைச் சின்ன பாபு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினுராம்" என்றும் சொன்னுள்.

நடந்த சம்பவத்தைப் புரிந்துகொள்ள குருசரணருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆயினும், அவர் கற்சிலை போல் அசைவற்று, உணர்வற்று நின்றுவிட்டார். பிறகு

திடீரென்று "ஏன் அம்மா, நிஜமாகவே ஹரிசரண் உன்னைக் கைதீண்டினனா? தீண்டியிருப்பான்!" என்றார்.

பிறகு சற்றுப் பொறுத்து, "சரிதான், பாரஸ் அப்பொழுது கட்டிலில் படுத்திருப்பான்!" என்றார்.

பஞ்சுவின் தாய் சொன்னாள்:—"அவர் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை, பெரிய பாபு. இன்று காலை வண்டிக்குத்தான் அவர் கல்கத்தா சென்றார்."

"அவன் ஒன்றும் காதில் போட்டுக்கொள்ளவில்லையா? அவன் தன் தந்தையின் செய்கை தெரிந்தும் பேசாமலா சென்றான்?"

"ஆமாம், தெரிந்தும் பேசாமல்தான் சென்றான்!"

குருசரணருக்கு இந்த உலகமே சுழல்வதைப்போல் இருந்தது. அவர், "பெண்ணே! இந்தக் குற்றத்திற்கு அவனுக்குத் தண்டனை கிடைக்காவிட்டால், இந்த வீட்டில் நான் இருந்து காரியமில்லை. எழுந்திரு! இன்னும் நேரமிருக்கிறது. நான் வண்டி கொண்டு வருகிறேன். நீ கோர்ட்டுக்குச் சென்று பிராது கொடுக்கவேண்டும்" என்றார்.

கோர்ட்டுக்குச் சென்று வழக்குத் தொடர்வது என்ற வார்த்தையைக் கேட்டதும் நாட்டுப்பெண் திடுக்கிட்டுப் போனாள். இதற்குள் குருசரணர் "குடும்ப ஸ்திரீகளுக்கு இந்தக் காரியம் கண்யக் குறைவானதுதான். இது எனக்கும் தெரியும். ஆனால் இப்படி வேண்டுமென்று அவமானம் செய்வதைப் பேசாமல் சகித்துக்கொண்டால் கடவுளே உன்மீது சினம் கொள்வார். இதைவிட அதிகமாக நான் ஒன்றும் சொல்லமுடியாது" என்றார்.

சின்ன நாட்டுப்பெண் எழுந்து நின்றாள். பிறகு, "தாங்கள் என் தந்தைக்குச் சமமானவர்கள். நீங்கள் என்ன கட்டளையிடுகிறீர்களோ அதைச் சற்றும் தயங்காமல் நான் நிறைவேற்றுகிறேன்" என்றாள்.

ஹரிசரணர் பேரில் வழக்குத் தொடரப்பட்டது. குரு சரணர் தம்மிடமிருந்த தங்கச் சங்கிலியை விற்று அதிக பீஸ்கொடுத்து பெரிய வக்கீலாக வைத்துக் கேஸ் நடத்தி னார்.

வழக்கு வாய்தா தினமும் வந்தது. பிரதிவாதி ஹரி சரணர் ஆஜரானார். ஆனால் வாதி ஆஜராகவில்லை. வக்கீல் ஏதேதோ பேசினார். நியாயாதிபதி கேஸைத் தள்ளி விட் டார். அகஸ்மாத்தாக குருசரணரின் பார்வை கூட்டத் தில் இருந்த பாரஸின் பக்கம் சென்றது. அவன் தன் முகத்தைத் திருப்பிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

குருசரணர் வருத்தத்துடன் வீடுவந்து சேர்ந்தார். சின்ன நாட்டுப் பெண்ணின் தாய் வீட்டில் யாருக்கோ தேக அசௌக்கியமென்று சேதிவந்ததன் பேரில், அவள் ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிடாமல்கூட வண்டி கொண்டு வரச் சொல்லிச் சென்று விட்டாளென்று கேள்விப்பட் டார்.

கேஸ் ஜயித்ததற்காக ஹரிசரணர் மேள தாளத் துடன் சண்டிதேவிக்கு பூஜை போட்டார். மேளச் சத் தம் ஊர் கிடுகிடுத்தது.

இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்ட பிதிரார்ஜித வீட் டில் ஒரு பக்கம் ஹரிசரணரின் குடும்பம். மறு பக்கம் குருசர்ணரும் வெகு நாளைய வேலைக்காரியான பஞ்சுவின் தாயும் இருந்தனர்.

மறுநாள் காலை பஞ்சுவின் தாய் வந்து, "பெரியபாபு! சமையலுக்குச் சாமான்களெல்லாம் எடுத்து வைத்து விட்டேன்" என்றாள்.

"சமையலா! ஆமாம்! சரிதான். இருக்கட்டும், இதோ வந்துவிட்டேன்!" என்று கூறி எழுந்திருக்க லானார் குருசரணர். அதற்குள் வேலைக்காரி, "அவசர மில்லை பெரியபாபு. இன்னம் சற்று நேரமாகட்டும்.

அதற்குள் தாங்கள் கங்கைக்குச் சென்று ஸ்நாநம் செய்து விட்டு வாருங்கள்!" என்றாள்.

"நல்லது சென்று வருகிறேன்!" என்று சொல்லி விட்டு கணத்திற்குள் கங்கா ஸ்நானத்திற்குத் தயாரானார், அவருடைய பேச்சிலோ, நடத்தையிலோ எவ்வித சலனமோ தேக்கமோ இல்லை. ஆயினும் பஞ்சுவின் தாய்க்கு ஏதோ குறையாகவேபட்டது. அவளுக்குத் திரும்பத் திரும்ப "இவர் அந்தப் பழைய பெரியபாபு அல்ல!" என்ற நினைவே வந்தது.

அவள் உள்ளே சென்று உரத்த குரலில், "இது நல்ல தற்கல்ல, இதனால் ஒருநாளும் நன்மை ஏற்படாது. பகவான் இதற்குத் தண்டனை அளித்தே தீருவார்!" என்று புலம்பிக்கொண்டிருந்தாள்.

யாருக்கு நன்மை ஏற்படாது; யாருக்கு பகவான் தண்டனை அளித்தே தீருவார் என்பது விளங்கவில்லை. ஆனால் இது சம்பந்தமாக அன்று சின்னபாபுவின் சார்பாக ஒருவரும் சண்டைக்கு வரவில்லை.

இவ்விதமாக நாட்கள் கழிந்து வந்தன.

குருசரணரின் ஒரே பிள்ளை விமல சந்திரன் நல்ல நடத்தையுள்ளவனல்ல என்பது அவருக்குத் தெரியும். சில மாதங்களுக்குமுன் அவன் வீட்டுக்கு வந்து சிலமணிநேரம் தங்கினான். பிறகு அவன் கண்ணில் தென்படவே இல்லை. அந்தத்தடவை அவன் ஏதேதோ சாமான்களை ஒரு தோற் பையில் போட்டு ஒளித்து வைத்துவிட்டுச் சென்றான். அவன் போனபிறகு குருசரணர் பாரஸை அழைத்து, "இந்தாடா அப்பா! இதில் என்ன இருக்கிறது பார்?" என்று காட்டினார்.

பாரஸ் அவற்றை நன்றாகப் பார்த்துவிட்டு "எல்லாம் காகிதங்கள். ஏதாவது தஸ்தாவேஜாக இருக்கலாம்.

பெரியப்பா! இவைகளைக் கொளுத்தி விடட்டுமா?" என்று கேட்டான்.

"பிறகு அவை ஒருவேளை வேண்டியிருந்தால்?"

"ஆனால் விமல் அண்ணாவுக்கு இவை தேவையில்லை. ஆபத்தை வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?"

குருசரணர் தடுத்தார். "விஷயத்தை அறியாமல் வீணாக்குவானேன் பாரஸ்? நீ இதை எங்கேயாவது மறைத்து வைத்துவிடு. பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றார்.

இந்த சம்பவத்தை அத்துடன் மறந்துவிட்டார். அன்று காலை அவர் கங்காஸ்நானம் செய்து திரும்பிவந்து சமையல் செய்ய ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று கையில் தோல் பையுடன் பாரஸ், ஹரிசரணர், கிராமத்திலுள்ள நாலு பெரிய மனிதர்கள், போலீஸார் யாவரும் வந்துசேர்ந்தனர்.

விஷயம் இதுதான். விமல் ஒரு கொள்ளைக்காரன். அதோடு எங்கோ ஓடிவிட்டான். பத்திரிகையில் இந்த விஷயத்தைப் படித்துவிட்டுப் பாரஸ் போலீஸுக்குத் தகவல் கொடுத்துவிட்டான். தோல் பை இதுவரை அவனிடம்தான் இருந்தது. சில விநாடி அவர் கண் கொட்டாமல் பாரஸின் முகத்தைப் பார்த்தார். அதன் பின் கலங்காத அவர் கண்கள் இரண்டினின்றும் கண்ணீர் துளித்தது. பிறகு அவர், "எல்லாம் உண்மை; பாரஸ் சொன்னதில் ஒன்றுகூடப் பிசகல்ல!" என்றார்.

இன்ஸ்பெக்டர் குருசரணரை சில கேள்விகள் கேட்டு விட்டு அவரை விட்டுவிட்டார். பிறகு போகும்போது அவர் குனிந்து குருசரணரின் பாதங்களைத் தொட்டு, "நீங்கள் வயதில் மிகவும் பெரியவர்கள். என்னுடைய இந்தத் தவறை மறந்துவிடுங்கள். இவ்வளவு துக்ககர

மான காரியத்தை இதற்குமுன் நான் செய்ததே இல்லை" என்றார்.

பின்னும் சில மாதங்களுக்கெல்லாம் விமலனுக்கு ஏழு வருஷம் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டது என்ற செய்தி எட்டியது.

மீண்டும் மேளதாள வைபவத்துடன் தடபுடலாக ஹரிசரணர் சுபசண்டி தேவிக்குப் பூஜைபோட ஏற்பாடு செய்யலானார்,

பாரஸ் தந்தையிடம் "அப்பா, இவைகளொன்றும் வேண்டாம்" என்றான்.

"ஏன்?"

"இதை என்னால் சகிக்க முடியவில்லை."

"நல்லது; சகிக்க முடியாவிட்டால் இன்று வண்டிக்கே கல்கத்தா சென்று சுற்றித் திரிந்துவிட்டு வா. ஜகன்மாதாவுக்குப் பூஜை. தர்ம கர்மங்களைத் தடை செய்யாதே!"

தர்ம கர்மங்களுக்கு யாதொரு தடையும் ஏற்படவில்லை என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

பத்துப் பன்னிரண்டு தினங்களுக்குப் பிறகு ஒருநாள் காலை குருசரணரின் வீட்டுப் பக்கம் திடீரென்று ஏதோ கூக்குரல் கேட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இடைச்சி அழுதுகொண்டே வெளியே வந்து நின்றாள். அவள் மூக்கில் ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. ஹரிசரணர் படபடப்புடன், "என்ன ரத்தம் மோக்ஷதா, ஏன் இப்படி? என்ன சமாசாரம்?" என்று கேட்டார்.

அழுகைக் குரலைக் கேட்டு வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். மோக்ஷதா அழுது கொண்டே, "பாலில் தண்ணீர் விட்டிருக்கிறேன் என்று பெரிய பாபு என்னை உதைத்துக் குழியில் தள்ளி விட்டார்!" என்றாள்.

"யார், யாரது! அண்ணாவா! சேச்சே! அவரா

அப்படிச் செய்தார்" என்றார் ஹரிசரணர் ஆச்சர்யத் துடன்.

"யார் பெரியப்பாவா? நீ பொய் சொல்லுகிறாய்!" என்றான் பாரஸ்.

"பெரியவர் கூடப் பெண் பிள்ளையைக் கைதீண்டி அடிப்பாரா? ஏண்டி பால்காரி? நீ என்ன ஏதாவது கனவு கண்டாயா?" என்றாள் ஹரிசரணரின் மனைவி.

அவள் தன்மேலுள்ள மண்ணைக்காட்டி தெய்வத்தின் மேல் ஆணையிட்டுத் தான் சொன்னது யாவும் உண்மை என்று கூறினாள்.

'இஞ்ஜங்ஷன்' ஆர்டரால் சுவர் எழுப்பும் வேலை நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் முற்றத்தில் தோண்டிய பள்ளம் அப்படியேதான் இருந்தது. அதைத் தூர்க்கவே இல்லை. குருசரணர் உதைத்ததால் அவள் அந்தப் பள்ளத்தில் வீழ்ந்தாள். அதனால் காயம் ஏற்பட்டது.

"சரி, வா, என்னுடன். பிராது கொடுக்கலாம்!" என்றார் ஹரிசரணர்.

"நீங்கள் என்ன அசம்பாவிதமாகப் பேசிக்கொண் டிருக்கிறீர்கள்? மைத்துனர் பெண்பிள்ளையைக் கை தீண்டி அடிப்பாரா? அவள் பொய் சொல்கிறாள்!" என்றாள் அவர் மனைவி.

பாரஸ் திகைத்துப் பேசாமல் நின்றிருந்தான்.

"பொய்யாக இருந்தால், தோற்றுப் போகட்டும். ஆனால் அண்ணாவின் வாயிலிருந்து பொய் வராது. அடித் திருந்தால் தண்டனை கிடைக்கட்டுமே!" என்றார் ஹரி சரணர். இந்த யுக்தியைக் கேட்ட மனைவிக்கு நல்ல புத்தி வந்துவிட்டது. "அதுவும் சரிதான். போய்க் கேஸ் கொடுங்கள். நல்ல தண்டனை கிடைக்கும்" என்றாள்.

எதிர்பார்த்தபடியே நடந்தது. அண்ணாவின் வாயி

விருந்து பொய் வரவில்லை. சட்டப்படி அவருக்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்தார்கள்.

இந்தத் தடவை சுபசண்டிக்கு பூஜை நடைபெறவில்லை. ஆனால் மறுநாள் சிறுவர்கள் பலர் ஒன்று கூடிக்கொண்டு குருசரணரின் பின்னால் ஏதேதோ கூச்சல் போட்டுக் கொண்டே சென்றனர். பால்காரியை அடித்ததைப்பற்றி ஒரு பாட்டுக்கூடக் கட்டிவிட்டார்கள்.

இரவு எட்டுமணி இருக்கும். ஹரிசரணரின் வாசலில் எல்லோரும் அமர்ந்திருந்தனர். இப்பொழுதெல்லாம் கிராமத் தலைவர்கள் இங்கேதான் வந்து கூடுவது வழக்கம். திடீரென்று ஒருவன் வந்து ஒரு சந்தோஷச் செய்தியைத் தெரிவித்தான். கொல்லர்கள் விச்வ கர்மா பூஜை உத்ஸவத்தை முன்னிட்டு கல்கத்தாவிலிருந்து இரண்டு கேம்டா நடனக்காரிகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் குருசரணர் அமர்ந்திருக்கிறார். இது தான் செய்தி.

ஹரிசரணர் சிரித்துச் சிரித்து ஓய்ந்து போனார். "பைத்தியமா என்ன? இவன் பேச்சைக் கேட்டீர்களா? அண்ணா கேம்டா கூத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாராம். ஏண்டா அவிநாசா! குடித்துவிட்டு வந்திருக்கிறாயா என்ன?" என்றார்.

அவிநாசன் சத்தியம் செய்து, "என் கண்களால் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்றான்.

ஒரு ஆள் ஓடினான் உண்மையை அறிந்து வர. பத்து நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பிவந்து சொன்னான்:— "விஷயம் முற்றிலும் வாஸ்தவம். கூத்துப் பார்த்துக் கொண்டிருப்பதோடு மட்டுமல்ல. தலைப்பில் முடிந்திருந்த பணத்தையும் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்! இதையும் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்!" என்றான்.

அவ்வளவுதான். ஓரே குதூகலம். ஒருவன், "இம்

மாதிரி ஒருநாள் நடக்கும் என்பது தெரிந்த விஷயம் தானே" என்ருன். மற்ஜெருருவன், "ஒரு காரணமும் இல்லாமல் பெண் பிள்ளையைக் காலால் உதைத்த அன்றே நமக்குத் தெரிந்து விட்டதே" என்ருன். இன்னெருவன் குருசரணரின் மகனின் திருட்டுக் கேஸை எடுத்துக் கூறி, "தந்தையின் நடத்தையை அநுசரித்துத்தான் மகனும் செய்திருக்கிருன்!" என்ருன்.

இன்று பேசாமல் இருந்தவர் ஹரிசரணர் ஒருவர் தான். அவர் இவைகளில் மனம் கொள்ளாதவராய்ப் பேசாமல் உட்கார்ந்திருந்தார். இன்று அவருக்கு அவரை யும் அறியாமல் பால்ய நினைவுகள் தோன்றலாயின. இவர் தாஞ அவருடைய தமையன்? இவரா அந்தக் குருசரண மஜூம்தார்!

இரவு மணி இரண்டு இருக்கும். கூத்து முடிவடைய இன்னும் நேரம் இருந்தது. விசுவகர்ம பூஜை சீக்கிரம் முடிவடைந்து விட்டது. பக்தர்கள் கள் குடித்து, மாமிசம் உண்டு சதிர்வைத்து, தக்ஷயக்ஞரூபத்தில் இதைப் பூர்த்தி செய்துகொண்டிருந்தார்கள். பலர் தங்கள் நினைவு தப்பி இருந்தனர். அவர்களின் மத்தியில் அமர்ந்து சிரித்துக் கொண்டிருந்தார் குருசரணர்.

அப்பொழுது சால்வையினுல் முகம்வரை மூடிக் கொண்டிருந்த ஒருவர் அங்குவந்து சேர்ந்தார். மெள்ள குருசரணர் முதுகில் கையை வைத்தார். அவர் திடுக்கிட்டு, "யார்?" என்று கேட்டார்.

"நான்தான், பாரஸ்! பெரியப்பா! வீட்டுக்கு வாருங்கள்!"

குருசரணர் யாதொரு தடையும் சொல்லவில்லை. "வீட்டுக்கா? சரி, வா!" என்ருர்.

உற்சவப் பந்தலைவிட்டு வெளியே வந்து சாலையில் நின்று அதிக வெளிச்சமில்லாத இடத்தில் பாரஸ் பெரி

யப்பாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினன். கண்கள
அந்தப் பழைய ஜோதி இல்லை. முகத்தில் அந்தக்
இல்லை. பாதாதிகேசம் இவர் ஒரு நடைபிணமா
காட்சியளித்தார். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு
கண்களில் கண்ணீர் பெருகியது. இவ்வளவு நாட்களு
பிறகு, ஜனங்களின்முன் லஜ்ஜையடையக்கூடிய வ
எதுவும் பெரியப்பாவிடம் இல்லை என்பதை
கண்கள் கண்டன. இந்த உணர்ச்சியற்ற உடலை
பெரியப்பா எங்கோ சென்றுவிட்டார் என்பது அ
குப் புலப்பட்டது. அவன், "பெரியப்பா,
காசிக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்
டீர்களே, போகிறீர்களா?" என்று கேட்டான்.

குருசரணர் உயிரற்ற சடலத்தைப் போல், "
றேன், பாரஸ். ஆனல் என்னை யார் அழைத்துச்
வார்கள்?" என்றார்.

"நான் அழைத்துக் கொண்டு போகிறேன்."

"அப்படியானல் வா, வீட்டுக்குச் சென்று சாமான்
களை எடுத்துக்கொண்டு புறப்படுவோம்!"

"இல்லை பெரியப்பா! அந்த வீட்டுக்கு இனிப் போக
வேண்டாம். அங்கிருக்கும் சாமான் ஒன்றுமே நமக்கு
இனி வேண்டாம்!"

குருசரணருக்குச் சட்டென்று சுய உணர்ச்சி வ
கணநேரம் மௌனமாக இருந்தார். பிறகு, "ஒ
வேண்டாமா? அந்த வீட்டிலுள்ளது நமக்கு ஒன்றும்
வேண்டாமா?" என்றார்.

பாரஸ் தன் கண்களைத் துடைத்துக் கொண்டே,
"ஆமாம் பெரியப்பா! ஒன்றும் வேண்டாம். அவைகளை
எடுத்துக்கொள்ள அங்கு வேண்டியபேர் இருக்கிற
வாருங்கள்!" என்றான்.

"சரி, வா!" என்று கூறிக் குருசரணர் பாரஸின்
கையைப் பற்றிக் கொண்டார். இருள் மண்டி ஜனசந்தடி
யற்றுக்கிடந்த சாலை வழியே இருவரும் ரயில்வே
ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

---

காமராசர் பல்கலைக்க